கலைக்கதிர்

ஜூன்-1965

கலைக்கதிர்

எம் புதிய வெளியீடுகள்:

பிராங்க்கு லாய்டு ரைட்

கட்டடக் கலையில் பல புதுமைகளை ஏற்படுத்திய ஒரு பேரறிஞரின் வரலாறு

விலை ரூ. 3-00

சக்கரங்கள் சுழல்வதேன்?

ஆசிரியர்:
திரு. எட்வர்ட் ஜி. ஹ்யூயீ

தமிழாக்கம்:
டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி.

பௌதீகத்தின் அடிப்படை விதிகளை இனிய, எளிய நடையில் விளக்கும் ஒரு சிறந்த நூல்.

விலை ரூ. 3-00

தந்தி: "குமரன்"

டெலிபோன்: மில் : 3206
ஆபீஸ் : 2033

ஸ்ரீ குமரன் மில்ஸ் லிமிடெட்,

பீளமேடு P. O., கோயமுத்தூர்-4.

✱

இயங்கும் கதிர்கள் 24,924

✱

நாங்கள் தயாரிப்பவை:-

Nf . 34 (40.2^s) இந்தியன்
Nf . 38 (44.9^s) ,,
Nf . 42 (49.6^s) ,,
Nf . 50 (59.1^s) ,,
Nf . 52 (61.4^s) எல்பாசோ

டை நூல்கள் கோன்களிலும் கிடைக்கும்

✱

MANAGING AGENTS :

Messrs. P. S. G. VENKATASWAMY NAIDU & Co.

Sri Ranga Vilas Ginning & Oil Mills,

POST BOX No. 151

Grams: "OILMILLS" **COIMBATORE** Phone: 4151

*

MANUFACTURERS OF:

GROUNDNUT OIL & CAKE

COTTON & COTTON SEEDS

COTTON SEED OIL AND COTTON SEED CAKE

*

SUPPLIERS:

IN INDIA AND ABROAD

EDIBLE QUALITY GROUNDNUT MEAL IS OUR SPECIALITY.

Edible Groundnut Meal is being produced in one of the plants provided by "UNICEF"



உலகம் போற்றும் உத்தமர்

இவ்வுலகப் பேரொளியாய்த் திகழ்ந்த நேரு 1964 மே திங்கள் 27-ஆம் நாளன்று மறைந்தார். அப்பெருமான் மறைந்து இப்போது ஓராண்டு ஆகிவிட்டது. ஆனால் நம் நாடு உயரவும் உலகம் ஒன்றுபடவும் அவர் வகுத்த அரும்பெருங் கொள்கைகள் இவ்வுலகினின்றும் என்றும் மறையா. அவைகள் நிலைத்து நின்று இந்நிலவுலகை நெறிப்படுத்தி உய்விக்கும் என்பதில் ஐயமில்லை.

உலக நாடுகள் ஒவ்வொன்றும் அதனதன் அமைப்புகளுக்கேற்ப வளர்தல் வேண்டும். ஒரு நாடு மற்றொரு நாட்டின் செயல்களில் தலையிடுதல் கூடாது. இவைகள் அவருடைய கொள்கைகளில் முக்கியமானவை.

உலக நாடுகள் ஒன்றுக் கெதிராக மற்றொன்று கூட்டுச் சேர்வதால் தான் உலகப் போர்கள் உண்டாகின்றன என்றும், இதைத் தவிர்க்கச் சிறந்த வழி கூட்டுச் சேராக் கொள்கையே யாகும் என்றும் அவர் வற்புறுத்தினார். நம் நாடு அக்கொள்கையைப் பின்பற்றி ஒழுகுமாறு செய்து, அதன் மதிப்பை அவர் உயர்த்தினார்.

உலக நாடுகள் அனைத்தும் வாழவும் வளரவும் நேரு பெருமான் வகுத்த தனிப்பெருங் கொள்கைகளை நினைவிலிருத்தி, அவைகளைப் போற்றிப் பின்பற்றுவதே அவருக்கு நாம் ஆற்றும் நன்றியாகும்.

கலைக்கதிர்

ஆசிரியர்: ஜி.ஆர். தாமோதரன்

மலர் 17 ஜூன் - 1965 இதழ் 6

வெப்ப மின்சாரம் (அட்டைப் படம்) — — 2

—திரு. ஆர். இராமசாமி

உள-உடல் கோளாறுகளும் ஆளுமை இயல்புகளும் — — 7

—டாக்டர். தா. ஏ. சண்முகம்.

பழைமையே புதுமை — — 11

சாணத்திலிருந்து எரிவாயு — — 13

—திரு. இரா. ஜெயகோபால்

இக்காலத் தமிழ்-மக்கள் தமிழும் இலக்கியத் தமிழும் — — 17

—திரு. முத்துச்சண்முகம்

பெண்மைத் தியாகம் (சிறு கதை) — — 25

—புலவர் திரு. ரோகிணி

பூமி அன்னை — — 33

— திரு. ப. குணசேகர்.

சிங்கள முகமூடிகள் — — 41

—திரு. ந. வேல்முருகு

தொழில் துணுக்குகள் — — 49

— திரு. அ. இராம்கோபால்

இளம்பிள்ளை வாதம் — — 52

—திரு. ஆர். போற்றிவேல்

காமக்கண்ணி [நாடகம்] — — 56

— ''செல்வன்''

நூலரங்கு — — 63

பாரத பாகிஸ்தானிய எல்லைப் பூசல் — — 65

— ''கமல்''

உலக வானிலை அறிக்கை — — 70

இது செய்தி — — 72

கலைக்கதிர் இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு, அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

விலை 66 காசு

வெப்ப மின்சாரம்

திரு. ஆர். இராமசாமி. எம். எஸ்சி.

வேறுபட்ட இரு உலோகக் கம்பிகளின் முனைகளை ஒன்றாக இணைத்து ஒரு முனையை வெப்பப்படுத்தி மற்றொரு முனையைக் குளிரச் செய்தால் கம்பிகளினூடே இலேசான மின்னோட்டம் ஏற்படுவதைக் காணலாம். இந்த மின்னோட்டத்திற்குக் காரணம் இரண்டு கம்பிகளும் வெவ்வேறான மின்சார இயல்புகளைப் பெற்றிருப்பதேயாகும். இம் முறையில் இயற்றப்படும் மின்சாரம் வெப்ப மின்சாரம் (Thermoelectricity) எனப்படும்.

உலோகங்களில், அரைக் கடத்திகள் (Semi conductors) எனப்படும் ஒரு வகை உலோகங்கள் உண்டு. இவைகள் செம்பு போன்ற சாதாரண உலோகங்களைப் போல மின்சாரத்தை அவ்வளவு எளிதாகக் கடத்தா. ஆனால் வெப்ப மின்சார உற்பத்தியில் சாதாரண உலோகங்களை விட இவைகள் மிகவும் சிறந்தவையாகும். அரைக் கடத்திகள் இருவகைப்படும். அவைகள் n-வகை (n-type) அரைக் கடத்தி எனவும் p-வகை (p-type) அரைக் கடத்தி





N-வகை அரைக் கடத்தி

P-வகை அரைக் கடத்தி



எனவும் வழங்கப்படுகின்றன. இந்த இருவகையான அரைக் கடத்திகளையும் ஒன்ருக இணைத்து அவ்விணைப்புப் பகுதியை வெப்பப்படுத்துவதாகக் கொள்வோம். அப்பொழுது n-வகை அரைக் கடத்தியில் எதிர் மின்சாரமும் (negative charge) p-வகை அரைக் கடத்தியில் நேர் மின்சாரமும் (positive charge) வெப்பமுறும் பகுதியிலிருந்து விலகி ஓடுகின்றன. இவ் ஓட்டத்திற்குத் தேவையான ஆற்றல் வெப்பத்திலிருந்து கிடைக்கிறது. ஒரு திசையில் நேர் மின்சாரம் ஓடுவது அதற்கு எதிர்த்திசையில் எதிர் மின்சாரம் ஓடுவதற்குச் சமம் ஆகும். அதனுல், அரைக் கடத்திகளில் நேர் மின்சாரமும் எதிர் மின்சாரமும் எதிர்த் திசைகளில் ஓடும்பொழுது நாம் மின்னேட்டத்தைப் பெறுகிறேம். இதுவே அரைக்கடத்திகளில் உற்பத்தியாகும் வெப்ப மின்சாரத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.

இந்த வெப்ப மின் இயற்றி (Thermoelectric generator) களில் இயங்கும் பகுதிகள் கிடையா. மேலும், இது மிக எளிமையான கருவியாகும். ஆனுல் இக்கருவியின் திறன் (efficiency) மிகவும் குறைவே. அதாவது இவ்வகை மின் இயற்றிகளின் திறன் ஐந்து சதவீதமே ஆகும். இவைகளில் சில முன்னேற்றங்களைப் புகுத்துவதன் மூலம் திறனைச் சுமார் பத்து சதவீதமாக உயர்த்த முடியும் என நம்பப்படுகிறது.

தற்காலத்தில், வானவெளியில் பூமியைச் சுற்றிவரும் செயற்கைக் கோள்களில் இந்த வெப்ப மின் இயற்றி பயன்படுகிறது. கடல் மிதவைகளிலும் (Sea buoys) இது பெரிதும் பயன்படக்கூடும். இந்த இதழின் அட்டையை அலங்கரிப்பது ஒரு கடல் மிதவை ஆகும். கப்பல்களுக்கு வழிகாட்ட நடுக்கடலில் ஒரு



செயற்கைச் சந்திரன்களில் வெப்ப மின் இயற்றி பயன்படுகிறது.

படுவதாகக் கொள்வோம். அங்குப் பிரகாசமான ஒரு மின் விளக்கை அமைப்பதற்குத், தரையிலிருந்து மின்சாரத்தை எடுத்துச் செல்வது கடினமாகும். அங்கேயே தனியான ஒரு மின் இயற்றியை (dynamo) அமைப்பதென்ருல் அதைக் கண்காணிக்க ஆட்கள் தேவைப்படுவர். மனித நடமாட்டம் அற்ற நடுக்கடலில் வாழ்நாளைக் கழிக்க யார் விரும்புவர்? அதனுல் இத்தகைய கலங்கரை விளக்கங்களுக்கு வெப்ப மின்சாரம் பெரிதும் பயன்படும்.

வானிலை ஆய்வு நிலையங்கள் நடுக்கடலிலும், துருவப் பகுதிகளிலும், பாலைவனங்களிலும், மலைப்பிரதேசங்களிலும் அமைக்கப்படுகின்றன. இவ்விடங்கள் மனித வாழ்க்கைக்கு ஏற்றவை அல்ல. அதனுல் இந்நிலையங்கள் அனைத்தும் தாமாக இயங்குவதற்கும், நெடு நாட்கள் வரை பழுதுபடாமல் இருப்பதற்கும் வெப்ப மின்சாரத்தைப் பயன்படுத்த முடியும்.

இவைகள் அனைத்திற்கும் தேவைப்படும் வெப்பமின்சாரம் அரைக்கடத்திகளால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இருவகையான அரைக்கடத்திகளின் முனைகளை ஒன்ருேடொன்று இணைத்து ஒரு முனையை வெப்பப்படுத்தும் பொழுது நமக்கு மின்சாரம் கிடைக்கிறது. இதற்குத் தேவையான வெப்பத்தை எப்படிக் கொடுப்பது? சில கதிரியக்க ஐசடோப்புகளில் (Radioactive isotopes) இருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்கள் மிகுந்த வெப்பம் உடையனவாக இருக்கின்றன. ஐசடோப்புகளில் சில, நூற்றுக் கணக்கான ஆண்டுகள் வரையில் குறைவற்ற கதிர்வீச்சுக்களைத் தரும் தன்மையன. இவைகளின் உதவியால் வெப்ப மின் இயற்றிகளில் வெப்பம் உண்டாக்கப்படுகிறது. அரைக் கடத்திகளைத் திறம்படப் பொருத்தி அமைத்து அவற்றின் ஒரு கோடியைத் தொடர்ந்து வெப்பப்படுத்தும் வண்ணம் கதிரியக்க ஐசடோப்புகளை அமைத்து விட்டால் தொடர்ச்சியாகப் பல நூற்ருண்டுகள் வரையில் கூட வெப்ப மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கும். அரைக் கடத்திகள் தேய்வுற்று அழிந்து போகும் நிலையில் அவற்றைப் புதுப்பிப்பதைத் தவிர வேறொன்றையும் நாம் கவனிக்க வேண்டியதில்லை.

வானிலை ஆய்வுக் கருவிகளில் வெப்ப மின் இயற்றி பயன்படுகிறது.

கதிரியக்க ஐசடோப்புகளினுல் ஏற்படும் வெப்பநிலை சாதாரணமாகச் சுமார் 500 பாகை சென்டிகிரேட் வரையில் உள்ளது. டிரான்சிஸ்டர்களில் பெரும்பாலும் சிலிக்கன், ஜெர்மேனியம் ஆகிய அரைக் கடத்திகளே பயன்படுகின்றன. ஆனுல், இவைகள் 500 பாகை சென்டிகிரேட் வெப்பநிலையில் சிதைந்து விடுகின்றன. அதனுல், உயர்ந்த வெப்ப நிலைகளிலும் நிலைத்து நிற்கக் கூடிய இயல்புடைய அரைக்கடத்திகளைத் தேர்ந்தெடுப்பது அவசியமாகும். இத்தகைய இயல்போடு ஈய டெல்லூரைட் (Lead telluride) என்னும் n-வகை அரைக்கடத்தியும், ஜெர்மேனியம் டெல்லூரைட் (Germanium telluride) என்னும் p-வகை அரைக்கடத்தியும் தற்காலத்தில் பயன்படுகின்றன.

மிக உயர்ந்த வெப்ப நிலைகளில் நிலைத்திருக்கக்கூடிய அரைக்கடத்திகளை உற்பத்தி செய்ய முடியுமானுல் மிக அதிக அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அப்பொழுது தற்காலத்தில் பின்பற்றப்படும் மின்சார உற்பத்தி முறையைக் காட்டிலும் இந்த வெப்ப மின்சார உற்பத்தி முறை மிகவும் சிக்கனமானதாக இருக்கும். நிலக்கரி, எண்ணெய் முதலிய எரிபொருள்களை எரிப்பதன் மூலம் சுமார் 2000 பாகை சென்டிகிரேட் வெப்பநிலையைப் பெற முடியும். அணு உலைகளிலும் மிக உயர்ந்த வெப்பநிலை கிடைக்கிறது. அதனுல், பல வெப்ப மின் இயற்றிகளைத் தொடர்ச்சியாக இணைத்து அவற்றின் வெப்ப இணைப்புக்களை (Hot junction) உயர்ந்த வெப்ப நிலைகளுக்கு வெப்பப்படுத்தினுல் மிகுந்த மின்சாரம் கிடைக்கும்.

ஆனுல், உயர்ந்த வெப்பநிலையைத் தாங்கக் கூடிய அரைக் கடத்திகள் நமக்குக் கிடைப்பதில்லை. மேலும் அரைக் கடத்திகளின் மின் தடை (Resistance) சாதாரண உலோகங்களின் மின் தடையை விட அதிகமாக உள்ளது.

அதனுல் வெப்பமின் இயற்றியில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் பெரும்பகுதி இத்தடையை ஈடு செய்வதிலேயே செலவாகிவிடுகிறது. சாதாரண உலோகங்களின் மின் தடை அரைக்கடத்திகளின் மின் தடையைக் காட்டிலும் மிகவும் குறைவே. ஆனுலும், அரைக் கடத்திகள் சாதாரண உலோகங்களைக் காட்டிலும் இரு வகைகளில் மேலானவை. அதாவது, அரைக் கடத்திகளில் உற்பத்தி



அரைக்கடத்தி வெப்ப மின் இயற்றியின் அமைப்பு

யாகும் மின்சாரத்தின் அளவு சாதாரண உலோகங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவைக் காட்டிலும் அதிகமாகும். மேலும், சாதாரண உலோகங்களில் வெப்ப முனையிலிருந்து குளிர் முனைக்கு எளிதாக வெப்பம் கடத்தப்பட்டு விடுகிறது. இது வெப்ப மின் உற்பத்தியின் அளவைக் குறைத்து விடுகிறது. ஆனால், அரைக் கடத்திகள் அவ்வளவு வெப்பத்தைக் கடத்துவதில்லை.

வெப்பமின் இயற்றி என்பது வெப்பத்தைப் பொறுத்த வரையில் அரிதில் கடத்தியாகவும், மின்னோட்டத்தைப் பொறுத்த வரையில் எளிதில் கடத்தியாகவும் இருக்க வேண்டும். அரைக் கடத்திகள் இந்த இரு இயல்புகளையும் முழுமையாகப் பெற்றிராவிடினும் மற்ற உலோகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது வெப்பமின் உற்பத்திக்கு இவைகளே சிறந்தனவாகத் தோன்றுகின்றன. ●

எமக் குழந்தை

ஒரு முன் யோசனையுள்ள டாக்டரும், அவருடைய வக்கீல் மனைவியும் தங்கள் குழந்தையின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும் பொருட்டு, ஓர் அறைக்குள் 'ஸ்டதஸ்கோப்'பையும், சட்ட புத்தகத்தையும், ஒரு முக்கோண வடிவத்தையும், ஒரு வெள்ளிக் காசையும் மூலைக்கு ஒன்றாக வைத்தார்கள். நடுவே அந்தக் குழந்தையையும் உட்கார வைத்தார்கள்.

அக் குழந்தை எந்தப் பொருளை எடுக்கிறதோ, அதாவது 'ஸ்டெதஸ்கோப்'பை எடுத்தால் டாக்டருக்கென்றும், சட்ட புத்தகத்தை எடுத்தால் வக்கீலுக்கெனவும், முக்கோணத்தை எடுத்தால் இன்ஜினீயர் படிப்புக்கென்றும், வெள்ளிக காசு வியாபாரத்திற்கெனவும், படிக்க வைப்பதெனத் தீர்மானித்து, சில நிமிடங்கள் அறையின் கதவை மூடினார்கள்.

நிமிடங்கள் கழிந்தன.. கதவைத் திறந்து பார்த்தபோது ,அவர்களிருவருக்கும் விழி பிதுங்கியது. தலை சுற்றியது! காரணம், அக் குழந்தை சட்ட புத்தகத்தின்மேல் அமர்ந்து தலையில் முக்கோண வடிவத்தை வைத்துக்கொண்டு, ஸ்டெதஸ் கோப்பை கழுத்தில் போட்டுக்கொண்டு, வெள்ளிக் காசை வாயில் வைத்துக்கொண்டு அமைதியாய் உட்கார்ந்து கொண்டிருந்தது!

உள-உடல் கோளாறுகளைப் பற்றிக் 'கலைக்கதிர்' முன் இதழ்களில் விவரித்துள்ளோம். இக்கட்டுரையில் அந்தந்த உள-உடல் கோளாறுகளுக்கான ஆளுமை இயல்புகளை எடுத்துக்காட்டுவோம்.

உடல் கோளாறுகளுக்கு அடிப்படையான காரணங்கள் உள்ளத்தில் எழுவன. இத்துறையில் சமீப காலத்தில்தான் பெருவாரியான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. சாதாரண வாழ்க்கையிலேயே உள்ளம் உடலைப் பாதிப்பது போன்று, உடல் உள்ளத்தைப் பாதிப்பதில்லை என முடிவு கண்டுள்ளனர். மிகவும் சினமடைந்திருக்கும் ஒருவனை நோக்குவோம். அவன் முகத்திலே அதிக இரத்த ஓட்டம் இருப்பதினால் சிவந்து காணப்படுகிறது. அவனுடைய வயிற்றிலுள்ள சீரண உறுப்புக்களுக்கும் இரத்த ஓட்டம் அதிகமாகிறது. அவனுடைய கை கால்கள் எல்லாம் விறைத்துக் கொள்ளுகின்றன. அவனுடைய உடலிலுள்ள இரத்தக் குழாய்களும் விறைத்துக் காணப்படுகின்றன. அவ்வாறே ஒருவனிடத்துத் திடீரென அச்சம் ஏற்பட்டால் அவனது முகத்திலே இரத்த ஓட்டம் குறைகிறது. அதனால் அது வெளுத்துக் காணப்படுகிறது. அதே நிலை வயிற்றிலுள்ள உறுப்புக்களிலும் ஏற்படுகிறது. அதனால் சீரணம் தடைப்படுகிறது.

ஆளுமை இயல்புகளும்

எம்.ஏ., எம்.லிட்,
பி.எச்.டி.

மேலே கூறியுள்ள சான்றுகளிலிருந்து உள்ளத்தைச் சார்ந்து எழுவதான மெய்ப்பாடு காரணமாக உடலில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஏதோ காரணமாக எப்போதும் சினம் அச்சம் போன்ற மெய்ப்பாடு வயப்பட்டிருப்பவரிடம் எப்போதும் உடற் கோளாறுகள் தொடர்ந்து காணப்படுகின்றன. இந்த உடற் கோளாறுகள் காரணமாக அவர்கள் நடத்தையும் அமைகிறது. இவ்வாறன உள-உடல் கோளாறுகளில் முக்கியமானவை இரத்த அழுத்தம் (blood pressure) வயிற்றுப் புண் (stomach ulcer), தலைவலி (head ache) இருதயக் கோளாறு (heart trouble) போன்றவைகள் ஆகும்.

க.ப. தன் முயற்சியினால் வியாபாரத் துறையில் வெற்றிகண்டு செல்வந்தனானவன். அவரது வயது ஐம்பத்து நான்கு. அவரோடு கூட்டாக உள்ளவர்கள் மூவர். தன் வியாபாரத்தை முன்னுக்குக் கொண்டு வர உழைத்தவர்களில் முக்கியமானவர்கள். ஆனால் அவ்வப்போது இவர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது உண்டு. ஆனால் இந்தச் சமயங்களில் க. ப. உள்ளம் முறிவடைந்து குழப்பமடைந்திருந்த போதிலும் வெளிக்கு அதைக் காட்டிக் கொள்ளாமல், அவர்கள் விரும்பத் தக்க முறையில் நடந்து கொண்டு வந்தார். இவ்வாறாக பல ஆண்டுகள் அவர் நடந்து வந்தார். அவர்களது கூட்டுக் கலையவில்லை; வியாபாரத்தில் வெற்றி, வெளி உலகத்தில் புகழ். ஆனால் மனமுறிவு ஏற்பட்ட நாட்கள் எல்லாம், அவரது உள்ளம் குமுறிக் கொண்டு இருந்தது. இரவு வெகுநேரம் வரை தூங்குவது கிடையாது. நடந்த நிகழ்ச்சியைத் திருப்பித் திருப்பி எண்ணிப் பார்த்துக்கொண்டே இருப்பார். சமீப காலத்திலே அவருக்கு அடிக்கடி மயக்கம் ஏற்பட ஆரம்பித்தது. காதில் ஏதோ ஓசை எழ ஆரம்பித்தது. அவ்வப்போது தலைவலியும் உண்டாயிற்று. மருத்துவர் அவரைச் சோதித்தபோது அவருக்கு இரத்த அழுத்தம் இருப்பதாகக் கண்டுபிடித்தார். இதற்கு அடிப்படையான காரணங்களை ஆராய்ந்தபோது சில உண்மைகள் வெளிப்பட்டன. அவர் சிறு பையனாக இருக்கும்போதே, பணிந்துபோகும் இயல்புடையவராய் இருந்தார். இதற்குக் காரணம், அவரது பெற்றோர்கள். அவர்கள் அவரை எப்போதும் 'அதிகாரம்' (bossing) செய்து கொண்டே இருந்தார்கள். அவர்களை எதிர்க்க இயலாத காரணத்தினால், அவர் அச்சிறு வயதிலிருந்தே வெளிப்படும் மெய்ப்பாட்டைக் கட்டுப்படுத்தி வந்தார். இந்த இயல்பு அவரது முதிர்ச்சிப் பருவத்திலும் இருந்தது.

பொதுவாக 'இரத்த அழுத்தக்' கோளாறு உடையவர்கள், பிறர் தம்மை 'அதிகாரம்' செய்வதை வெறுப்பவர்களாவர். வெளித் தோற்றத்திற்குச் 'சாதுவாகவும்' பெருந்தன்மையோடும் இருந்தபோதிலும், இந்த இயல்புகளுக்காக அவர் தம் உடலையே வாட்டிக் கொள்ளுகிறார்கள் எனலாம். ஒரு சிலர் தங்கள் உள்ளே எழும் வெறுப்பைத் தங்கள் நகங்களைக் கடித்தோ, உட்காரும்

போதும், நடக்கும்போதும் விறைப்பாக இருந்தோ வெளிப்படுத்துகிருர்கள். மற்றவர் இவ்வகையிலும் வெளிப்படுத்த இயலாதவர்கள் ஆகிருர்கள்.

இரத்த அழுத்தக் கோளாறு உடையவர்கள் பெரும்பாலோர், அதிகம் உழைப்பவர்கள் ஆவர். ஆனல் இந்த உழைப்பு அக்கோளாறுக்குக் காரணமாவது ஆகும். உண்மையில், இவ்வகையினரது கடும் உழைப்புக் காரணமே அவர்களிடம் இருக்கும் வெளிப்படுத்த இயலாது உள்ள 'எதிர்ப்பு'ப் போக்காகும் (resentment). கடும் உழைப்பை ஒரு அறிகுறியாக (symptom) வே கொள்ளலாம்.

ஓர் ஆராய்ச்சியில் சீன நாட்டினரையும், அமெரிக்க நாட்டினரையும் ஒத்திட்டுப் பார்த்த போது, சீன நாட்டில் இரத்த அழுத்தக்கோளாறு உடையவர் மிகமிகக் குறைவு. என்றும், அமெரிக்க மக்களிடத்து மிகவும் அதிகம் என்றும் கண்டனர். இதற்குத் தட்ப வெப்ப நிலை தான் காரணம் என முதலில் முடிவு கட்டினர். பிறகு சீன நாட்டிலே பிறந்து வளர்ந்த அமெரிக்கர்களிடம் இந்தக் கோளாறு அதிகம் காணப்பட்டதை அறிந்து, தீவிர ஆராய்ச்சி செய்தபோது, மற்றும் பல உண்மைகளில் மிகவும் முக்கியமாகக் காணப்பட்டது, சீன மக்கள் தங்கள் குழந்தைகளை 'குழந்தைகளாக' நடக்கவிட்டு வருகிருர்கள் என்பதாகும். அவர்களது வளர்ச்சிமுறையை எக்காரணத்தைக் கொண்டும் துரிதப்படுத்துவதில்லை. ஆனல் அமெரிக்க நாட்டிலே பெற்ருேர்கள் தங்கள்

மனைவி: என்னங்க இது; மணி பத்தாகப் போகிறது இன்னும் உங்க யோகாசனம் முடியலே? ஆபீசுக்கு எப்பப் போறது?

கணவன்: காலையிலே ஆறுமணிக்கு கழுத்து மேலே காலைப் போட்டவன் இன்னமும் எடுக்க முடியாமல் திண்டாடறேன்; கொஞ்சம் காலை எடுத்து விடேன்.

குழந்தைகளின் வளர்ச்சி முறையைத் துரிதப்படுத்துகிருர்கள். குழந்தைகளை முதிர்ச்சிப் பருவத்தினர் போல் நடந்து கொள்ளவும், பிறரோடு பழகவும் பயிற்சி அளிக்கிருர்கள். அவர்கள் 'எதிர்பார்க்கும்' அளவு குழந்தைகள் பலர் வருவதில்லை. அதன் காரணமாக அவர்களைக் கண்டித்தும், தண்டித்தும், அச்சமுறுத்தியும் 'நற் பழக்கங்களை' மேற்கொள்ளுமாறு செய்கிருர்கள். இயற்கைப் போக்குக்குத் தடையாக உள்ள 'பெரியோர்களின் மீது குழந்தைகள் அருவருப்பும் ஆத்திரம் அடைகிருர்கள். ஆனல் இதை வெளியிட இயலாது கட்டுப்படுத்த, அது பிற்காலத்தில் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கிறது.

இரத்த அழுத்தக் கோளாறுக்கு மெய்ப்பாடு காரணமாக

கட்சிக்காரர்: வக்கீல் சார்! என்னுடைய கேஸ் ஜெயம் அடைஞ்சிடுச்சு! உங்களுக்கு என் நன்றியை எப்படித் தெரிவிக்கிறதுன்னே தெரியலே!

வக்கீல்: 'பணம்'னு ஒண்ணு இருக்கும் போது நன்றியை எப்படித் தெரிவிக்கிறதுன்னு திண்டாட வேண்டிய அவசியமே இல்லையே சார்!

இருந்தபோதிலும், மூத்திரப்பைக் கோளாறு (kidney trouble), வயோதிகம் காரணமாக இரத்தக் குழாயிலுள்ள துவாரம் சிறிதாவது போன்றவைகள் காரணமாகலாம்.

வயிற்றுப்புண்

தற்கால நாகரிக வாழ்க்கையில் வயிற்றுப் புண்ணில் அவதியுறுபவர் பலர். இதில் அவதியுறுபவர்களில் பெண்களைவிட ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகும். வயிற்றுப் புண்ணுக்கும் அடிப்படைக் காரணம் 'எதிர்ப்பு' ஆகும். இந்த எதிர்ப்பு (resentment) வேறுவகையானது. இது ஒருவன் வெற்றிபெறுவதற்குச் சமூக மக்கள், தடையாக இருப்பது காரணமாக ஏற்படுவதாகும். வயிற்றுப்புண் உடையவர்களது குழந்தை பருவத்தை ஆராய்ந்தால் அவர்கள் தங்கள் குடும்பச் சூழ்நிலையில் வேண்டிய அளவுக்கும் எதிர்பார்த்த அளவுக்கும் 'அன்பும் ஆதரவும்' பெறுமை முக்கியமாக உள்ளது. இதன் காரணமாக அவர்களிடம் காப்பற்ற நிலையும் (insecurity) எச் செயலைத் தொடங்கினால் அதில் வெற்றி அடைவோம் என்ற நம்பிக்கை இன்மையும் (defeatism) உண்டாகிறது. ஒருவன் வாழும் உலகம் போட்டியுடையது (competetive). அதனால், வெற்றியும் தோல்வியும் இயற்கை. ஆனால் இவ்வாறான ஆளுமை உடையவர்கள், தாங்கள் வெற்றி அடையும் போது, அதற்குத் தாங்கள் தகுதி உடையவர்கள் என்றும், தோல்வியுறும்போது சமூகத்தில் உள்ள மற்றவர்கள் 'முட்டாக' இருந்தார்கள் என்றும் கொள்ளுகிறார்கள். அடைப்பட்டிருக்கும் இந்த வெறுப்பே, நாளடைவில் வயிற்றுப் புண்ணை உண்டாக்குகிறது. இப் புண்ணானது நாளடைவில், அவன் எடுக்கும் செயல்களில் வெற்றி பெற்றால் காய்ந்து கிடக்கிறது. ஆனால் தோல்வி அடைந்தாலோ, அவை புண்ணாகிறது. அலுவலகங்களில் வேலை செய்பவர் திறமையுடன் செயலாற்றினால் அவர்கள் அதிகாரிகளிடமிருந்து 'புகழ்ச்சி' பெறுவது, நமது சமூகத்தில் கிடையாது. ஆனால் அவர்கள் தவறுகள் இழைத்தாலோ தண்டனைகளோ 'திட்டோ' எளிதில் கிடைக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் செயலாற்றும் ஒருவன் வயிற்றுப் புண் உடையவனாயிருந்தால், அவன் வாழ்நாள் முழுதும் அக்கோளாறினாலே அவதியுறுவது நிச்சயம்.

1. ஆதி மனிதன், தான் வேட்டையாடிய உணவைப் பச்சையாகவே தின்றான்.

2. பிறகு சூரிய வெப்பத்தில் வாட்டித் தின்றபோது, அதில் ஒரு தனிச் சுவையைக் கண்டான்.

3. சிக்கி முக்கிக் கல்லைத் தட்டிய போது தீப்பொறி உண்டாவதைக் கண்டான்.

4. தீயுண்டாக்கத் தெரிந்த பின்னர், குச்சிகளைப் போட்டு எரித்துச் சமைத்தான்.

5. இப்படியே காட்டிலுள்ள கட்டைகள் குச்சிகளெல்லாம், எரிந்து தீர்ந்தன.

6. காட்டிலுள்ள மரங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பலியாயின.

7. நூற்றாண்டுகள் கழிந்தன. காடெல்லாம் அழிந்ததால் மரம் கிடைப்பது அரிதாயிற்று.

-கோ-

8. பயப்படுவானா மனிதன்? நிலத்தைத் தோண்டி நிலக்கரியைக் கண்டு பிடித்தான்.



9. கரியோடு, மண்ணெண்ணெயும் மக்களுக்குக் கிடைக்கத் தொடங்கின.



10. பிறகு எங்குப் பார்த்தாலும் பலவகையான 'ஸ்டவ்'வுகளின் பேரிரைச்சல்!



11. மண்ணெண்ணெய்க் கிணறுகளென்ன அமுத சுரபிகளா, வற்றாமல் இருப்பதற்கு?

12. உடனே வந்தது மின்சார அடுப்பு.

13. மின்சாரம் வேறு தடையின்றிக் கிடைப்பதில்லை, என்ன செய்வது?

14. விஞ்ஞானிகள் ஒன்றுகூடி விவாதித்தனர். எல்லா எரிபொருள்களும் தீர்ந்தன.

15. ஆ...! அருமையான திட்டம். எளிது. எங்கும் கிடைக்கும். ஆகா, அந்தத் திட்டம்தான் என்ன?

16. அந்த ஆதிமனிதன் கையாண்ட அதே வழிதான்! பெயர் மட்டும் தான் புதியது. 'சூரிய அடுப்பு'

சாணத்திலிருந்து எரிவாயு

-தொ- திரு. இரா. ஜெயகோபால், பி.எஸ்சி. (ஆனர்சு), எம்.ஏ.



நமது நாட்டில் கிடைக்கும் மொத்த சாணத்தில் 50 சதவிகிதம் விராட்டி (Cow Dung Cakes) எனப்படும் சாண அடையாக எரிக்கப்பட்டு விடுகின்றது. இவ்வாறு சாணத்தை அடையாகத் தட்டி எரிக்கப்படும் மூடப் பழக்கம் கிழக்கு ஆசியாவில் மட்டிலும் காணப்படுகின்றது. கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குக் கரி (Charcoal) மற்றும் விறகு (Fire wood) இவைகளைக் காட்டிலும் இலகுவில் கிடைக்கக் கூடிய எரி பொருளாகச் சாணம் இருப்பதினால்தான் அவர்கள் சாணத்தை எரித்து விடுகிறார்கள். இவ்வாறு எரிப்பதினால், வயல்களுக்குப் போடத் தகுந்த தொழு உரம் சுமார் 200 மில்லியன் டன் வீணாகி விடுகின்றது என்று புள்ளி விவர வல்லுநர் மதிப்பிட்டுள்ளார்கள். உணவு பற்றாக்குறையும், பஞ்சமும் நமது நாட்டின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் நம்மிடத்தே உள்ள சாணத்தை உரமாக்கி உணவுப் பற்றாக்குறையைப் போக்கப் பயன்படுத்தாமல், வீணாக எரிப்பது வேதனை தரும் செயலாகும். இந்நிலையைத் தவிர்க்கவும், மக்கள் எரிபொருள் பற்றாக்குறையினால், மரங்களை வெட்டி வனங்களை அழிக்காமல் இருக்கவும், இந்திய விவசாய ஆய்வுக் கூடத்தார் (Indian Agricultural Research Institute) சாணத்தில் இருந்து ஓர் எரி வாயு (Cow Dung Gas) உற்பத்தி செய்து, மீண்டும் அதே சாணத்தை உரமாகப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.

இதன் விளைவாக 1954-ம் ஆண்டு அவ் ஆய்வுக் கூடத்தார் ''சாணத்தில் இருந்து எரி வாயு தயாரிக்கும் சாதனம்'' (Cow Dung Gas Plant) ஒன்றை நிறுவினார்கள். அது விவசாயிகளினால், மிக எளிதான முறையில் கையாளப்படக் கூடியதாகவும், சிக்கனமாக அமைத்துக் கொள்ளக் கூடியதாகவும், சாதாரண குடும்பத்தினருக்குத் தேவையான எரி வாயுவைத் தந்துதவக் கூடியதாகவும் இருந்தது. எனவே இதை ''கிராமலக்குமி'' (Grama Laxmi) எனப் பெயரிட்டனர். இச் சாதனம் நமது கிராம இல்லங்களுக்கு ஏற்ப அமைந்துள்ளது. எனவே தற்பொழுது தில்லியின் (Delhi) அருகில் உள்ள 12 கிராமங்களி

தில் (U. P.) 5 கிராமங்களிலும் விவசாயிகள் அமைத்துள்ளார்கள். அவை, யாதொரு சிக்கலின்றி இன்று வரை இயங்கி வருகின்றன. இவ்வாயுவை எரியவிடும் பொழுது அதனின்று கிட்டும் வெப்பம் மிகுதியாகவும், எரியும் பொழுது புகையின்றியும் உள்ளது. மேலும் மீதியுள்ள சாணம் வயல்களுக்கு எருவாகப் போட மிகவும் பயன்படுகின்றது.

5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கான சாண வாயுவைத் தரும் சாதனத்தை நிர்மாணிக்கத் தோராயமாக ரூபாய் 350/- ஆகுமென இந்திய விவசாய ஆய்வுக் கூடத்தார் கணக்கிட்டுள்ளனர். மேலும் இச்சாதனத்தைத் தினந்தோறும் இயக்க எந்த விதமான செலவும் ஆவதில்லை. இச்சாதனத்தில் இருந்து தினந்தோறும் 100 சதுர அடி பரிமாணம் உள்ள சாண வாயு பெறலாம். இதற்கு நான்கு மாடுகளின் சாணம் போதியதாக உள்ளது. இந்த எரியும் வாயுவை சமையல் வேலைகளுக்கு மட்டுமன்றி, வீட்டில் விளக்குகள் ஏற்றவும் பயன்படுத்தலாம். வாயு எரியும்பொழுது வெப்பம் மிகுதியாகத் தோன்றுவதினால், சமையல் மிக விரைவில் முடிந்து விடுகின்றது.

சாதனத்தின் சிறப்புக்கள்:

• சாணத்தில் இருந்து வாயுவைப் பிரிப்பதனால் சாணத்தின் உரச்சத்து (Manurial constituents) குன்றிப் போய் விடுமோ என ஐயப்பட வேண்டியதில்லை. இதற்கு மாறாக வாயு போக மீதி உள்ள சாணம் முந்தைய நிலையில் ... சத்தை மிகுதியாகக் கொண்டுள்ளது. இதைப் பல சோதனைகள் மூலம் இரசாயன விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். 'மீதேன் வாயு' அல்லது சாணவாயு தயாரிக்கும் தொட்டியில் உள்ள சாணக் குழம்பிலும் மற்றும், வாயு உண்டான பின் வெளிப்படும் சாணக் குழம்பு தேங்கும் அறையிலும் (படத்தில் 2, 9 எனக் குறிப்பிட்டுள்ள பாகம்) ஈக்கள் உற்பத்தியாவதில்லை. ஈக்களின் முட்டைகளில் இருந்து வெளிப்படும் புழுக்களைச் (Maggots) சாணக் குழம்பு நிற்கும், முன்பு குறிப்பிட்ட பகுதிகளில் போட்டுச் சோதனை செய்ததில் அப்புழுக்கள் இறந்து விட்டதைக் கண்டார்கள். எனவே ஈக்கள் தோன்றாமல் இருக்கவும் வழியுண்டாகின்றது.

சாதனம் இயங்கும் முறை:

கரிப் பொருள் யாவும் காற்றின்றிப் புளிக்கும் பொழுது (Anaerobic fermentation of Organic Matter) அதிலிருந்து மீதேன் என்ற ஒரு வாயு கிளம்புகின்றது. இதைச் ''சதுப்பு நில வாயு'' (Marsh gas) என்றும் கூறுவார்கள். சாணவாயு தயாரிக்கும் சாதனமும் இத்தத்துவத்தின் படியே இயங்குகின்றது. இச்சாதனத்தில் படத்தில் காட்டியது போன்று செங்கற் சுவரினால் ஆனதும், சிமென்ட் பூசப்பட்டதுமான ஒரு புளிக்கும் அறையுண்டு (Fermentation Tank). அது 12 அடி ஆழமுடையதாகவும் 6 அடி விட்டமுடையதாகவும் இருக்கவேண்டும். இக் குழியில் சாணத்தை நீருடன் கலந்து குழம்பு போல் (slurry) ஆக்கி

மேல் 5 அடி விட்டமுடையதாகவும், 4 அடி உயரமுள்ளதாகவும் உள்ள ஒரு இரும்புப் பீப்பாவைத் தலைகீழாக உள்ளபடி கவிழ்த்து மூட வேண்டும். இதனால் வெளியே உள்ள காற்று சாணக் குழம்புடன் தொடர்பு கொள்ள முடிவதில்லை. எனவே குழியின் உள்ளே அடைப்பட்டுக் கிடக்கும் சாணம் புளிக்க ஏதுவான நிலை ஏற்படுகின்றது. உற்பத்தியாகும் சாணவாயு குழியின்மேல் தேவையான இடத்திற்கு வாயுவை எடுத்துச் சென்று எரிக்கலாம். இதை இயக்குவதற்குத் தினம் 100 ராத்தல் சாணக் குழம்பு தேவைப்படுகின்றது. சாணத்தைக் குழம்பாக்கி ஊற்றும் குழல் (Funnel) மூலம், சாணக் குழம்பு புளிக்கும் அறையை அடையச் செய்யவேண்டும். புதுச் சாணக் குழம்பு அறையின் அடிப்பாகத்தை அடைந்தவுடன், மேலே உள்ள பழைய



சாணத்திலிருந்து எரிவாயு தயாரிக்கும் சாதனம்

1. சாணக்குழம்பு ஊற்றும் அறை
2. சாணக்குழம்பு புளிக்கும் அறை
3. இரும்புப் பீப்பாய் கவிழ்க்கப் பட்டுள்ளது.
4. மரப்பெட்டகங்களில் உள்ள எடை
5. சாணவாயு வெளிப்படும் குழாய்
6. வாயுவைக் கட்டுப்படுத்தும் அடைப்பான்
7. வாயுவில் உள்ள நீர்வடிவுக் குழாய்
8. வாயு நீங்கியபின் சாணக் குழம்பு வெளிப்படும் குழாய்
9. சாணக்குழம்பு உலரும் தொட்டி
10. உருளைகள்

கவிழ்க்கப்பட்டுள்ள இரும்புப் பீப்பாயில் (gas holding drum) நிரம்புகின்றது. போதிய வாயு நிரம்பியவுடன் பீப்பாய் மேல் எழும்புகின்றது. கவிழ்க்கப்பட்டுள்ள இரும்புப் பீப்பாயின்மேல் ஒரு துவாரத்தை உண்டு பண்ணி அதனுள் இரும்புக் குழாய்களைப் குழம்பு, சாணம் வெளிப்படும் குழாய் மூலம், வெளிப்பட்டுச் சாணக் குழம்பு உலரும் தொட்டியை அடைகின்றது. அங்கிருந்து வாரம் ஒரு முறை வயல்களுக்கு எருவாக எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

முதன் முறையாக சாணவாயு சாதனத்தை இயக்கும்பொழுது, சுமார் 12 வாளி (Bucket) புளித்த சாணக் குழம்பை, வேறு ஒரு சாணவாயு தயாரிக்கும் சாதனத்தில் இருந்து எடுத்துவிட வேண்டும். அவ்வாறு புளித்த சாணக் குழம்பு கிடைக்கவில்லை எனில் வீட்டில் உள்ள கழிவு நீரையாவது (Sewage water) அல்லது குளத்தின் அடி வண்டல் மண்ணையாவது கலக்க வேண்டும். இதனால் சாணவாயு உடனே உற்பத்தியாக ஏதுவாகின்றது. தோராயமாக வாயு 15 தினங்களுக்குப் பின் உற்பத்தியாகத் தொடங்குகின்றது. வாயு குளிர் காலத்தைக் காட்டிலும், கோடைக்காலத்தில் மிகுதியாக உற்பத்தியாகின்றது. இச் சாதனம் வாயுவை உற்பத்தி செய்யும் தறுவாயில், வாயுவைக் கட்டுப் படுத்தும் அடைப்பானை (படத்தில் 6 என்று குறிப்பிட்டுள்ள பாகம் (Gas cock)) அடைத்து வைக்கவும். வாயு உற்பத்தி தொடங்கியவுடன், முன்பே கூறிய வண்ணம் இரும்புப் பீப்பாய் பக்கவாட்டில் உருளைகளின் உதவியால் மரப் பெட்டிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் பளுவின் (Balancing loads) உதவியினால் மேலே எழும்புகின்றது. நமக்கு வாயு தேவைப்படும் பொழுது பெட்டகத்தில் உள்ள பளுவை நீக்கினால் பீப்பாய் தானாகக் கீழே இறங்குகின்றது. இந் நிகழ்ச்சியினால், பீப்பாயின் உள்ளே உள்ள சாண வாயு, அழுத்தத்திற்குள்யின் மூலம் மிகுந்த விசையுடன் வெளிப்படுகின்றது. அப்பொழுது வாயுவைக் கட்டுப்படுத்தும் அடைப்பானைத் திறந்தால் வாயு இலகுவாகக் குழாயின் மூலம் வேண்டிய இடத்தை அடையும். வாயுவை எரியவிடத் தகுந்த சூட்டடுப்புகளைப் (Burners) பயன்படுத்தினால் மிகுந்த பலன் கிட்டும். * இதற்கான சூட்டடுப்புகளையும், விளக்குகளையும், இந்தியாவில் சில தொழிற்சாலைகளில் தற்பொழுது செய்கின்றார்கள்.

வாயு உற்பத்தியான பின், உள்ளே பழைய சாணக் குழம்பு மிக விரைவில் உலர்ந்து நல்ல உரமாகப் பயன்படுகின்றது. அச் சாணம் எல்லாவித மண்வகைகளுக்கும் ஏற்றதாக உள்ளது. அதில் 2 சதவிகிதம் நைட்ரஜென் சத்து (Nitrogen) உள்ளது என்றும் கணக்கிட்டுள்ளனர். இச் சாணத்தை 'கம்போஸ்ட்' உரக் குழிகளுக்கும் போடலாம். மழைக் காலங்களில் இச் சாணத்துடன் சிறிது வைக்கோல் போன்ற கழிவுப் பொருளைச் சேர்த்தால், தொழு உரத்தைக் காட்டிலும் மிகச் சத்தான கரி உரமாகப் (Organic-manure) பயன்படுகின்றது. எனவே இத்தகைய எளிய சாதனம், நமது விவசாயிகளின் எரு பற்றாக்குறையையும், எரிபொருள் (Fuel) பற்றாக்குறையையும் ஒருங்கே தீர்த்து வைக்கின்றது. இதைக் 'கிராம இலக்குமி' எனக் குறிப்பிட்டது. சாலப்பொருந்தும் என்றே கூற வேண்டும்.

---

* M/s Bengal Scientific & Technical Works Ltd., 20/3, Aswini Dutt Road, Calcutta-29.

இக்காலத்தமிழும் - மக்கள் தமிழும் இலக்கியத்தமிழும்

திரு. முத்துச்சண்முகம், எம்.ஏ, பி.எஸ்சி., எம்.லிட்.

முன்னுரை

தென்னிந்திய மொழிகளில், தற்காலத் தெலுங்கு இலக்கியம் கையாளும் மொழிக்கும் பேசும் தெலுங்கிற்கும் அதிக வேறுபாடு இல்லை. கன்னடத்தில் இவை இரண்டும் தெலுங்கைவிட அதிகமாக வேறுபடுகின்றன. ஆனால் இவை இரண்டும் மிகவும் வேறுபட்டு நிற்பது தமிழில்தான். இன்றைய பேச்சுத் தமிழும் (மக்கள் தமிழ்) இலக்கியத் தமிழும் இருவேறு மொழிகளோ என்று கூட ஐயுறவேண்டியிருக்கிறது. மேலை நாட்டான் ஒருவன் தமிழ்ப் புத்தகங்கள் மூலம் இக்காலத் தமிழை நன்கு கற்று, நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்திருந்தாலும், திடீரென்று, தமிழ்நாட்டின் கிராமமொன்றில் புகுந்து, அங்குள்ளவர் பேசுவதைக் கேட்டால் சிறிதும் புரிந்து கொள்ளமாட்டான். உத்திரப் பிரதேசத்தில் புத்தகத் தமிழைக் கற்றவர்கள் சிலர் அண்மையில் தமிழ் நாட்டின் கிராமங்களின் உள்ளே புகுந்து பேசமுயன்றபோது, அவர்கள் பேசிய பேச்சைக் கிராமவாசிகள் புரிந்து கொண்டனர். ஆனால் கிராமவாசிகள் பேசியதை உத்திரப் பிரதேசத்தார் புரிந்து கொள்ள முடியவில்லை. என்னோடு வேலைபார்க்கும் வங்காளமொழித் துணைப் பேராசிரியர் திரு. பட்டாச்சாரியார் அவர்கள், வங்காளத்தில் இருக்கும்பொழுதே தமிழை நன்றாக எழுதப்படிக்கக் கற்றவர். அவர் இங்கு மக்கள் தமிழைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்கிறார். அவர் இலக்கியத் தமிழில் பேசுகின்றார். ஆறு மாதங்களாகியும் இன்னும் மக்கள் தமிழைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றார். எனினும் மக்கள் தமிழும் இலக்கியத் தமிழும் நெருங்கிக் கலந்த புதிய தமிழ் ஒன்று உருவாகும் நிலை இன்று தமிழ்நாட்டில் தொடங்கி இருக்கிறது. இதனை இன்றைய பத்திரிகைகள் தற்கால எழுத்தாளர்கள் எழுதும் கதைகள், மேடைப் பேச்சுகள், ரேடியோ நிகழ்ச்சிகள் நாடகங்கள், பேசும் படங்கள் இங்கெல்லாம் காணலாம். இவற்றில் மக்கள் தமிழையும் இலக்கியத் தமிழையும் மாற்றி மாற்றிப் பயன்படுத்துகின்றனர்.

பத்திரிகைகள்

இன்றைய தமிழ்ப் பத்திரிகைகளை மூன்றாகப் பிரிக்கலாம். மக்கள் தமிழிலேயே வெளிவரும் பத்திரிகை எதுவும் இன்று தமிழ்நாட்டில் இல்லை. மக்கள் தமிழையும் சிற்சில இடங்களில் பயன்படுத்தும் பத்திரிகைகள் முதல் வகையைச் சார்ந்தவை. ஆனந்த விகடனில் ''பத்துக் கேள்விகள்'', ''இங்கே போயிருக்கிறீர்களா''- இவை மக்கள் தமிழில் வருகின்றன. பத்துக் கேள்விகளில் ஆசிரி

யர் இன்றைய தமிழச சமூகததுல பல்வேறு மக்களைப் பேட்டிகண்டு அவைகளை வெளியிடுகின்றார். படித்தவர்கள், உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் இவர்களோடு நடைபெற்ற பேட்டியாயின் ஆசிரியர் இலக்கியத் தமிழைப் பயன்படுத்துகின்றார். மற்றவர்களோடு நடைபெற்ற பேட்டியாயின் மக்கள் தமிழைப் பயன்படுத்துகிறார். ''இங்கே போயிருக்கிறீர்களா?'' என்பதில் ஆசிரியர் மக்கள் கூடுகின்ற பல்வேறு இடங்களை வருணிக்கின்றார். இதில் ஒவ்வொருவனும் அவனவன் தமிழிலேயே பேசுகின்றான். ஆனந்த விகடனும், குமுதமுந்தான் மக்கள் தமிழை இந்த அளவிற்காவது பயன்படுத்துகின்றன.

இரண்டாவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் எப்பொழுதும் இலக்கியத் தமிழையே பயன்படுத்துகின்றன. எந்தப் பொருளைப்பற்றி எழுதினாலும் இலக்கியத் தமிழையே பயன்படுத்துகின்றன. தினசரிப் பத்திரிகைகள் எல்லாம் இப்பிரிவில் அடங்கும். கல்கி, கலைமகள், கலைக்கதிர், குறிஞ்சி, காஞ்சி, முத்தாரம் போன்ற வார மாத வெளியீடுகளும் இப்பிரிவில் அடங்கும். இவற்றில் கல்கி, கலைமகள் இவற்றில் வருகின்ற கதைகளில் ஆங்காங்கே உரையாடல்களில் மக்கள் தமிழைப் பயன்படுத்துகின்றனர். எனினும் ஆனந்தவிகடன் குமுதம் இவற்றில் காணப்படுகின்ற அளவு இவற்றில் மக்கள் தமிழ் இடம் பெறவில்லை.

மூன்றாவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் பண்டிதர் நடையிலேயே எழுதுவன. இவற்றில் வருகின்ற கட்டுரைகளைப் படிக்கும்பொழுது பழந் தமிழைப் படிப்பது போன்ற உணர்ச்சியே ஏற்படும். இவை தூய தமிழ்ச் சொற்களையும் பயன்படுத்துகின்றன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், தென்மொழி போன்ற பத்திரிகைகள் இப்பிரிவில் அடங்கும். இப்பத்திரிகை, குறிப்பிட்ட சிலரிடையே தான் வழங்குகின்றன. பழைய இலக்கண இலக்கியங்களில் பரம்பரைப் பயிற்சி உடையவர்களே இவற்றைப் படிக்கின்றனர்.

விகடத்துணுக்குகளை வெளியிடும் பொழுது எல்லாப் பத்திரிகைகளும் (மூன்றாவது பிரிவு நீங்க) மக்கள் தமிழையே பயன்படுத்துகின்றன. மூன்றாவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் பெரும்பாலும் விகடத்துணுக்குகள் வெளியிடுவதில்லை; வெளியிட்டால் இலக்கியத் தமிழையே பயன்படுத்துகின்றன.

பத்திரிகைகள் கையாளுகின்ற நடைக்கும், பத்திரிகைகளின் செலவிற்கும் எத்தகைய தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இரண்டாவது பிரிவைச் சார்ந்த தினசரிப் பத்திரிகைகள் நீங்க, முதல் பிரிவைச் சார்ந்த குமுதம், ஆனந்தவிகடன், இரண்டாவது பிரிவைச் சார்ந்த கல்கி இவைகளே அதிகம் செலவாகின்றன. பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள், கதைகள், கட்டுரைகள், அரசியல் நோக்கு இவைகளே பத்திரிகைளின் செலவைக் காட்டுகின்றன.

தமிழ் எழுத்தாளர்கள்

பத்திரிகைகளைப் போல எழுத்தாளர்களையும் மூன்றாகப் பிரிக்கலாம். தற்கால இலக்கியங்களான

சிறுகதை, நாவல் முதலியன எழுதுபவர்கள் முதல்வகையைச் சார்ந்தவர்கள். இவர்கள் தங்கள் கதைகளில் மக்கள் தமிழை ஆங்காங்கே பயன்படுத்துகின்றனர். பெரும்பாலும் உரையாடல் மக்கள் தமிழிலும், விளக்கப் பகுதிகள் இலக்கியத் தமிழிலும் அமைந்திருக்கின்றன. முற்றிலும் மக்கள் தமிழில் எழுதப்பட்ட நாடகம் பூவை ஆறுமுகம் ஆனந்தவிகடனில் (17-9-61) எழுதிய 'மகுடி.' தற்கால எழுத்தாளர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையான மக்கள் தமிழில் பெருவாரியாக எழுதுகின்றனர். புதுமைப்பித்தன் திருநெல்வேலித் தமிழில் எழுதினர். ஜெயகாந்தன் சென்னை நகர 'ஸ்லம்' வாசிகள் தமிழில் பெரும்பாலும் எழுதுகிறார். ஜானகிராமன், எல். எஸ். இராமாமிர்தம் இவர்கள் பார்ப்பனர் தமிழில் எழுதுகின்றனர். சி. எஸ். செல்லப்பா மதுரை ஜில்லா கள்ளர் தமிழில் எழுதுகிறார். சண்முகசுந்தரம் கோயம்புத்தூர் தமிழில் எழுதுகிறார். ஹெப்சியா ஜேசுதாஸ் நாகர்கோவிலில் கிறித்தவர் தமிழில் எழுதுகிறார். இவ்வாறு குறிப்பிட்ட ஒருவகை மக்கள் தமிழிலே பெரும்பாலும் எழுதுபவர்கள் தமிழ் நாட்டில் அப்பகுதியில் இருந்து வருகின்றனர்; அல்லது அவ் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அகிலன், மு. வரதராசன்- இவர்கள் பொதுப் பேச்சுத் தமிழில் எழுதுகின்றனர். இவர்கள் அனைவரும் மக்கள் தமிழில் காணப்படுகின்ற ஒலி வேறுபாடுகளைத் தமிழ் எழுத்துக்களாலேயே காட்ட முற்படுகின்றனர். இதில் ஆசிரியர்கள் வேறுபடுவதோடு, ஒருவர் எழுதுவதிலேயே முரண்பாடுகளும் இருக்கின்றன. இத்தகைய ஆசிரியர்களில் பலர் இளம் வயதினர். சிலர் வேறு வேலைகளில் இருந்துகொண்டு எழுதுகின்றனர். சிலர் பத்திரிகைகளில் வேலைபார்க்கின்றனர். எந்த எழுத்தாளனும் கட்டுரை எழுதும்போது இன்னும் மக்கள் தமிழைப் பயன்படுத்தவில்லை.

பேசும் முறை

இனி மக்கள் பேசும் முறைகளைக் கவனிப்போம். குடும்பத்தினரோடும், நண்பர்களோடும் சாதாரணமாக உரையாடும் பொழுது படித்தவர்களும் படிக்காதவர்களும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். படித்தவர்கள் மேடைமீது ஏறிச் சொற்பொழிவு ஆற்றும்பொழுதெல்லாம் இலக்கியத் தமிழிலேயே பேசி வந்தனர். இது ஒரு விதி போல் அமைந்திருந்தது. இதுவும் இப்பொழுது சிறிது சிறிதாக தளர்ந்து வருகிறது. மேடைப் பேச்சால் பெரும் வெற்றி கண்டவர்கள் தி. க., தி. மு. க. ஆகிய இரு கட்சியினருமாவர். இவர்கள் தமக்கென ஒரு இலக்கிய நடையை அமைத்துக் கொண்டனர். இவர்களுடைய கட்சியில் பற்றில்லாதவர்கள் கூட இவர்களுடைய பேச்சை, தேனுண்ணும் வண்டுபோல் மணிக்கணக்காக அமர்ந்து கேட்பார்கள். பொருத்தமான எதுகை, மோனை, பன்னிப்பன்னிப் பெருகிச் செல்லும் நீண்ட வாக்கியங்கள், எழுவாயை வாக்கிய இறுதியில் கொண்டு முடிப்பது; அவர்களுக்கென தனியான ஒருவகை குரலிசை (Intonation) — இவை இவர்களுடைய நடையின் தனி இயல்புகள். இவர்களும் இப்

பொழுது இந்த நடையைக் கைவிட்டு வருகின்றனர். அண்ணாதுரை அவர்கள்கூட இந்த நடையை விட்டுவிட்டு எளிய இலக்கிய நடையிலேயே பேசுகின்றார். ஆனால் இவர்கள் மேடையில் இன்னும் மக்கள் தமிழைக் கையாளவில்லை; ஒருவர் இருவர்தான் ஆங்காங்கே கையாளுகின்றனர்.

இன்று தமிழ்நாட்டின் இரு பெருந் தலைவர்களாகக் காமராஜூம் பெரியாரும் திகழ்கின்றனர். இவர்கள் இருவரும் மேடையிலும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். இருவரும் பொது மக்களுடைய உள்ளத்தைத் தொடக்கூடியவர்கள். வீட்டில் நண்பர்களோடு பேசுவதைப் போலவே மேடையிலும் இவர்கள் பேசுகின்றார்கள். இதில் பெரியார் தி. க., காமராஜ் காங்கிரஸ். பெரியார் தாம் மக்கள் தமிழில் பேசுவதோடு நில்லாமல் தன் கழகத்திலுள்ள மற்றவர்கள் இலக்கியத் தமிழில் பேசுவதைக் கண்டிக்கவும் செய்கின்றார். காமராஜர் பெரியாரிடமிருந்துதான் இந்த முறையைக் கற்றிருக்க வேண்டும். சிலர் இவர்களுடைய கல்வி முறையே இதற்குக் காரணம் என்கின்றனர். இரண்டு பேரும் கல்லூரிகளில் படிக்கவில்லை. இருவரும் பொது மக்களோடு எப்பொழுதும் உறவாடிக் கலந்து வாழ்பவர்கள். தாங்கள் கூறுவது பொதுமக்களுடைய உள்ளத்தில் நன்கு ஊன்றவேண்டும் என்ற ஆர்வமே இவர்கள் மக்கள் தமிழிலேயே மேடையிலும் பேசுவதற்குக் காரணம் என்று கூறுவது பொருந்தும். மற்றொருந் தலைவர் சிவஞான கிராமணியார். இவர் அரசியல் கூட்டங்களாயின் மக்கள் தமிழில் பேசுகின்றார். இலக்கியக் கூட்டமாயின் இலக்கியத் தமிழில் பேசுகின்றார். இது அண்மையில் இவரிடம் தோன்றிய மாறுதல். முன்பெல்லாம் இவர் எப்பொழுதும் இலக்கியத் தமிழிலேயே பேசிவந்தார்.

பட்டம் பெற்ற ஆசிரியர்கள், பேராசிரியர்கள்—மிகச் சிலரைத் தவிர அனைவரும் மேடையில் இலக்கியத் தமிழிலேயே பேசுகின்றனர். இவர்களும் நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் கூற முற்படும்போது மக்கள் தமிழில் பேசுகின்றனர். இவர்களிலும் சிறந்த பேச்சாளரான காலஞ்சென்ற பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் தமிழ்ப்பேராசிரியர் ஜி. சுப்பிரமணியபிள்ளை ஆகியோர் மேடையிலும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். சோமசுந்தர பாரதியார் தொடங்கும் பொழுது இலக்கியத் தமிழில் தொடங்குவார். இரண்டு மூன்று நிமிடங்களில் மக்கள் தமிழுக்குச் சென்று விடுவார். பின்னர் சொற்பொழிவு முடிவது வரையிலும் மக்கள் தமிழில் தான் பேசுவார். மற்றும் சிலர் இலக்கியத் தமிழில் தொடங்குகின்றனர். சில வினாடிகளில் மக்கள் தமிழுக்குச் சென்று விடுகின்றனர். இறுதியில், முடிவுரையை இலக்கியத் தமிழில் கூறி முடிக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பண்டிதர் நடை படித்தவர்களிடையே சிறிது செல்வாக்குடன் இருந்தது. கரடுமுரடான இந்த நடையைப் பண்டிதர் எழுத்தில் பெருவாரியாகவும், பேச்சில் சிறுவாரியாகவும் பயன்படுத்தி வந்தனர். இப்பொழுது இந்த நடை அறவே வழக்கிழந்து விட்டது.

சிற்சில சமயங்களில் கேலிப் பேச்சுக்கும் இடமாகிவிட்டது. இதன் இடத்தைத் தற்கால எளிய இலக்கிய நடை பிடித்துக் கொண்டது. இப்பண்டிதர் நடையே வேண்டும் என்று கூறி அதில் எழுதுகின்ற ஒருவர் இருவர்கூட இன்று மேடையில் இலக்கியத் தமிழிலேயே பேசுகின்றனர். சிற்சில இடங்களில் - நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் கூறும்பொழுது, இவர்களும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். இவர்களால் பழைமையை விடவும் மனம் வரவில்லை; புதுமையை ஒதுக்கவும் முடியவில்லை.

கதை நிகழ்ச்சிகள்

கிராமங்களில் கிராம தேவதைகளுக்கு விழா நடக்கும்பொழுது இரவு நேரங்களில் கதை கூறுவார்கள். இது அந்தஅந்தக் கடவுளின் கதையாகவே பெரும்பாலும் இருக்கும். முக்கியமாகக் கோடைக் காலங்களில் இது நடைபெறும். காத்தவராயன் கதை, மகாபாரதக் கதைகள் இவை நடைபெறும். கதை சொல்லுபவர் ஒருவர். அவருக்கு எதிராக இரண்டு பேர் இருப்பார்கள். ஒருவர் மிருதங்கமோ முரசோ வாசிப்பார். மற்றொருவர் உடுக்கு அடிப்பார். கதை பெரும்பாலும் இவர்களிடையே உரையாடலாகவும், கதையைச் சொல்வதாகவும் நடைபெறும். இடையிடையே பாட்டுக்களும் இடம் பெறும். இவர்கள் கதையைச் சொல்லும்பொழுது இலக்கியத் தமிழையும், கதையை உரையாடலாகக் கூறும்பொழுது மக்கள் தமிழையும் பயன்படுத்துகின்றனர்.

திருவிழாக் காலங்களில் நடைபெறுகிற மற்றொரு நிகழ்ச்சி கதாகாலட்சேபம். வள்ளி திருமணம், சீதா கல்யாணம் முதலிய கதைகள் கதா காலட்சேபங்களில் இடம் பெறுகின்றன. இவற்றில் கதையை வசனமாகச் சொல்லுதல், தானே பல பாத்திரங்களாக நின்று உரையாடுதல், பாக்கள் எல்லாம் கலந்துவரும். இங்குப் பாட்டைத் தவிர மற்ற எல்லாம் மக்கள் தமிழிலேயே நிகழும். அதிலும் கதை சொல்பவர் அந்தணராயின் அந்தணர் தமிழிலும், அந்தணர் அல்லாதவராயின் அவர்கள் தமிழிலும் கதா காலட்சேபம் நடைபெறுகிறது. சிலர் கதை சொல்வதற்கு இலக்கியத் தமிழையும் உரையாடலுக்கு மக்கள் தமிழையும் பயன்படுத்துகின்றனர்.

ரேடியோ

அடுத்தபடி ரேடியோ தமிழ். ரேடியோவில் இலக்கியத் தமிழைச் செய்தி ஒலி பரப்பிற்கும், நிகழ்ச்சிகளுக்கு முன்னுரை கூறுவதற்கும், அறிவிப்புக்களுக்கும் பயன்படுத்துகின்றனர். மற்றபடி ரேடியோ, நாடகம், சிறுகதை, கிராம நிகழ்ச்சி இவற்றிலெல்லாம் மக்கள் தமிழையே பயன்படுத்துகின்றனர். ரேடியோ நாடகங்களில் பாத்திரங்கள் தனியாகப் பேசிக்கொள்ளும் இடங்களில்—பாத்திரங்கள் தாளுக சிந்திப்பதைக் கூறவேண்டிய இடங்களில் (Soliloquies) இலக்கியத் தமிழைப் பயன்படுத்துகின்றனர்.

திரைப்படங்களும், நாடகங்களும்:

இறுதியாகத் தமிழ்ப் படங்களும், நாடகங்களும் பயன்

படுத்துகின்ற தமிழைக் காண போம். பத்து, பதினைந்து ஆண்டு களுக்கு முன்பு தமிழ்ப் படங்க ளெல்லாம் இலக்கியத் தமி ழையே பயன்படுத்தி வந்தன. தலைவன் தலைவியர் எப் பொழுதும்—காதலிக்கும் பொழு தும், ஊடும் பொழுதும் இலக் கியத் தமிழிலேயே பேசுவர். சிறு பாத்திரங்கள், நகைச்சுவைப் பாத்திரங்கள்—இவர்கள்தாம் மக் கள் தமிழில் பேசுவர். பராசக்தி, ராணி முதலிய படங்களைப் பார்த் தால் இவ்வுண்மை புலப்படும். ராணி என்ற படத்தில் கதா நாயகி தான் ராணி என்று உண ராது கள்ளவர் கூட்டத்தில் இருக் கும் பொழுது மக்கள் தமிழில் பேசுகிருள். ஆனல் அப்பொழுதும் காதலிக்கும் பொழுது இலக்கியத் தமிழிலேயே பேசுகிருள். தான் ராணி என்று தெரிந்ததும் இலக் கியத் தமிழிலேயே பேசுகிருள். கதாநாயகன் எப்பொழுதும் இலக் கியத் தமிழிலேயே பேசுகிருன். ஆனல் இன்று தமிழ்ப்படங்களின் நடை எவ்வளவோ மாறிவிட்டது. சமூகப் படங்கள் எல்லாம் மக் கள் தமிழிலேயே அமைகின்றன. தலைவனும், தலைவியும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். 1964 தொடக்கத்தில் வெளிவந்த படம் ''காதலிக்க நேரமில்லை'' என்பது. பெரும் வெற்றியுடன் அநேக இடங்களில் பல நாட்கள் ஓடிய படம் இது. இதில் மருந் துக்குக்கூட இலக்கியத் தமிழ் கிடையாது. அனைவரும் மக்கள் தமிழிலேயே பேசுகின்றனர். ஏக தேசம் இதே காலத்தில் வெளி வந்த படம் கர்ணன். அதில் வரு கின்ற முக்கியப் பாத்திரங்கள் எல் லாம் இலக்கியத் தமிழிலேயே பேசுகின்றனர். இன்று வரும் தமிழ்ப் படங்களில் புராணப் படங்களும், வரலாற்றுப் படங் களும், இலக்கியத் தமிழில் அமை கின்றன. கட்டபொம்மன், ஸ்ரீ வள்ளி, கர்ணன், அருணகிரிநாதர் முதலியன இத்தகைய படங்கள். ஆனல் தற்பொழுது புராணப் படங்களும் வரலாற்றுப் படங் களும் மிகக் குறைந்து விட்டன. சமூகப்படங்களே மிகுதி. சமூகப் படங்க ளெல்லாம் மக்கள் தமி ழையே பயன்படுத்துகின்றன. மக் கள் தமிழிலும் பலவகைகள் இருக் கின்றன. இடத்திற்கு இடம் மாறுவது ஒருவகை. சாதிக்குச் சாதி மாறுவது மற்ருெரு வகை. எனினும் இப்பொழுது தமிழில் பொதுப் பேச்சு ஒன்று உருவாகி வருகிறது. தமிழ்ப் படங்களில் இன்று தலைவன், தலைவியர் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைச் சார்ந்தவர்களாயின் அவ்வகுப்பி னர் பேச்சைப் பேசுகின்றனர். இல்லையானல் பொதுப் பேச் சையே பேசுகின்றனர். சாதிப் பேச்சையும், இடப்பேச்சையும் நகைச்சுவைப் பாத்திரங்கள் கையாளுகின்றன.

ஏழைபங்காளன் என்ற படத் தில் தலைவன் சென்னைநகர் குடி சைவாழ்வோர் பேச்சைப் பேசு கின்ருன். அங்குள்ள ஒரு பெண்ணையே அவன் காதலிக்கி ருன். ஆயிரம் ரூபாய் என்ற படத்தில் தலைவி ''பிளாட் பாரம்'' தமிழில் பேசுகிருள். அவள் சென்னை குடிசைவாழ் பெண்களில் ஒருத்தி. ஆனல் தலை வன் பொதுப் பேச்சில் பேசுகி ருன். இது சத்தியம் என்ற படத் தில் நாகேசும் மனோரமாவும் (நகைச்சுவை பாத்திரங்கள்) அந் தணர் தமிழைப் பேசுகின்றனர்.

பச்சைவிளக்கு என்ற படத்தில் நகேசு ஆங்கிலோ இந்தியன் தமிழைப் பேசுகிறான். இதைப் போல மலையாளி பேசும் தமிழ், செட்டிநாட்டுத் தமிழ், திருநெல்வேலித் தமிழ், ''ள'' கரத்தமிழ், பண்டிதர் தமிழ் எல்லாம் இன்று தமிழ்ப்படங்களில் நகைச்சுவைக்குப் பயன்படுகின்றன. மக்களைப் பெற்ற மகராசி என்ற படம் கோயம்புத்தூர் தமிழிலேயே அமைந்திருக்கிறது.

சினிமா பாட்டுகளிலும் புதுமைகள் தோன்றி விட்டன. தொடக்கக் காலத்தில் சினிமா பாக்கள் எல்லாம் இலக்கியத் தமிழில் எழுதப்பட்டு கர்நாடக இசையோடு அமைந்திருந்தன. சினிமாப் பாட்டுப் புத்தகங்களில் ஒவ்வொரு பாட்டுக்கும் ராகம் தாளம் இவைகளைக் குறிப்பிட்டு வெளியிடுவர். இன்று இலக்கியத் தமிழோடு கர்நாடக இசையும் அமைந்த சினிமா பாக்களைப் புராணப்படங்களிலும், வரலாற்றுப் படங்களிலும், அல்லது கலையை அடிப்படையாகக் கொண்ட படங்களிலும்தான் காணலாம். மற்றச் சமூகப் படங்களிலெல்லாம் சினிமா மெட்டுகளில் அமைந்த பாட்டுகளே இடம் பெறுகின்றன. இச்சினிமா மெட்டுகளில் அமைந்த பாக்கள் பெரும்பாலும் மக்கள் தமிழிலேயே இருக்கின்றன.

தமிழ் நாடகங்களிலும் இன்று பெரும்புரட்சி ஏற்பட்டுவிட்டது. தெருக்கூத்திற்கு என ஒரு தமிழ் நடை இருந்தது. நவராத்திரி படத்தில் நிகழும் சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய தெருக்கூத்தில் காணப்படும் நடையே அது. அதுவும் இலக்கிய நடையே. அந்த நடையே தொடக்கத்தில் தமிழ் நாடகங்களிலும் கையாளப்பட்டு வந்தது. பின்பு அது எளிய இலக்கியத் தமிழாக மாறியது. இப்பொழுது தமிழ் நாடகங்களெல்லாம் பெரும்பாலும் மக்கள் தமிழிலேயே—பொதுப் பேச்சுத் தமிழ், நடைபெறுகின்றன. டி.கே. சகோதரர்கள் வரலாற்று நாடங்களில் இலக்கியத் தமிழையும் சமூக நாடகங்களில் மக்கள் தமிழையும் பயன்படுத்துகின்றார். டி.கே. சண்முகம் அவர்கள் நாடகங்களில் மக்கள் தமிழையே பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துடையவர். அப்பொழுதுதான் நாடகங்கள் உண்மையாகவும், இயல்பாகவும் அமைந்து மக்கள் உள்ளத்தைத் தொட முடியும் என்று கருதுகிறார். வரலாற்றுப் படங்களும், புராணப் படங்களும்—அதே போல நாடகங்களும், இலக்கியத் தமிழைப் பயன்படுத்துவது அவை தற்கால நிகழ்ச்சிகள் அல்ல என்று எடுத்துக்காட்ட ஓரளவு துணை புரியலாம்.

முடிவுரை

தற்காலத் தமிழ்நடையில் நம்மையறியாமலே புதுமைகள் பல தோன்றி வருகின்றன. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வங்காள மொழியில் ஏற்பட்ட பெரும்புரட்சி இன்று தமிழ் மொழியில் தொடங்கி இருக்கிறது.

தற்காலத் தமிழில் மக்கள் தமிழ், இலக்கியத் தமிழ் என்று இரண்டு பிரிவுகள் இருப்பது போல் வங்காளத்தில் சலித் பாஷை, சாது பாஷை என இரண்டு இருந்தன. சாது பாஷை எழுதுவதற்கும் சலித் பாஷை பேசுவதற்கும் பயன்பட்டு வந்

ஒன்றாகி விட்டன. முன்பெல்லாம் நாடகங்களில் சிறு பாத்திரங்கள் கூட சாது பாஷையிலேயே பேசி வந்தனர். இப்பொழுது முக்கிய பாத்திரங்கள்கூட சலித் பாஷையிலேயே பேசுகின்றனர். இப்போக்கு தாகூருக்கு முன்பே வங்காள மொழியில் தோன்றிவிட்டாலும், பெரும்பான்மையோர் அதனைப் பின்பற்றவில்லை. ஆனால் தாகூர்தான் அந்த நடையை தமது நூல்களில் பெருவாரியாகப் பயன்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவந்தார். தற்கால வங்காள இலக்கிய மொழியை வகுத்துக் கொடுத்தவர் தாகூர்தான்.

சாது பாஷைக்கும் சலித் பாஷைக்கும் உரிய போராட்டத்தைத் தாகூர் ஒரு கதை மூலம் விளக்குகிறார். ஒரு அரசனுக்கு இரண்டு மனைவியர். மூத்தவள் ஆடம்பர வாழ்வுடையவள்; அரச படாடோபங்கள் மிக்கவள்; பெருமைக்காரி; இளையவள் கிராமப் பெண்; ஆடம்பரமற்றவள்; தூய உள்ளம் படைத்தவள்; கபடமற்றவள்; அடக்கமானவள்; மக்கள் இவளுக்கு அரசிக்குரிய தன்மைகள் இல்லை என வெறுத்தனர். ஆனால் இவளுடைய நல்ல இயல்புகள் மெள்ளமெள்ள அரசனுடைய உள்ளத்தைக் கவர்ந்தன. அவளை விரும்பத் தொடங்கினான் அரசன். மூத்தவளை வெறுக்கத் தொடங்கினான். ''மூத்தவளுக்குரிய இடத்தைப் பெற்று அரசனோடு தனியாக இளையவள் அரியாசனத்தில் அமரும் நாள் வெகு தூரம் இல்லை'' என்று கூறித் தாகூர் கதையை முடிக்கிறார். இன்று வங்காள இலக்கியத்தில் இளையவள் அரியணையில் அமர்ந்து விட்டாள்.

''இளையவள் அரியாசனத்தில் அமரும் நாள் வெகு தூரம் இல்லை'' என்று கூறிய சொற்றொடர் இன்று தமிழ் மொழிக்குப் பொருந்தும் போலும்.

தாகூர் தம் இலக்கியத்தில் சாது பாஷையும் சலித் பாஷையும் கலந்த ஒன்றைக் கையாண்டு வந்தார். ஆனால் இன்று சலித் பாஷை சாது பாஷையை அகற்றி விட்டது. இன்று வங்காளத்தின் சிறந்த எழுத்தாளர் புத்ததேவ போஷ், முற்றிலும் சலித்பாஷையிலேயே இலக்கியம் அமையவேண்டும் என்கிறார். மிகச் சிறிதளவு காணப்படும் சாது பாஷையையும் அகற்றிவிட வேண்டும் என்கின்றார். சாது பாஷையை ஆதரிப்பவர் இன்று யாரும் இல்லை. கதையோ கட்டுரையோ— எல்லாம் இன்று சலித் பாஷையிலேயே எழுதுகின்றனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, தாகூருக்கும் முன்பு, வங்காள மொழியில் ஏற்பட்ட புரட்சி தான் இன்று தமிழ் மொழியிலும் ஆங்காங்குத் தோன்றுகிறது. மக்கள் தமிழும் இலக்கியத் தமிழும் ஆங்காங்கே மோதுகின்றன. எதிர்காலத்தில் இரண்டும் கலந்து ஒன்று தமிழ்மொழியாகத் தோன்றுமோ, அல்லது மக்கள் தமிழே அரியணை ஏறுமோ— இப்பொழுது ஒன்றும் கூற முடியாது. மக்கள் தமிழும் தமிழ் தான் என்று ஒத்துக் கொள்ளும் பக்குவம் இன்னும் தமிழ் மக்களிடையே ஏற்படவில்லை. ஒருவேளை தமிழ் நாட்டிலும் ஒரு தாகூர் தோன்றினால்தான் இப்போராட்டம் முடியும் போலும். ●

பெண்மைத் தியாகம்

புலவர் திரு. ரோகிணி

மாமல்லபுரத்துக் கடலலைகள் கால்களை முத்தமிட நின்றிருந்தாள் ஓர் இளமான். மாமை வண்ண உடல், அதே வண்ணத்தில் புடவை, சோளி, அறலென நெளிந்த கருங் கூந்தல். அதில் பிறழும் கெண்டையன்ன கண்கள். பவழ இதழ்கள் முத்துக்களைச் சிறையிட்டிருந்தன. அவள் தான் செந்திரு!

அழகு! அதன் இலக்கியம், இலக்கணம் எல்லாமே அவள் தான். அன்றலர்ந்த தாமரை மணங் கமழும் அந்த மேனியில் இப்போது கடற்கன்னி தன் அலைத் துளிகளைப் பன்னீர் போலத் தெளித்துக் கொண்டிருந்தாள்.

''செந்திரு!'' — அழைத்தது அவள் பெரிய அத்தான் அரவிந்தன். திரும்பினாள் அவள். வெளுத்த வேட்டியும் ஜிப்பாவுமாகக் காட்சி அளித்த அவன் கைகளில் - சீவப்பட்ட இளநீர். அரவிந்தன் அழகன். உள்ளத்தை அல்ல, உணர்வுகளை நிறைக்கும் அழகு அவனுடையது. இரசாயனத்தில் பட்டம் பெற்ற அவன் ஆராய்ச்சி செய்து வந்தான். அமைதியான தன்மை. அடக்கமான தோற்றம். பொதுவாகச் சொன்னால் தமிழன் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்ந்து வந்தான். செந்திருவின் நீட்டிய கரங்களில் திணிக்கப் பட்டது மற்றொரு இளநீர். அதைத் திணித்தவன், அவள் சின்ன அத்தான் அருள். செயற்கையாக வாரப்பட்ட தலைமுடி. அன்றைய நாகரிகத்தின் உயர்வைக் காட்டும், ஆனால் உயர்ந்தோரின் உள்ளத்தைக் கூடத் தொடமுடியாத ஆடை அணிகள், புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை வாயிலிருந்து எடுக்காமலேயே பேசும் ஆற்றல் - இத்தனையும் குடி கொண்டிருந்தது அவனிடம். கல்லூரியைப் பொழுது போக்குச் சாலையாகக் கொண்ட அந்த உல்லாசச் சிட்டை ''இரும்புக் கடை அருணாசலத்திற்கு இப்படி ஒரு பிள்ளை பிறந்திருக்க வேண்டாம்'' என்று ஊரே தூற்றியது.

திகைத்து நின்ற செந்திரு ஒரு கணத்தில் சமாளித்துக் கொண்டாள். அரவிந்தன் இளனியிலிருந்து நீரையும், அருளின் இளனியிலிருந்து வழுவலையும் எடுத்துக்கொண்டு சிரித்தாள்.

சிறு வயதிலிருந்தே, தாயை இழந்த செந்திரு தன் மாமன் வீட்டில் வளர ஆரம்பித்துப் பெண் இல்லாத குறையைத் தீர்த்து வந்தாள். அருணாசலமும் தங்கம்மாளும் கண் எனக் காத்தனர் அவளை. சிறு வயதிலிருந்தே அரவிந்தன்-செந்திரு-அருள் மூவரும் ஒன்றாக வளர்ந்தனர். அருளின் அடங்காப் பிடாரித் தனத்திற்குச் செந்திரு ஒருத்தியால் தான் மருந்து கொடுக்க முடிந்தது. இளம் வயதிலிருந்தே அப்படியொரு பிணைப்பு, அவளிடம்.

அன்று காலை குளியலறையிலிருந்து திரும்பிய அரவிந்தனையும், அவனுக்குச் சிற்றுண்டி கொண்டுசென்ற மருமகளையும் கண்ட தங்கம்மாள், இரும்பு நிலவரம் பார்ப்பதற்காகச் செய்தித்தாளில் மூழ்கி விட்டிருந்த அருணாசலத்தை இவ் வுலகத்திற்கு அழைத்து வந்தாள். உடனே ''என்னங்க உங்க மனசு இரும்பா? எஃகா? அந்தக் குழந்தைகள் இரண்டும் வளர்ந்திட்டே போகுது. சீக்கிரம் ஒரு கல்யாணத்தைச் செய்யுங்க. அருள்தான் இன்னும் 'சின்னப் பிள்ளை'' என்று உபதேசிக்கத் துவங்கிவிட்டாள். அருணாசலமும் ''அதுக்கென்ன தைமாசம் வைச்சுட்டா போச்சு'' என்று முடிவு கூறிவிட்டார்.

இந்த உரையாடல் மூன்று உள்ளங்களிலும் எதிரொலிக்கத்தான் செய்தது. அவள் தன் இரசாயன ஆராய்ச்சியில் உதவுவதாக அரவிந்தன் கனவு கண்டான். அருள் ஒரு பெரிய கண்ணாடிப் பூச்சாடியை ஆத்திரத்துடன் எடுத்து எறிந்துவிட்டு வெளியில் ஓடினான். செந்திருவின் உள்ளம்! யாருக்குத் தெரியும்?

அன்றுமாலை அரவிந்தனும், செந்திருவும் ஆராய்ச்சிச் சாலைக்குச் சென்றனர். வழியெல்லாம் பேசிக்கொண்டு வரும் அவள் அன்று பேசவில்லை. ஆராய்ச்சிக் கூடம் திறக்கவில்லை இன்னும். பணியாளிடம் சாவி கொண்டு வரும்படிப் பணித்துவிட்டு இருவரும் தோட்டத்தை நோக்கிச் சென்றனர். மரகதமணியில் பதிக்கப்பட்ட வைரத்தைப் போல் பசியபுல் தரையில் தடாகம் இருந்தது. செயற்கை நீரூற்று மேல் எழும்பி வண்ண, வண்ண நீர்த்தாரைகளை நழுவ விட்டுக் கொண்டிருந்தது.

தோட்டத்தில் சிதறிக்கிடந்த பாதிரிப் பூக்களைச் சேர்த்துப் பட்டுப் போன்ற வாழை நாரில் தொடுக்கத் தொடங்கினாள் செந்திரு. தினமும் நிகழும் நிகழ்ச்சிதான். மெல்லிய இளந் தென்றல் சுமந்துவந்த பாதிரி மலரின் மணத்தை நுகர்ந்தவாறு, அவள் செங்காந்தள் விரல்களையே கண்ணிமைக்காது, பார்த்துக் கொண்டிருந்தான் அவன். விரல்கள் தொடுக்கத் தொடங்கின. மேல் வரிசையில் ஒன்று, கீழ் வரிசையில் ஒன்று இரண்டையும் முடிந்து இணைத்தாள். சாதாரண நிகழ்ச்சிதான்.

மேல்வரிசையில் ஒரு பூவை வைத்துவிட்டு அதற்கு இணையாகக் கீழ்வரிசையில் இணைக்கச் சென்ற அவள் விரல்கள் அதைக் கீழே வைத்துவிட்டு வேறு பூவை இணைத்தது. ஏன் இந்த மாற்றம்? வாழ்க்கையில் ஒன்றுசேர வேண்டும் என்று எண்ணும் இணைகள் விதியால் பிரிக்கப்பட்டு விடுகின்றனவே! அவள் மெல்லச் சிரித்தவாறு இரண்டு மலர்களைத் தேடி இணைத்தாள். இறைவா! உன் படைப்பில்தான் என்ன விந்தை! இருவர் இணையவேண்டுமென்று திட்டமிட்டு இணைக்கிறாயே, அதுவும் அழகிய மலர்களைப் போல் எல்லாப் பொருத்தங்களும் நிறையும் படி, என்று சிந்தித்தான் அவன். அடுத்து அவள் விரல்கள் மேல் வரிசையில் ஒரு நல்ல பூவையும் கீழ்வரிசையில் ஒரு சிதைந்த மலரையும் இணைத்தன. உலகில் ஆணும் பெண்ணும் உறுப்பாலோ, உள்ளத்தாலோ, யாராவது ஒருவர் குறையுடையவராக இருந்தபோதும் திருமணம் இணைத்து விடுகின்றதே! மீண்டும் கவனித்தான் அவன். சில மலர்கள் சாதாரணமாகவே இணைக்கப்பட்டு வந்தன. இன்று உலகில் பலர் இப்படித்தான் குறிக்கோளின்றி, இல்லறத்தின் கடமையுணராமல் வாழ்கின்றனர். அழுந்த முடியிட்ட அவள் விரைந்து இழுக்கிறாள். அறுபட்டு, ஒரு மலர், அல்ல, இரு மலர்களும் விழுந்து விடுகின்றன. என்னே விதியின் விளையாட்டு! எத்தனை இணைகளின் வாழ்க்கை அரைகுறையாக முடிந்து விடுகின்றது.

சிந்தனை முடிந்த அரவிந்தன் சிரித்தான். ''என்ன அத்தான் சிரிக்கிறீர்கள்'' என்ற அவள் வினவிற்கு, ''ஒன்றுமில்லை உலகத்தைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி எண்ணிக்கொண்டு இருந்தேன்'' என்று பதில் கூறிவிட்டு மௌனமானான். சில விநாடிகளுக்குப் பின் அவனிடமிருந்து ''செந்திரு என்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதமா?'' என்று எழுந்த வினவுக்கு விடையளிக்க அவள் இதழ்கள் பிரிந்த நேரத்தில் சாவியுடன் வேலையாள் வரவே இதழ்கள் மீண்டும் மூடிக்கொண்டன. என்ன முடிவு சொல்ல வாயசைத்தாளோ, யாருக்குத் தெரியும்?

சோதனைச்சாலை! இவ்வுலக நினைவின்றி இயங்கிக் கொண்டிருந்தான் அவன். கண்ணாடிக் குடுவைகளில் கலவைகள் கொதித்துக் கொண்டிருந்தன. ''செந்திரு! இந்தமாத இறுதிக்குள் சோதனைகள் முடிந்து எனக்கு டாக்டர் பட்டம் கிடைத்து விடும். பிறகுதான் திருமணம். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டவாறு திரும்பினான். நினைப்பெல்லாம் நடப்பதில்லையே! கண்ணை குருடாக்குவது போன்று ஓர் ஒளி! அதைத் தொடர்ந்து அவனது பயங்கர அலறல், கண்ணாடி வெடிக்கும் ஓசை! அதை அடுத்து அமைதி! அமைதி! எல்லாம் முடிந்துவிட்டநிலையான அமைதி! எந்தக் காரணத்திற்காக அரவிந்தன் என்று பெயர் சூட்டப்பட்டதோ, அந்த அரவிந்தனின் தாமரை முகம் சிதைந்து கிடந்தது. செந்திருவின் கதறலை அந்த ஆராய்ச்சிக் கூடம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அவள் எதற்காக அழுதாளோ? தனக்குக் கணவனாக

வரவிருப்பவன் சிதைந்துவிட்ட இழப்புக்காகவா? அல்லது இதயத்திற்கு மற்றோர் இதயம் காட்டும் இரக்கத்தாலா? இருமுறை சில் என்றால் நடமாடும் பிணத்திற்கு அருணாசலத்தை உவமை கூறலாம். செந்திரு! அவள் நிலையை எப்படித்தான் கூறுவது?

மழை அரசன் தன் சாரலைத் தெளித்துச் சென்றான். அன்று ஆட்டமும் ஆரவாரமுமாக இருந்த அந்த மாளிகை இருண்டு கிடந்தது. தங்கம்மாளைச் சோகச் உண்டாள். மனமார அல்ல! வயிறார. நடந்தாள்! எதையோ பறிகொடுத்தவளைப் போல. சிரித்தாள்! அதில் சீவனில்லை.

அருள்! அவன் நிலை? முகத்தில் மண்டிக் கிடந்த தாடியும், மெலிந்து வந்த உடலும், சிவந்து தோன்றும் கண்களும், அவன்

கணக்கில் ஆறு இலக்கங்களில் ஏறிவிட்ட பணத்தின் எண்ணிக்கையும், அவன் போக்கைக் கண்ணாடி எனக் காட்டிக் கொண்டிருந்தன. அவன் திருந்த வழி?

காலை! மணி ஏழு. கையில் பால் குவளையுடன் மாடியேறிச் சென்றாள் செந்திரு. அருளின் அறைக்குள் நுழைந்து அடுத்த அறையின் இடைக் கதவைத் திறந்தாள். காலடி ஓசை கேட்டுத் திரும்பியது ஓர் உருவம். அது அ–ர-வி-ந்-த-ன்! உயிர் ஓடிக் கொண்டிருந்த கூடு அவன். முகத்தில் கண்களும், மூக்கும், வாயும் இருக்கவேண்டிய இடங்களைத் தேடித்தான் அறிய வேண்டும். விபத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி அவன் கால்களை முடக்கிவிட்டது. குனிந்து முகத்தருகே நோக்கினால், கண்கள் இருக்கவேண்டிய இடத்தில் சிவந்த மாமிசப் பகுதி தான் இருந்தது. ஆம்! அவன் குருடன்! விதி அவனைக் காப்பாற்றி விட்டது, இந்த உலகின் துன்பங்களை அனுபவிக்க! செந்திரு மட்டும் இல்லாதிருந்தால் அவன் அன்றே அழிந்திருப்பான். அவனைப் பால் அருந்தச் செய்து விட்டுத் திரும்பிய அவள் கண்களில் அருளின் தள்ளாடிய நடை தென்பட்டது. அழுதாள் அவள். ஏன் அழுதாள்? சொல்ல முடியுமா?

இரவு மணி இரண்டு! அழுது முடித்த குழந்தையின் கன்னங்களில் அழுகை நின்ற பிறகும் கண்ணீர் வழிவதைப் போல, வானம் பொழிவது நின்றபிறகும், தரையில் நீர் ஓடிக் கொண்டிருந்தது. வேதனையிலிருந்து விடுபட்ட அரவிந்தன் அப்போதுதான் உறங்கத் தொடங்கினான். அருகிலிருந்த சாய்வு நாற்காலியில் அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள் செந்திரு. அவள் எதிரில் பெரிய புராணம் விரிந்து கிடந்தது.

''அபயா புராணத்தில்'' திலகவதி தனக்குக் கணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் களத்தில் வீழ்ந்தபோது, தானும் வாழ்வை முடித்துக்கொள்ள முடிவு செய்த இடத்தைக் குறிக்கும் வரிகள் சிவப்பு மையால் கோடிடப்பட்டிருந்தன. தொழு நோயால் துன்புறும் கணவனைத் தலையில் சுமந்துசென்ற நளாயினி வாழ்ந்த நாட்டில் வாழும் செந்திரு இதைக் கோடிட்டிருப்பாளா?

யாரோ மாடி ஏறிவரும் ஓசை அவளை விழிக்கச் செய்தது. நடைபாதையில் அருள் தள்ளாடியவாறு, நனைந்த உடலுடன் மட்டரகமான சினிமாப் பாட்டைப் பாடியவாறு தன் அறைக்குச் சென்று கொண்டிருந்தான். அவனறியாது பின்தொடர்ந்தாள் நங்கை.

''இன்னைக்கி பத்மா, நாளைக்கிக் காமினி, அப்புறம் சரசு,''எல்லாம் வண்ண மலர்கள்! புதிய மலர்கள்! செந்திரு! நீ இல்லாவிட்டால் என்னால் வாழமுடியாது என்று நினைக்கிறாயா? எனக்கென்ன குறை? குடித்ததும் போதைவரும் மது இருக்கிறது. கூடியதும் போதை தெளியும் மங்கையர் இருக்கிறார்கள். பெண் குலம்—! அதைச் சிதைப்பதே என் இன்பம். மஞ்சு! எப்போ கல்யாணம் என்று கேட்டாய்? பைத்தியக்காரி'' என்றவாறு தள்ளாடி நடந்தான் அவன். பின் தொடர்ந்த அவள் அழுதாள். தன்னை மணக்க முடியாமல் சிதைந்துவிட்ட அவனுக்காகவா? அவனால் சிதைந்த பெண்களுக்காகவா! அதை அவளே அறிவாள்.

அரவிந்தனின் இருமல் அழைத்தது அவளை; ஓடிச்சென்று மருந்தூட்டினாள். அடுத்த அறையிலிருந்து அருளின் புலம்பல் அடிக்கடி எழுந்து கொண்டே இருந்தது. அருளா? அரவிந்தனா? வினாக்குறி சுழன்றது அவள் நெஞ்சில். சாரலில் 'நனைந்தவாறு நடை பயின்றாள். குளிர்ந்த மழைத்துளிகள் கொதிக்கும் உள்ளத்திற்கு இதமாக இருந்தன. அருளின் அறையைக் கடக்கும் போது அவன் நிலைக்கு இரங்கிய அவள் மனம், பெரியவனின் அறை எதிரில் வந்தபோது இரக்கத்தால் இளகியது. அருளா? அரவிந்தனா? மனத்தராசு ஏறி, ஏறி இறங்கியது. விடி வெள்ளி தோன்றிவிட்டது. வழக்கம் போல் அரவிந்தனைக் கவனித்து விட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

சவக்களை படிந்த முகத்துடன் கட்டிலில் கிடந்தார் அருணாசலம். அருகில் வந்து நின்ற செந்திரு ''மாமா!'' என்று அழைத்தாள். ''என்னம்மா'' என்றார் அவர் கவலையுடன். ''அருள் அத்தானைக் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்துவிட்டேன். வேண்டியதைச் செய்யுங்கள்'' என்று கூறிவிட்டுப் பதிலை எதிர் நோக்காமல் அகன்றாள். ஒழுக்கமற்ற இளைய மகனைப் பற்றி ஊரார் தொடுக்கும் சொற்கணைகளை ஏற்கச் சக்தியற்றுத் தற்கொலை செய்து கொள்ளக்கூட முடிவு செய்து விட்ட அவருக்கு செந்திரு மனிதப் பிறவியாகத் தோன்றவில்லை.

குடும்ப எங்களை வைத்துக் காப் பாற்றிய அந்தப் பெண் தெய் வம் சென்ற திக்கை நோக்கிக் கும்பிட்டார் அந்தப் பெரியவர்.

நாட்கள் நகர்ந்தன. திருமண ஏற்பாடுகள் அமைதியாக நடந்து கொண்டிருந்தன. செய்தியறிந்த வர் நாக்கு எலும்பில்லாததால் எப்படி, எப்படியோ புரண்டது. '' பெரியவனேடு சுத்திகிட்டி ருந்தா. அவன் குருடாளுன். அவனை ஒதுக்கிட்டு சின்னவனை, அந்தக் குடிகாரனைக் கட்டிக்கப் போரு. குடிமயக்கத்தில் இவள் என்ன செய்தால் தான் அவனுக் குத் தெரியப் போகிறது. பணம் பேசுகிறதய்யா பணம்'', என்று இப்படியெல்லாம் பேசியது. அந் தப் பொல்லாத நாக்கு.

இப்பொழுது அருள் மாறிக் கொண்டு வந்தான். அன்றும் வழ கம் போல் அவள் அரவிந்தனுக்கு மருந்து கொடுக்கச் சென்ருள். எப்பொழுதும் வாய் மூடிக் கிடக் கும் அவன் அன்று அவளைப் பெயர் சொல்லி அழைத்தான். இந்த அழைப்பு, அதன் குழைவு, அன்று மாமல்லபுரத்தில் அழைத்ததைப் போல் இருந்தது., என்ன? என்று கேட்பது போல் திரும்பி ளுள் அவள். கண்கள் நீரைச் சொரிந்து கொண்டிருந்தன. '' எல்லாவற்றையும் பறித்த இறைவன் வாயையாவது கொடுத் தானே! நன்றி!'', என்று சிரித்து விட்டுத் தொடர்ந்தான். அவள் தேம்பல் அவன் செவிகளை நனைத் தது. ''அழுகிருயா அம்மா!

அழகைத் தரு எனக்கு எல்லாப் பெரு யும் அப்பா சொன்ஞர். எனக்கு உன்னைப் பற்றித் தெரியாதா? என் உறுப்பின் குறை என் உடலை மட்டும் தான் பாதிக்கும். ஆளுல் என் தம்பியின் உள்ளக் குறை சமுதாயத்தை, குறிப்பாகப் பெண் இனத்தைப் பாதித்து விடும். என்னுடைய கால்களை எப்போதாவது குணப்படுத்திவிட முடியும். பழக்கப்பட்ட இட மாகையால் கண் குருடும் பழகி விடும். என்னைக் கவனிக்க அம்மாவும் வேலைக்காரர்களும் உள்ளனர். ஆளுல்! அருள்? அவன் உள்ளம் முடமாகி விட்டால்? அவன் மனச்சான்று குருடாகி விட்டால் அதை நேராக் கவே முடியாது. எனக்கு உடலில் ஊனம்! அவனுக்கு உள்ளத்தில் ஊனம்! ஆகவே நீ அவனைத்தான் மணக்க வேண்டும். அதுதான் பெண்மைத்தியாகம். கற்பின் பொருள் என்ன என்றே தெரி யாத, ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவென்று வைத்த அதன் இலக்கணத்தை அழித்துக் கொண்ட ஒருவனை நீ மணப்பது தான் முழுமை பெற்ற தியாகம். என்னை மணப்பதல்ல தியாகம். நீ அறிவு மிக்கவள்! நீ உள்ளத்தில் செய்த போராட்டத்தை நான் வெளியில் கூறிவிட்டேன்.

'' அன்று அருள் உளறியதை நானும் கேட்டேன். விரைவில் நீயும் அவனும் மணந்து கொள்ள வேண்டும். அப்போது நான் அமைதியடைவேன். '' என்று நீண்ட தொரு உரையாற்றிக் களைத்தான் அவன்.

செந்திரு இன்னும் அழுது கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் அழுகைக்குப் பொருள் உண்டு. உள்ளத்தால் குறைபட்ட ஒருவனுக்கு வாழ்வைக் கொடுக்க முடிந்த தன்னால், உடலால் மட்டும் முடமான ஓர் உயர்ந்த சீவனுக்குத் துணை நிற்க முடியவில்லையே என்று அழுதாள். பெண்மையின் மனதில் மலர்ந்த அன்பு மலர் கண்ணீர்த் துளிகள் என்னும் மலர் இதழ்களை அந்த ஒளியற்ற கண்களின் மீது சொரிந்து கொண்டே இருந்தது.

வெனிசு நகரம் மூழ்கிக் கொண்டிருக்கிறது!

வெனிசு என்ன காகிதக் கப்பலா மூழ்குவதற்கு என்று நினைக்கிறீர்களா? உண்மை தான்! கடந்த ஐம்பது வருடத்தில 111 மில்லி மீட்டர்கள் (4 அங்குலம்) வெனிசு நகரம், கடல் நீருக்குள் அமிழ்ந்து விட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். குறிப்பாக நகரத்தின் இதயம் என்று கருதப்படும் 'செயிண்ட் மார்க்ஸ்' என்ற பெருங்கட்டிடம், ஏழு அங்குலம், நீரில் மூழ்கியிருக்கிறதாம்.

வெனிசு மூழ்குவதற்கு என்ன காரணம் என்று பார்க்குமுன், அந்நகரத்தின் அமைப்பைப் பற்றித் தெரிந்து கொள்வது முக்கியமானதாகும்.

370 சிறு சிறு தீவுகளின் மீது மரத்தூண்களை ஆழமாகச் செலுத்திக் கட்டப்பட்டிருக்கும் இந்த நகரத்தை, இத்தாலியோடு இணைப்பது, பாம்பன் பாலத்தைப்போல் கடல் நடுவே கட்டப்பட்டுள்ள ஒரு பாலமாகும்! இதில் ரயிலோடு, மற்ற வாகனங்களும் செல்லலாம். காரில் வெனிசுக்குப் போகிறவர்கள், நகரத்தின் முகப்பிலேயே அவைகளை நிறுத்தியாக வேண்டும். ஏனென்று கேட்கிறீர்களா? காரில் சென்றால் நகரத்திற்குள் போவதற்குப் பாதைகளேது? தீவுகளின் குறுக்கே ஓடிக்கொண்டிருக்கும் கால்வாய்கள் தான், நகரத்தின் சாலைகள், தெருக்கள், சந்துகள் எல்லாம்! **'எஸ்'** வடிவமுள்ள பெருங் கால்வாய் ஒன்று நகரத்தை இரு பிரிவாகப் பிரிக்கிறது.



கடல் நீரின் மட்டத்தையும், நீரோட்டத்தையும் முன்கூட்டியே ஆராய்ந்து, நிபுணர்கள் கட்டிய இந்நகரம் 'மிதக்கும் நகரம்' என்ற சிறப்புப் பெயர் பெற்றதில் வியப்பில்லைதான்.

நகரத்தின் அருகிலிருந்து 'லிடோ' கடற்கரை மணலை எடுத்து, கடலில் கொஞ்சதூரத்தில்கொட்டி 'புந்தா சப்பியானி' என்ற பெயரில் ஒருபுதுகடற்கரையைஅமைத்துவருகிறார்கள்.

வெனிசு நகரத்தில், மக்கட் தொகை பெருகப் பெருக, போக்குவரத்து வசதிகளுக்காகச்செயற்கையான சில கால்வாய்களை அமைத்திருக்கிறார்கள். இதனாலும், முன்பிருந்தசில கால்வாய்களை ஆழமாகத் தோண்டியதாலும், இயற்கையாக இருந்து வந்த நகரின் சமன் கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

நூற்றுக்கணக்கான வருடங்களாய் உப்பு நீரின் அரிப்பினால், பெரும்பாலான கட்டிடங்களின் அஸ்திவாரங்கள் பலமிழந்து நிற்கின்றன. கணக்கற்ற மோட்டார் படகுகளிலிருந்து சிந்தும் எண்ணெய், கால்வாய் நீரின், அரிப்புச் சக்தியை வேறு அதிகமாக்கியிருக்கிறது.

'சாண்ட் ஆண்டிரியா' என்ற சரித்திரப் புகழ்பெற்ற கோட்டையின் பெருஞ் சுவர்கள் இடிந்து விழுந்துவிட்டன. வெனிசு மூழ்கி வருகிறது என்பதை அறிவிக்க இந்த ஒரு சான்றே போதுமானது.

எண்ணற்ற கலைப்பொருள்களும், வியப்பூட்டும் கட்டிடங்களும் கடலுக்குப் பலியாகாமல் தடுப்பதற்கு ஒரே வழி, அதிகமான மக்கள் இனியேனும் வெனிசு நகரத்தில் குடியேறாமல் செய்வதொன்றேதான்.!

— முத்து.

பூமி பெரியதா? சிறியதா?
பூமி பெரியது.
பூமி சிறியது.

நமது கண்டத்தினைவிடப் பூமி பெரியது. நமது நாட்டை விட மிகப் பெரியது.

நமது சென்னை நகரத்தைக் காட்டிலும் மிக மிகப் பெரியது.

நமது கிராமங்களோடு ஒப்பிட்டால் அது அளவிடற்கரியது.

பூமி சிறியது.

சூரியனை விட மிகச் சிறியது. சூரியனில் சுமார் 10 லட்சம் பூமிகளை அடக்கி விடலாமே!

சூரியன் நட்சத்திரங்களை விடச் சிறியது.

நட்சத்திரத்தைக் காட்டிலும் பூமி மிக மிகச் சிறியது.

அண்ட வெளியை எண்ணிப் பார்த்தால் பூமி ஒரு சிறு துரும்பு. பெரிய பெரிய நட்சத்திரங்கள் இருக்கின்றன. நமது சூரிய குடும்பத்தைச் சார்ந்த நட்சத்திரக் கூட்டம் உள்ளது. அது பால்வழி எனப்படும். அதிலே மட்டும் நான்கு ஆயிரம் கோடி நட்சத்திரங்கள் உள்ளன. கோயிலில் கோடி அர்ச்சனை நடைபெறுவது உண்டு. கோடி அர்ச்சனை முடியச் சில நாட்கள் ஆகும். ஒவ்வொரு நட்சத்திரமாக வாயாலே உச்சரித்துக்கொண்டே வந்தால் நாம் சொல்லி முடிக்க ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகும். ஆகவே இதிலிருந்து நட்சத்திரக் கூட்டத்திலே வைத்துப் பார்த்தால் பூமி எவ்வளவு சிறியதாக விளங்கும் என்பது புலனாகும்.

கடல் எவ்வளவு பெரியது. அதிலே கிளிஞ்சல் எவ்வளவு சிறியது. பிரபஞ்சம் பெரிய கடல் போன்றது. அதிலே ஒரு கிளிஞ்சல் போன்றதுதான் பூமி. கடற்கரை பெரியதாக இருக்கிறது. அதிலே ஒரு காசினை விட்டு எறிகிறோம். காசு எத்தனை சிறியதாக இருக்கும். கடற்கரை எவ்வளவு பெரியதாக இருக்கும். அண்ட வெளியோடு ஒப்பிட்டால் கடற்கரையிலே கிடக்கிற காசு போலத்தான் இருக்கும் பூமி.

பூமி ஓர் உருண்டை. ஆனால் ஒரு காலத்தில் பூமி தட்டையானது என்று நினைத்தனர். அது தட்டை அன்று. உருண்டை வடிவம் கொண்டது. அது உருண்டையானது தான் என்று எப்படிக் கண்டு பிடிப்பது?

கடற்கரையில் நின்று கொண்டு இருக்கிறோம். கடலில் கப்பல் வருகின்றது. எப்படித் தெரியும்? முதலில் கப்பல் விடுகிற புகையைப் பார்க்கலாம். பிறகு அதன் மேற்பகுதியினைக் காணலாம். அதற்குப் பிறகு கப்பல் மேலும் பக்கத்திற்கு வந்ததும் முழுவதும் தெரிகின்றது. எதனால்? பூமி உருண்டை வடிவம் கொண்டது அதனால். பூமி தட்டையானதாக இருந்தால் நேரடியாக முழுக்கப்பலையும் ஒரேயடியாகப் பார்த்து விடலாமே. இதிலே இருந்து பூமி தட்டை அன்று என்று உணரலாம்.



பூமி சூரியனைச் சுற்றிச் சுற்றி வருகின்றபோது அதனுடைய தூரம் சமமாக இருக்கின்றது. அதிக வித்தியாசம் இல்லாமல் இருக்கின்றது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரம் அதிகம் மாறுபடாமல் உள்ளது. இதிலே இருந்தும் பூமி உருண்டையானது, தட்டையானது அன்று என்று உணரலாம்.

சந்திரகிரகணம் ஏற்படுகின்றது. கிரகணம் ஏற்படுகின்ற காரணம் எல்லோருக்கும் தெரியும். பூமியின் நிழலால் தான் கிரகணம் உண்டாகின்றது. சந்திரன் மீது பூமியின் நிழல் விழும் அல்லவா? அது ஒரு வட்டத்தின் வில் போல இருக்கும். வட்டத்தின் ஒரு பகுதியினைப் பார்க்க முடிகிறது. எனவே இதிலே இருந்தும் பூமி உருண்டையானது என்று உணரலாம்.

ஒரு ஆரஞ்சுப்பழம் இருக்கின்றது. ஒரு எறும்பு அதனைச் சுற்றி வருகின்றது. ஒரு சுற்றுச் சுற்றினால் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரும் அல்லவா? அதே போலப் பூமியிலே ஏதாவது ஒரு இடத்திலே இருந்து புறப்பட்டால் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரலாம். எந்தத் திக்கிலே பயணம் சென்றாலும் புறப்பட்ட இடத்தினையே அடையலாம். கப்பலிலேயோ, விமானத்திலோ செல்லலாம். இது உண்மை என்று பலமுறை மெய்ப்பிக்கப்பட்டு உள்ளது. ஆகவே பூமி உருண்டை என்று உணரலாம். எப்படி எறும்பு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருமோ, அதே போல மனிதனும் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருவான். ஆரஞ்சுப் பழம் உருண்டை. அதனால் எறும்பால் அதனை சாதிக்க முடிகிறது. பூமியும் உருண்டையாக இருப்பதால் தான் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர முடிகின்றது.

மிகப் பெரிய ஏரி ஒன்று உள்ளது. அதிகச் சலனம் இல்லாததாக இருக்கின்றது. ஒரே அளவுள்ள மூன்று கம்பங்களை நடுகிறோம். என்று கொள்வோம். ஒவ்வொன்றும் ஒரு மைல் தொலைவில் உள்ளது போல் அமைக்க வேண்டும்.

தண்ணீர் மட்டத்திற்கு மேலே கம்பங்கள் இருக்கும். சற்றுத் தொலைவில். இருந்து தொலை நோக்கியில் பார்க்கும் போது அவை எப்படித் தெரியும்? ஒவ்வொன்றும் வித்தியாசம் உடையது போலத் தெரியும். ஒரே அளவுள்ள கம்பங்கள் வேறுபட்டுத் தெரிவானேன்! பூமி உருண்டையாக இருப்பதால் தான் அப்படித் தெரிகின்றன.

பூமியின் வட்ட வடிவத்தின் காரணமாகக் கிழக்கிலேயும் மேற்கிலேயும் வேறு வேறு நேரம் இருக்கின்றது. இதிலே இருந்தும் பூமி உருண்டை என்று தெரியலாம்.

ஏவுகணைகளிலே இருந்து நமது பூமியினைப் புகைப்படம் எடுக்கலாம். எடுத்து உள்ளனர். வானவெளிக்கப்பல் இருக்கிறது. அது பூமியின் மேற்பரப்பைப் படம் எடுத்து உள்ளது. அந்தப் படம் எப்படி உள்ளது தெரியுமா? உருண்டை வடிவத்திலே ஒரு பகுதி போல் விளங்குகின்றது.

வடதுருவத்திலும் தென் துருவத்திலும் பூமி சற்று தட்டையாக இருக்கின்றது. அது தவிர பூமி கோள வடிவம் அமைந்தது என்பது ஐயமறத் தெளிவாகி விட்டது.

நாம் ஒரு இடத்திலே நிற்கிறோம். சுற்று முற்றும் பார்த்தால் பூமி தட்டையானது போல இருக்கிறது என்ற தவறான எண்ணம் தோன்றும். நமக்கே அந்த எண்ணம் தோன்றினால் அந்தக் கால மக்கள் பூமி தட்டையானது என்று வாதித்ததில் ஆச்சரியம் இல்லை அல்லவா? பூமி உருண்டையானது என்பதை நம்ப மறுத்ததில் வியப்பு இல்லையே? பூமி உருண்டை என்று சொன்னவரைத் தொல்லைக்கு உள்ளாக்கியதில் அதிசயம் இல்லையே.

பூமி உருண்டையாக இருக்க முடியாது என்று நம்பினார்கள். உண்மைதான்! பூமி உருண்டை இல்லைதான்! ஏன் வியப்பாக இருக்கிறதா? பந்து உருண்டையாக இருக்கிறது. பூமி பந்தைப் போல வட்ட வடிவம் கொண்டதா? அப்படித் தான் சென்ற நூற்றாண்டில் கருதி வந்தனர். ஏன்? இந்த நூற்றாண்டின் துவக்கத்திலும் எண்ணி வந்தனர். லட்டு உருண்டையாக இருக்கிறது. லட்டு போன்ற உருண்டை வடிவம் கொண்டதா பூமி. அப்படித்தான் இது வரையிலும் எண்ணி வந்தனர். ஆனால் அந்த எண்ணத்தில் மாறுதல் ஏற்பட்டு உள்ளது.

கதவிற்கு உருண்டையான கைப்பிடி இருக்கும் அல்லவா? அதைப் போன்ற வடிவம் கொண்டது தான் பூமி என்கின்றனர். ஆனால் நாம் உருண்டை என்றே கொள்ளுவது விளக்கமாகத் தெரிந்து கொள்ளுவதற்குத் துணை செய்யும்.

கிரேக்க அறிஞர்கள் வான இயலில் முன்னணியில் நிற்கின்றனர். முதன் முதலில் பூமி உருண்டையானது என்ற கருத்தை வெளியிட்டவர் ஒரு அறிஞர். அவர் பெயர் பித்தாகரஸ் என்பது ஆகும். ஆனால் முதன்முதலாக அளவெடுத்தவர் வேறு ஒரு அறிஞர் ஏராஸ்தெனஸ் என்பது ஆகும்.

சூரியனுடைய நிலையை ஆராய்ந்தார். அது பகலில் எவ்விதம் விளங்குகின்றது என்று கவனித்தார். உச்சிப் பொழுதில் எவ்வாறு உள்ளது என்று கண்டு அறிந்தார். நைல் நதித் தீரத்தில் அஸ்வான் என்று ஒரு இடம் உள்ளது.

தூரத்தைக் கணக்கிட மைல் என்கிறோம். கிரேக்கர் ஸ்டேடியா என்ற அளவால் குறித்தனர். 5000 ஸ்டேடியா தூரத்தில் அலெக்சாண்டிரியா என்ற இடம் உள்ளது. இரண்டு இடங்களிலே இருந்து உச்சிப் பொழுதில் சூரியனின் நிலையைக் கணக்கிட்டார். சூரியன் இருக்கும் கோணத்தையும் கண்டுபிடித்தார். கோணத்திலே ஏற்படுகின்ற வேறுபாட்டினைக் குறித்துக் கொண்டார். அவர் கண்டுபிடித்த வட்டத்தில் சுமார் ஐம்பதில் ஒரு பங்கு இருக்க வேண்டும் என்று முடிவு கட்டினார். இரண்டு இடங்களுக்கு இடையில் உள்ள தூரமும் ஐம்பதில் ஒரு பாகமும் சமம் என்று கண்டார். ஆகவே

பூமி உருண்டையாக இருப்பின் அதன் சுற்றளவு எவ்வளவு என்பதை அவர் கண்டறிய முயன்றது. ஐம்பதில் ஒரு பாகம் 5000 கிரேக்க மைல் எனில் சுற்றளவு அதைப் போல ஐம்பது மடங்கு என்றார். இரண்டையும் பெருக்கினால் 2,50,000 கிரேக்க மைல் என்று வரும். இதுவே பூமியின் சுற்றளவு என்றார். கிரேக்க மைல் என்பது 185 மீட்டர் ஆகும். ஆகவே பூமியின் சுற்றளவு 46,250 கிலோ மீட்டர் வருகின்றது. அதாவது அவர் கணக்குப்படி 28,800 மைல் ஆகின்றது. ஆனால் தற்போது 25,000 மைல்கள் என்று கணக்கிடப்பட்டு உள்ளது. சரியாக 24,860 மைல் வருகின்றது. அந்தக் காலத்தில் நல்ல கருவிகள் இருந்து இருக்காது. நுட்பமான அளவு கருவிகள் இருந்து இருக்காது. எனினும் 4,000 மைல் தான் வித்தியாசம். இது ஒன்றும் மிகப் பெரிய வித்தியாசம் என்று சொல்லி விட முடியாது.

பூமியைச் சுற்றி ஒரு பாதை இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். காரிலே பயணம் போகிறோம் என்று கொள்ளுவோம். ஒவ்வொரு நாளும் 300 மைல் செல்கிறோம். அப்போது எத்தனை நாட்கள் ஆகும். சுமார் 3 மாதங்கள் ஆகும்.

மணிக்கு 600 மைல் வேகத்தில் விமானத்தில் செல்லலாம். சுமார் இரண்டு நாட்களுக்குள் ஒரு சுற்றுச் சுற்றி விடலாம். நடந்தே சுற்ற வேண்டும் என்றால் ஒரு நாளைக்குப் பத்து மைல் நடந்தால் போதும். ஏறத்தாழ ஏழு வருடங்களுக்குள் ஒரு சுற்றுச் சுற்றி விடலாம்.

கோவையிலே இருந்து ஏழெட்டு முறை டில்லி போய் வருகிற தூரந்தான் இருக்கும்.

பூமியின் சுற்றளவு சுமார் 24,902 மைல்.

தையல்காரர் உடலின் சுற்றளவினை எடுப்பார். நாடாவால் அளப்பார். அதற்கு ஏற்றபடி சட்டை தைத்துக் கொடுப்பார். பூமியின் சுற்றளவை அளக்க எவ்வளவு பெரிய நாடா வேண்டும்.

பூமியின் சுற்றளவில் இரண்டு வகை உண்டு. ஒன்று, பூமத்திய ரேகையை ஒட்டி எடுப்பது. மற்ருென்று, துருவங்களைச் சுற்றி எடுப்பது.

பூமியின் இடுப்புப் போன்றது பூமத்திய ரேகை. பூமியின் இடுப்புப் பெருத்து இருக்கிறது. பூமத்திய ரேகையைச் சுற்றி அளவெடுத்தால் சிறிது அதிகமாக இருக்கும். ஏறத்தாழ 24,902 மைல் நீளமுள்ள நாடா வேண்டும். துருவங்களைச் சுற்றி அளந்தால் அதன் சுற்றளவு 24,860 மைல் ஆகும். சராசரி 24,881 மைல் எனலாம்.

பூமியின் சுற்றளவினை அறிந்து கொண்டோம். இனி பூமியின் விட்டம் எவ்வளவு என்று கண்டுபிடிக்க இயலுமா?

வட்டத்திற்கு விட்டம் உண்டு.

சக்கரத்திற்கு விட்டம் உண்டு.

பூமியின் விட்டத்தினை எவ்வாறு கண்டுபிடிப்பது? பூமியிலே கிணறு தோண்டுகிருேம். அதன் ஆழத்தைக் கண்டுபிடிக்க முடிகின்றது. பூமியின் மையத்தைக் கண்டுபிடித்தால் ஆரத்தினைக் கண்டுபிடித்து விடலாம். விட்டத்தினை அறிந்து கொண்டு விடலாம். இதுவரை மையம் வரையும் யாரும் தோண்டியது இல்லை. இப்போது தோண்டி உள்ளது எல்லாம் சிறுகீறல் போலத் தான்.

பூமியின் ஆரத்தை அளக்க ஒரு அளவு கோல் தேவை. பூமிக்குள்ளே செலுத்தத்தக்க அது எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும்? மிகவும் குறைவு தான். 7,926 மைல் நீளம் உள்ளதாக இருந்தால் போதும்!

பூமியினை இரண்டாக வெட்டினுல் அது எவ்வளவு இருக்கும்? நமது இந்தியாவைப் போல நான்கு இந்தியாக்களை வரிசையாக அடுக்கினுல் எவ்வளவு இருக்குமோ, அவ்வளவு தான். சந்திரனுடைய விட்டம் போல் நான்கு மடங்கு. சூரியனுடைய குறுக்களவு பூமியினுடையதைப் போல் சுமார் நூறு மடங்கு.

பூமியினுடைய விட்டம் சுமார் எட்டு ஆயிரம் மைல்கள் ஆகும். சரியாக 7,926 மைல்கள் ஆகும்.

இனி, பூமியின் பரப்பளவு எவ்வளவு என்று காண்போம்.

எட்டுக்கல் (பர்லாங்) தூரம் வடக்கே நடக்கிறோம். பிறகு அதே அளவு கிழக்கே செல்கிறோம். அப்புறம் எட்டுக் கல் தொலைவு தெற்கே போகிறோம். பின்னர் எட்டுக் கல் தூரம் மேற்கே நடக்கிறோம். ஏறத்தாழ ஒரு சதுர மைல் மேற்கே நடந்து இருப்போம். அல்லவா? பூமி எத்தனைச் சதுர மைல் பரப்புக் கொண்டது? அதன் மேற்பரப்பு 19.6 கோடி சதுர மைல் ஆகும். (196,940,000) பூமியின் பரப்பளவினைத் தெரிந்து கொண்டோம். அதிலே எத்தனைப் பங்கு நிலம்? எத்தனைப் பங்கு நீர்! பத்தில் மூன்று பங்கு நிலம். மீதம் உள்ளது நீர். அப்படியானால் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு? நீரின் பரப்பளவு எவ்வளவு? நிலத்தின் பரப்பு $5\frac{1}{2}$ கோடி சதுர மைல் ஆகும். இதிலே அன்டார்டிக் பகுதி கடுங்குளிர் கொண்டது. எனவே அங்கே யாரும் குடியேற முடியாத பகுதி. அதன் பரப்பு 51,00,000 சதுர மைல் ஆகும். இனி நீரின் பரப்பளவு எத்தனை என்று பார்ப்போம். சுமார் 14 கோடி சதுர மைல் எனலாம்.

பூமியை எடை போட யாரால் முடியும்.

நெற் குவியல் இருக்கிறது. அது இத்தனை டன் என்று சொல்லி விடுவோம். விறகு இருக்கிறது; குவித்து வைக்கப்பட்டு இருக்கிறது. பார்த்த எடுப்பிலேயே இவ்வளவு டன் என்று சொல்லி விடுவோம். அதே போல பூமி இத்தனை எடை என்று கண்டுபிடிக்க முடியுமா? முடியாது என்ற சொல்லே மனிதனின் அகராதியிலே கிடையாது. முயற்சி செய்கிற மனிதன் முடியுமா என்று பெருமூச்சு விடுவதில்லை. இயலுமா என ஏக்கம் கொள்வது இல்லை. முனைந்து ஈடுபடுவான். வெற்றிகரமாகச் செயல்படுவான். செய்து முடிப்பான், எப்படியேனும்.

பூமியின் எடையைக் கணக்ிடுவது எப்படி? அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தார் ஒரு அறிஞர். எதையும் எடை போடத் தராசு வேண்டும். அவர் தராசு இல்லாமல் எடையைக் கண்டுபிடிக்க முடியும் என்றார். அவர் ஒரு ஆங்கில வானநூல் அறிஞர். பெயர் நெவில் மாக்ஸ்லைன் என்பது. அவர் ஒரு சோதனை செய்தார். ஒரு மலையின் இருபுறத்திலும் செங்குத்தாகக் கயிற்றில் இரும்புக் குண்டு

களைக் கட்டித் தொங்க விட்டார். இரும்புக் குண்டின் சாய்வினைக் கவனித்தார். பூமியின் கவர்ச்சி சக்தியினைக் கணக்கிட்டார். அப்போதே மலைக்கு உள்ள கவர்ச்சி சக்தியினையும் கணக்கிட்டார். அதன் பிறகு மொத்த கன அளவினைக் கணக்கிட்டு அறிந்தார். பிறகு அந்த மலை எதனால் ஆகியது என்று அறிந்தார். அதன் செறிவினைக் கண்டு பிடித்தார். செறிவைப் பற்றியும் கன அளவைப்பற்றியும் நன்கு அறிந்தால் அதுவே எடையைப் பற்றி அறிய உதவும். மலையின் எடையைக் கணக்கிட்டுச் சொன்னார். பூமியின் எடையையும்



கணக்குப் போட்டு உரைத்தார். இவர் கண்டுபிடித்தது எடையை உணர்த்தினாலும் சரியானதாக இருக்க இல்லை.

இப்போது எடையைக் கண்டு பிடிக்க வேறு ஒரு வழி கையாளப் படுகின்றது. அதாவது பூமியின் இயல்புகள் கொண்ட ஒரு மாதிரி பூமி செய்யப்படும். அதனைக் கணக்கிட்டு அறிந்து கொள்வர். பிறகு பூமியின் எடையை அறிவர்.

அதன்படி பூமியின் எடை 6 கோடானுகோடானு கோடி டன் ஆகும். அதாவது 6,000,000,000,000,000,000 டன் ஆகும். திருத்தமாகக் கண்டறிந்து உள்ளனர். அது 5876000,000,000,000,000,000 டன் ஆகும்.

(தொடரும்)

சிங்கள முகமூடிகள்

திரு. ந. வேல்முருகு

மனிதனால் ஆக்கப்பட்ட முதன்முதல் சமய சம்பந்தமான உருவங்கள், முகமூடிகள் ஆகியவற்றில் சில கண்டுபிடிக்கப்பட முடியாத உருவ அமைப்புக்களுமாம். (The eternal present: The beginnings of art. By: S. Giedion P. 485) முகமூடிகள் சிங்கள மக்களால் ''வெஸ் மூன'' (Wess mohna) என அழைக்கப்படும். அதன் நேரடிக் கருத்து ''ஒன்றின் உருவம்'' என்பது. முகமூடிகள் பற்றிய விவரங்கள், மானிடவியல் அறிஞர்கட்கும், பண்டைய கலை பற்றியறிபவர்கட்கும், சரித்திரம் - புதை பொருள் ஆராய்ச்சி என்பனவற்றிற்கும் மிகவும், உதவும் ஒன்ருகும். இதன் மூலம் பண்பாடு, கலை உணர்வு சமய வாழ்வு முதலியவற்றையும் அறியலாம். சிங்கள முகமூடிகள் நடனங்கள், பொம்மலாட்டம், நாடகங்கள், மந்திரீக நடவடிக்கைகள் என்பனவற்றிற்கும் களிப்பூட்டும் சில ஊர்வலங்களிற்கும் உபயோகிக்கப்படுகின்றன.

பிற நாடுகளுடன் ஒப்புமை :

''சிங்களவரது விழாக்கால நடனங்கள்'' என்ற நூலில் டாக்டர் ஒ. பெரோல்ட் (''Ceremonial dances of the sinhalese"— by: Dr. O. Pertold) என்பவர் பின்வருமாறு எடுத்தியம்புகின்ருர். ''சிங்கள மக்களது முகமூடிகள் பெருமளவுக்குப் பண்டைய மக்களது (Primitive peoples) முகமூடிகளுடன் ஒத்துள்ளன. முக்கியமாக வேளாண்மை விழாக்களில் உபயோகிப்பவையுடன் ஒத்துள்ளன. பசிபிக் தீவுகளில் உபயோகிக்கப்படும் பண்டைய கலாச்சார முகமூடிகளுடன் அவை பெரிதும் ஒற்றுமையுடையனவாகவுள''.

டாக்டர் பெரோல்டின் கூற்றுக்கு ஆதாரமாக இருப்பது யாதெனில் முன் இந்தியா மற்றும்

திழை நாடுகளில் வாழ்ந்த மக்கள் படிப்படியாகப் பசிபிக் தீவுகளிற்குச் சென்றூர்கள் என்பது இங்கிருந்து அவர்கள் புலம்பெயர்ந்த பொழுது கலாச்சாரம், கலை என்பனவற்றையும் கொண்டு சென்றனர்.

இன்றைய பெரும்பான்மையான மானிடவியல் அறிஞர்களும் இதனை ஒப்புக் கொண்டுள்ளனர். சமய உணர்வு, தேவையின் அடிப்படை என்பனவற்றில் பொதுவாக எல்லா நாடுகளும் இணைந்தே காணப்படுகின்றன. இலங்கையில் எவ்வாறு பேய், பிசாசுகளைத் துரத்தவும், கெட்டவற்றை அகற்றவும், அவற்றிலிருந்து காக்கவும் முகமூடிகளை உபயோகிக்கின்றூர்களோ அதைப் போன்று சீனுவிலும் உபயோகிக்கின்றனர். சமாதிகளின் மேல் அங்குப் பேய்களதும், ஆவிகளதும் உருவங்கள் கெட்டவற்றிலிருந்து விடுபட வைக்கப்படுகின்றன. எக்ஸிமோக்களும் ஈழத்தில் உள்ளவர்களைப் போன்று மாயாஜாலங்கட்காகவும், ஆவிகளிற்காகவும் கிரிகைகள் புரிவதற்கென மரத்தால் செய்த முகமூடிகளை அணிகின்றனர். அவற்றில் சில இறகுகளால் அலங்கரிக்கப்படுகின்றன. அமெரிக்காவிலுள்ள இரோகூயுஸ் (Iroquois) சும் சமய சம்பந்தமான முகமூடிகளை மரத்தால் செய்து அவற்றில் சிறு துளைகளிட்டு மனித மயிர்களை அவற்றுள் செருகி கிரிகைகளுக்கு அணிகின்றனர்.

இலங்கையில் முகமூடிகள் மரத்தால் செய்யப்படுகின்றன. நியூபிரிட்டன் நியூகினியா, ஆகிய இடங்களில் செய்யப்படுவதைப் போன்று இங்கு மண்டை ஓடு முதலியன உபயோகிக்கப்படுவதில்லை. வட மேற்கு அமெரிக்க இந்தியர்களைப் போன்று புதிதாகச் செய்யப்பட்ட முகமூடிகளை மற்றவர்கட்குக் காட்டாது விடுவதோ அன்றித் தனி உரிமை பாராட்டி வேறு ஒருவரும் அதைப் போல் செய்ய விடாது தடுப்பதோ சிங்களவர்களின் மத்தியில் கிடையாது. இன்றும் ஈழத்தின் தெற்கு மாகாணங்களில் முக்கியமாக அம்பலாங்கொட முதலிய ஊர்களில் முகமூடிகள் செய்யப்படுகின்றன. முகமூடிகள் செய்வதற்கு (Kaduru-Ruk-Attena) முதலான மெல்லிய மரங்கள் தேவைப்படுகின்றன.

நிறங்கள் :

சிங்களவரால் செய்யப்படும் முகமூடிகட்குக் கண்களைப் பறிக்கும் நிறங்கள் கொடுக்கப்படுகின்றன. இவை ஆப்பிரிக்க மக்களின் முகமூடிகளது வர்ண வேலைப்பாடுகளை நினைவூட்டுகின்றனவாகவுள. மிகப் பழமையான முகமூடிகட்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வர்ணங்கள் இடப்படுகின்றன. அவை கனிப் பொருட்களும் தாவரங்களினது சாயங்களும் சேர்த்து உருவாக்கப்பட்டவை. புதிய முகமூடிகளுக்கு மெழுகு வர்ணமும் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் வண்ணங்கள் (Oil paints) பூசப்படுகின்றன. உள்ளூர் மரபுக்கு ஒப்பான முறையிலேயே அங்கங்களை அமைப்பதும், வர்ணம் பூசுவதும் விளங்குகின்றன.

மக்களின் தேவைகளின் அடிப்படையிலிருந்தே கலைகள் உருவாகின்றன. தனித்துக் கலைஞனது உள்ள நிறைவுக்காக மட்டுமன்றி சமூகத்தின் தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்யவே அவை எழுகின்றன. இயற்கைக்கு அப்பாற்பட்ட விடயங்களில் மனிதனுக்கு நம்பிக்கை வலுவுற்ற காலத்தில் இத்தகைய சமய சம்பந்த முகமூடிகள் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். எல்லாச் சமயங்களிலும் இத்தகைய இயற்கைக்கு அப்பாற்பட்ட விடயங்கள் விளங்கத்தான் செய்கின்றன. காணாத சக்திகளின் மேல் மனிதன் தங்கியுள்ளான். இரண்டு முக்கிய நோக்கங்களின் அடிப்படையின் சமய சம்பந்தமான மாயாஜால முகமூடிகள் எழுந்தன.

(1) இயற்கைக்கு அப்பாற்பட்ட விடயங்களில் மனித சக்தியை வலுவடையச் செய்தல்.

(2) மனோதத்துவ அடிப்படை. நம்பிக்கையின் அடிப்படையிலிருந்தே மனோதத்துவ அடிப்படைக் காரணிகள் விளங்குகின்றன. அதன்படி.

(3) அணிந்திருந்த முகமூடியின் புறத் தன்மையைத் தாம் அடைவதான நம்பிக்கை.

(3) அணிந்தவற்றின் சக்தியைத் தாம் அடைவதான எண்ணம்.

(4) இயற்கைக்கு அப்பாற்பட்டவற்றைத் தாம் சமாதானப்படுத்தி தமக்கு நன்மை புரிவிப்பதான மூட நம்பிக்கை.

(4) மிகப் பயங்கரமான உருவத்தைச் செய்வதினால் தமது எதிரிகள் வியாதிகளை உருவாக்கும் தேவதைகளை, காலநிலையை போக்கடித்து விடலாம் என்ற நினைப்பு என்பன.

தேவையின் அடிப்படையில் எவ்வாறு சிங்கள முகமூடிகள் எழுந்தன என்பதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாக மீன் பிடிக் காலங்களில் போதிய மீன்கள் பிடிபடா விட்டால் - செய்யப்படும் 'கனயக்குமா' என்ற கிரிகை முக்கியமானது. இதில் கறயக்காவினது (Garayaka) முகமூடி உபயோகிக்கப் படுகின்றது. இதே விதமாக விவசாய சம்பந்தமாக வட மேற்கு அமெரிக்க குவாகியூருள் (Kwakiuh) மக்கள் முகமூடிகளை உபயோகிக்கின்றனர். தேவைகள் பூர்த்தியாக்கப்படாத போது இத்தகைய முகமூடிகளின் துணையை நாடினால் தேவைகள் நிவர்த்தியாகும் என்ற நம்பிக்கை அவர்களுக்குண்டு.

எங்கிருந்து வந்த கலை

இம் முகமூடிகள் முதன் முதலில் இலங்கையிலேயே உருவாக்கப்பட்டனவா? அன்றிப் பிறநாட்டு மரபைப் பின்பற்றி எழுந்தனவா? என்பது ஐயத்துக்குரியது. இதைப் பற்றி அறிஞர்கட்கு இடையிலே அபிப்பிராய பேதங்கள் நிலவுகின்றன. சிங்கள எழுத்தாளர்கள் அவை இலங்கையிலேயே உருவாக்கப்பட்டன என்னும் கருத்தைக் கொண்டுள்ள போதும்

ஏனைய சில ஆதாரங்கள் அதை நிருபிப்பனவாக வில்லை. விநாயக் புரேகித் (Vinayak Purohit) என்பாரின் கருத்து பின்வருமாறு : ''முகமூடிகளை அமைக்கும் முறை இந்தியாவிலிருந்து வந்த ஒன்றல்ல. எமது ஜாதி ஒத்த (Tribals) மக்கள், மத்தியப் பிரதேசம், அசாம் முதலான இடங்களில் தமக்கென ஒரு தனி மரபு வழி செய்யப்பட்ட முகமூடிகளை உபயோகித்து வருகின்றனர். லியோன்காட் அடமின் (Leon hard Adam) கருத்துப்படி இலங்கை முகமூடிகளில் சில இந்திய முறைகளைப் பின்பற்றி எழுந்ததென்பதாகும். ஈழத்தில் கிராமிய மக்களிடையே நிலவும் கருத்தின் படியும் முகமூடிகளின் உபயோகம் முதன் முதலில் இந்தியாவிலிருந்தே வந்திருக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் உறுதிப்படுகின்றது. கோல நாடகத்தின் மூலப்படி மகா சம்மத்த அரசனது இராணியின், கற்பகால அவாவினைத் திருப்தி செய்வதற்கு நடைபெற்ற நாடகமென்றும் ராணியின் கற்பால்-கோல நடனத்திற்கு முதன் முதலில் விஸ்வகருமா என்னும் தெய்வமே முகமூடிகள் செய்ததெனவும் கூறப்படுகின்றது. மகாசம்மத்த (Mahasammata) என்னும் அரசன் இந்தியாவில் வாழ்ந்தவன். புத்தரின் வம்சாவளி ''உலகின் தோற்றத்தின் போது ஆண்ட அரசன் மகாசம்மதத்தன்'' என்பது மகாவம்சத்தின் கூற்றாகும்.

தோற்றக் காலம்:

சிங்கள முகமூடிகளின் தோற்றக் காலத்தினை அறுதியிட்டுக் கூற முடியுமா என்பது சர்ச்சைக்குரியது. சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே அதன் உபயோகம் இருந்திருக்க வேண்டும்.

இன்றும் சிங்கள மக்களிடையேயும் ஏன் முன்னேறிய மக்கள் மத்தியில்கூட முகமூடி நடனங்கள் உள்ளன. மாயாஜால சமய அடிப்படையில் வேட்டைத் தொழில் நடைபெற்ற காலங்களிலேயே முகமூடிகள் அதிகம் இருந்திருக்கின்றன என்பதற்கு இன்றும் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள மிருக-துர்த்தேவதை முகமூடிகள் சான்று பகர்கின்றன.

நடன வேறுபாடுகள்:

கரை நாட்டுச் சிங்களவர்கள் மத்தியில் நிலவும் முகமூடி நடனங்கட்கும் மத்திய மலைநாட்டுச் சிங்களவர்களிடை நிலவும் முகமூடி நடனங்கட்கு மிடையில் வேறுபாடுகள் உள. கோலம் (Kolam) டோவில் (Tovil) முதலான நடனங்கள் இலங்கையின் கரையோர-தெற்கு, தென் மேற்குப் பகுதிகளில் பிரசித்தமானது. கோலம் பிரசித்தமான கதை நாடகமாகும். அதில் ஒவ்வொரு பாத்திரமும் முகமூடி அணியும் கோலம் சுருக்கமானதும், ஓரளவுக்குத் தொடர்புமில்லாத பல கிளைக் கதைகளைப் பாத்திரங்களாகக் கொண்டு நடிக்கப்படுவது. பேய்நடனங்கட்கும் (Tovil) முகமூடிகள் உபயோகிக்கப்படுகின்றன. சொக்காறி (Sokari) நாடகம் இலங்கையின் மத்தியப் பிரதேசங்களிலேயே பெருமளவில் முகமூடிகள் அணிந்து நடிக்கப்படுகின்றன. சொக்காறி கதையின் முக்கிய பாத்திரமான

சொக்காறி அம்மா தன் கணவனாகிய ஆண்டி குருவோடு அலைதலையும் பின் உள்ளூர் வைத்தியரோடு ஓடிப் போதலையும், பின் மீண்டும் கணவனோடு உறவு கொள்வதனையும் கருத்தாகக் கொண்டது.

பிரிவுகள்

மூன்று முக்கிய வகுப்பின் கீழ் இலங்கை முகமூடிகள் அடக்கக் கூடியனவையாகவுள. அவை (1) கோலம், சொக்காறி முதலிய நாடகங்களில் உபயோகிக்கப்படும் இயல்பான மனித மிருக நாடக முகமூடிகள், (2) ரொவில் எனப்படும் மந்திரீக நடனங்களில் உபயோகிக்கப்படும்-பேய் துர்த்தேவதைகளின் முகமூடிகள், (3) சானி (Sanni) எனப்படும் நடனத்தில் உபயோகிக்கப்படும் பதினெட்டு முகமூடிகள்.

கோலம்

இவை மிகவும் பிரசித்தமானவையாகும். இந் நாடக மரபில் பலவித முகமூடிகள் உபயோகிக்கப்படுகின்றன. கோலம் நடனங்கள் இராக் காலங்களில் வெளியான இடங்களில் அரை வட்ட வடிவ மேடையில் நடக்கும். மேடையில் இசையினை எழுப்பும் மேளக்காரர்கள் வீற்றிருப்பார்கள். மேடையின் பின்புறத்தில் இலைகளாலும் குழைகளாலும் செய்யப்பட்ட மறைப்புக்கள் இருக்கும். இராச்சதப் பாத்திரங்கள் மேடையின் மறைப்பின் மேலேறி இறங்குகின்றன. மற்றைய பாத்திரங்கள் மறைப்பின்

அருகிலிருந்து மேடைக்கு வருவன. இந்நாடக மரபில் பலவகையான முகமூடிகளும் உபயோகிக்கப்படுகின்றன. மந்திரி, அரசன், அரசி, தமிழ் மனிதன், செட்டியார், போர் வீரன், யகாயாவின் மனைவி முதலியார், மேளமடிப்பவன், மேளமடிப்பவனின் மனைவி, போலீஸ்காரன், வேட அரசன், முதலானவர்களது உருவங்களும் பேய்களின் உருக்களும், மற்றும் நரி, சிங்கம், முதலிய மிருகங்களின் உருவங்களும் முகமூடிகளாகச் செய்யப்பட்டுள்ளன. நகைச்சுவையூட்டும் உருவங்களைச் செய்வதும் சிங்கள மக்களின் வழக்கமாகும். எடுத்துக் காட்டாக வட்டிக்குப் பணம் கொடுக்கும் செட்டியாரையும், பிற நாட்டினரையும் கேலி செய்து முகமூடிகளை செய்வார்கள்.

முகமூடிகளில் குறியீடுகள் உள. காது, இல்லாத உருவம் காதில்லாதவனையும், செவிடனையும் குறிக்கும். வாய் இல்லாத உருவம் ஊமையைக் குறிக்கும். இதே போன்று வியாதிகளைக் குறிக்கும். முகமூடிகள், சானி முகமூடிகள் எனப்படும்.

சானி

சானி முகமூடிகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட விடயங்களை எடுத்தியம்புவன. இத்தகைய முகமூடிகள் பல காரணங்கட்காக நடனங்களில் அணியப்படுகின்றன.



இப் பிறப்பில் தீமை செய்தவன் அடுத்த பிறப்புப் பிறப்பான். அதுவும் தீயவனாக. நல்லவர்கள் மிக நல்லவர்களாவார்கள். கெட்டவர்கள் கெட்ட ஆவியாக உலாவுவார்கள். இவ் ஆவிகளிலிருந்து பாதுகாக்கவும், சுகவீனமுற்ற போதும் சானி முகமூடிகள் உபயோகிக்கப்படுகின்றன. ஒருவர் சுகவீனமுற்றால், அல்லது ஒரு குடும்பம் கெட்டால் ஏதோ ஒரு தீய சக்தியால் அவ்வாறு ஏற்பட்டதென நம்புவார்கள். சூனியம், கொடுவினை என்பவைகளால் ஆவிகளின் துணை கொண்டு தம் எதிரிகள் செய்த செயலென நினைத்து அவற்றிலிருந்து தப்புவதற்கென முகமூடி நடனங்கள் நிகழும். இந் நடனங்கள் நடப்பதற்குக் கால எல்லை கிடையாது. தனித்து ஒரு குடும்பத்தினர் ஒரு நடனத்தை நடத்தலாம். வருடத்திற்கு ஒரு முறை பத்தினித்தெய்வத்திற்கெனவும் ஒரு நடனம் நடைபெறும்.

மாலை நடனம் தொடங்கினால் அடுத்த நாட் காலை தான் முடிவுறும். விடியற் காலையின் போது நடனம் உச்ச நிலையடையும். நடனத்தில் பலர் பங்குபெறுவர். அவர்களுள் சுமார் ஐந்து அல்லது அறுவர் தலைமை தாங்கி மந்திரங்களை உச்சரித்தவாறே நடனமாடுவார்கள். நடனமாடுவோர் யாவரும் முகமூடிகளை அணிந்திருப்பர். தாம் எந்த ஆவியை நினைத்து-விரும்பி-நடனமாடுவரோ-அதன் உருவத்தைத் தரிப்பர். நடனத்திற்கெனப் பிரத்யேகமான மேளம் அடிக்கப்படும். நடனக்காரர்களின் கரங்களில் நெருப்புப் பந்தங்கள் ஏற்றப்பட்

…கள் கட்டப்பட்டிருக்கும். ஆவிக்கான படையல் படைக்கப்பட்டிருப்பதுடன் நெருப்பும் எரிக்கப்படும். சாதாரண கறிக்கிடும் மஞ்சளன்றிப் பிறிதொரு வகையான மஞ்சள் இடப்பட்டு நெருப்பு வளர்க்கப்படும்.

சுகவீனங்கட்கு மருந்து கொடுத்து அதன் மூலம் சுகப்படுத்த முடியாது என நம்பும் வியாதிகளுக்குப் பரிகாரம் தேடும் தேவைக்காக இத்தகைய முகமூடி நடனங்களை ஆடுகின்றார்கள்.

அபுத்த சானியா (பல் இறுகி கதைக்க முடியாதது) பிரி சானியா (காது கேளாத) கோபு சானியா (பேச முடியாத) கானு சானியா (கண் தெரியாத) விவுலம் சானியா (நடுக்கம்) முதலானவைகளுக்காகவும் இன்னும் பல வியாதிகளுக்கும் முகமூடிகள் உள்ளன.

கரயக்கா:

ரொவில், கோலம் முதலான நடனங்களின் பின்னர் கரயக்கா (Garayaka) வினது முகமூடிகள் அணியப்பட்டு நடனங்கள் நிகழும். இது கேட்டினை அகற்றிச் செல்வத்தினையும், செழிப்பினையும், நன்மையையும் கொடுக்கும், என நம்பப்படுகின்றது. இது பேய், துர்த்தேவதை முதலான முகமூடிகளிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். விழாக்களைப் பரிசுத்தமாக்கும் தன்மை இம் முகமூடிகட்கு உள்ளதென்ற நம்பிக்கை நிலவுவதனால்-இம் முகமூடிகள் அணிந்து நடனங்கள் ரொவில் நடனங்களின் பின் நடக்கின்றன.

ஊர்வல முகமூடிகள் :

மேற்கூறிய முகமூடிகளை விட ஊர்வலங்கட்கு எனவும் தனியே சில முகமூடிகள் - களிப்பூட்டச் செய்வதற்காகச் செய்யப்படுகின்றன. சில முகமூடிகள் இராட்சதர்களையும், மிருகங்களையும் கொண்டனவையாக அமைகின்றன. மகா பிரமாவினுடைய (மகாபம்பா) மிகப் பெரிய இரட்டை முகமூடி ஊர்வலத்துக்கு மாத்திரமே உபயோகிக்கப்படுகின்றது. இது மற்றைய முகமூடிகளை விட தோற்றத்திலும் உருவத்திலும், வேறுபட்டு விளங்குகின்றது.



வேட்டைக்காரன்

இவ்வாறு சிங்கள மூகமுடிகள்- தனித்தன்மை வாய்ந்தனவாகப் பற்பல தேவைகட்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மிகவும் உயர்ந்த வெப்பம் தாங்கும் உடை

எஃகுத் தொழிற்சாலையில் உலைக்களத்திற்கு அருகில் நின்று பணியாற்றும் தொழிலாளர்கள் அணிந்து கொள்வதற்காகச் சுமார் 1600 பாகை சென்டிகிரேட் வெப்பத்தைத் தாங்கக்கூடிய உடைகளை ''குளோ அண்டு உட் லிமிடெட்'' என்ற பிரிட்டிஷ் நிறுவனம் சென்ற ஆண்டு தயாரித்தது. இதன் தரத்தை நிர்ணயிப்பதற்காக அவர்கள் நடத்திய சோதனைகளில் இவை சிறந்தவை என்பது நிரூபிக்கப்பட்டது. ஒரு தொழிலாளி இந்த உடையை அணிந்திருந்தால், உருகியோடிய உலோகம் அவர் மீது தெளித்தபோது கூட அவருக்கு ஒன்றும் நேரவில்லை.

வண்ண பல்புகள் : (Colour bulbs)

திருமணங்கள், பண்டிகைகள் போன்றவை நடக்கும்போது அலங்காரம் செய்வதற்காகப் பல நிற பல்புகள் தேவைப்படுகின்றன. இதற்காகச் சாதாரண பல்புகளைக் வண்ண பல்புகளாக மாற்றிப் பயன்படுத்தலாம். விற்பனையும் செய்யலாம். அதற்கான முறைகள் பின்வருமாறு :—

(1) சுத்தமான நயம் கருவக் கோந்தை தண்ணீரில் ஊற வைத்து நீர்க்கக் கரைத்து வடி கட்டிக் கொள்ளவும். பிறகு அதில் தேவையான வண்ணப் பவுடரைக் கரைக்கவும். பல்பை அதில் ஒரு முறை நனைத்து எடுத்து உலர விடவும். நன்கு உலர்ந்ததும் இரண்டாவது ஒரு முறை நனைத்தெடுத்து உலர்த்தி விடவும். பல்பை நனைப்பதற்கு முன்பு அதை நன்கு கழுவிச் சுத்தம் செய்து உலர்த்தி விட வேண்டும்.

(2) ஒரு முட்டையின் வெள்ளைக் கருவுக்குக் கால் பக்கா தண்ணீர் வீதம் எடுத்து அதில் முட்டை வெள்ளைக் கருவை நன்கு கரைத்துக் கொள்ளவும். வேண்டிய வண்ணப் பவுடரை எடுத்துச் சிறிது தண்ணீர் சேர்த்துப் பிசைந்து பசை உருவில் மேற்படி வெள்ளைக் கரு கரைசலில் சேர்த்துக் கலக்கவும். கழுவிச் சுத்தம் செய்த பல்புகளை அதில் நனைத்தெடுத்து உலர்த்திக் கொள்ளவும்.

(3) அரக்கு ஒரு பங்கு, ஸ்பிரிட் பத்து பங்கு, ஸ்பிரிட்டில் கரையும் நிறங்கள் போதுமான அளவு எடுத்துக் கொள்ளவும். கடைகளின் சுத்தம் செய்யப்பட்ட வெள்ளை அரக்கு உண்டு. அதுதான் இதற்கு மிகவும் சிறந்தது. ஸ்பிரிட்டில் அரக்கு கரையும். இதனால் முதலில் ஸ்பிரிட்டில் அரக்கைக் கரைத்துக் கொள்ளவும். பிறகு வேண்டிய அளவு வண்ணப் பவுடரை அதில் சேர்த்துக் கலக்கவும். முன் கூறியபடிக் கழுவிச் சுத்தம் செய்து உலர்த்திப் பல்பை அதில் நனைத்தெடுத்துக் காயவைத்துக் கொள்ளவும்.

(4) தண்ணீரில் எவ்வளவு படிக்காரம் (சீனக்காரம்) கரைகிறதோ அவ்வளவைக் கரைக்கவும். பிறகு அந்தக் கரைசலில் விருப்பமான கலர் பவுடரைச் சேர்த்துக் கலக்கவும். கழுவிச்

சுத்தம் செய்து உலர்த்திய பஞ்சை அதில் நனைத்தெடுத்துக் காய வைத்துக் கொள்ளவும்.

அரோமாடிக் வினிகர் :

வினிகர் என்றால் காடி. அரோமாடிக் வினிகர் என்றால் வாசனைக் காடி என்று பொருள். இந்த வாசனைக் காடி வாயைச் சுத்தம் செய்து வாய் நாற்றத்தைப் போக்கப் பயன்படுவதாகும். கடைகளில் இக்காடி விற்பனைக்குக் கிடைக்கிறது. செய்முறை இதுதான்.

வினிகரில் போலிகள் அதிகம். சுத்தமான அசல் வினிகராகப் பார்த்து வாங்கி அதில் 24 அவுன்சுக்கு 5 அவுன்ஸ் வீதம் ரோஜா எசன்ஸ் சேர்த்துக் கொள்ள வேண்டும். கடைகளில் விற்கும் ரோஜா எசன்ஸ் இதற்கு அவ்வளவு நல்லதல்ல. சொந்தமாக இதற்கு எசன்ஸ் தயாரித்துக் கொள்ளலாம். 5 அவுன்ஸ் சுத்தமான அல்கஹாலில் 40 துளி சுத்தமான ரோஜா அத்தர் சேர்த்தால் அது நல்ல சென்டாகி விடும். அதை வினிகரில் கொட்டிக் கலந்து கொண்டால் போதுமானது.

செருப்புத் தோலுக்கு மருதமரப்பட்டை :

செருப்பின் அடித்தோலைப் பதனிடக் கருவேல மரப்பட்டையே இப்பொழுது அதிகமாகப் பயன்படுகிறது. கருவேலப் பட்டைக்குப் பதில் மருத மரப்பட்டையை உபயோகித்தால் செருப்பின் அடித் தோல் அதிக உறுதியாகவும் கவர்ச்சியாகவும் உள்ளது என சென்னையில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகம் செய்த சோதனைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது.

...திலிருந்து 20-100 ராத்தல் பட்டை எடுக்கலாம். இந்தப் பட்டையில் தோலைப்பதனிடும் சக்தி பெற்றுள்ள டானின் சத்து 16-23 சதவிகிதம் அடங்கியுள்ளது. இப்பட்டையையும் கருக்காயையும் சம அளவாகக் கலந்து பதனிடப்படும் செருப்பின் அடித் தோல் மிகவும் சிறந்ததாக உள்ளது.

மண் சுவர் கரையாதிருக்க :

நம் நாட்டில் 100க்கு 80 சதவிகிதத்துக்கும் அதிகமான மக்கள் கிராமங்களிலேயே வசிக்கிறார்கள். அவ்விதம் வசிக்கும் கிராமவாசிகளில் பெரும்பாலோர் மண்சுவராலான வீடுகளிலோ குடிசைகளிலோ தான் வசிக்கிறார்கள். மழைக் காலத்தில் இச் சுவர்கள் மழை நீரில் கரைந்து வெகுவாகப் பழுதுபடுகின்றன. இவ்விதம் அவை கரையாதிருக்க ரூர்க்கி (உத்தரப்பிரதேசம்) யில் உள்ள மத்திய கட்டட ஆராய்ச்சிக் கழகம் சில முறைகளைக் கண்டறிந்திருக்கிறது. அவற்றில் சுலபமான ஒரு முறை பின்வருமாறு :—

12 பங்கு சிமெண்ட், 1 பங்கு நீர்த்த சுண்ணாம்பு '5 பங்கு மணல்' ஒரு பங்கு சோப்புக் கரைத்த நீர் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். இக்கரைசலைச் சுவற்றுக்குச் சுண்ணாம்பு பூசுவது போல் மூன்று முறை மண் சுவற்றின் மீது பூசி விட வேண்டும். இவ்விதம் செய்தால் பிறகு அந்த மண் சுவர் பெரும்பாலும் மழை நீரில் கரைவதில்லை.

மலிவான புண் களிம்பு :

புண்களுக்கு மலிவான களிம்புகள் தயாரித்து விற்பனை செய்வது சிறு முதலில் நல்ல லாபம்

கும். அவ்விதமான களிம்பு ஒன்றைத் தயாரிப்பதற்கான முறையைக் கீழே காணலாம்.

ஸ்கார்லெட்ரெட்	20	கிரெய்ன்
ஜிங்க் ஆக்ஸைடு	1	டிராம்
வாஸ்லின்	1	அவுன்ஸ்

வாஸ்லினுக்குப் பெட்ரோலியம் ஜெல்லி என மற்ருெரு பெயரும் உண்டு. வெள்ளை, மஞ்சள் இரண்டு வித வாஸ்லின் உண்டு. இரண்டில் ஏதாவது ஒன்றை உபயோகிக்கலாம். ஆனுல், மஞ்சளை விட வெள்ளை நல்லது. வாஸ்லினை உருக்கி அதில் ஜிங்க் ஆக்ஸைடையும் ஸ்கார்லெட் ரெட்டையும் கலந்து கொண்டால் நல்ல களிம்பாகிவிடும். ஜிங்க் ஆக்ஸைடு விடச்சத்துள்ள ஒரு பொருள். இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

ஆபீஸ் பேஸ்ட்

காரியாலயங்களில் ஒட்டுவதற்குப் பயன்படும் ஒருவகை நீர்ப் பசை பாட்டில்களில் நிரப்பிக் கடைகளில் விற்கிருர்கள். அப் பசையைத் தயாரிக்கப் பலவித முறைகள் உண்டு. அவற்றில் ஒன்று இதோ.

சர்க்கரை	$\frac{1}{2}$	ராத்தல்
மைதா	$\frac{1}{4}$	ராத்தல்
ஜிலெடின்	1	ராத்தல்
கிளிசரின்	1·2	அவுன்ஸ்

ஜிலெடின் முதலில் சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஓரிரவு முழுவதும் தண்ணீரில் ஊறப் போடவும். அப்பொழுது அது நன்கு உப்பிப் பெரிதாகிவிடும். தண்ணீரை வடித்துவிட்டு ஜிலெடினை ஒரு பாத்திரத்தில் போட்டு அப் பாத்திரத்தை நீர் நிறைந்த மற்ருெரு பாத்திரத்தில் வைத்து உருக்க வேண்டும். அது நன்கு உருகித் தண்ணீர் போலானதும் நன்கு கிளறி அது கரைந்ததும் மைதாவை கிளிசரினில் கரைத்து அதை ஜிலெடின் கரைசலில் கொட்டவும். அதுவும் கரைந்ததும் சுமார் 3 பிண்ட் கொதிக்கும் நீரை அவற்ருேடு சேர்க்கவும். பிறகு தொடர்ந்து சுமார் அரை மணி நேரம் காய்ச்சி அதோடு ஒரு அவுன்ஸ் கார்பாலிக் ஆஸிட் சேர்த்து இறக்கி விடவும். ஆறியதும் பாட்டில்களில் நிரப்பி விற்பனைக்கு அனுப்பலாம்.

காகித வார்பட பொம்மை:

சாதாரண காகித பொம்மைகள் தயாரிக்க காகிதங்களை 3, 4 நாட்கள் ஊறவைத்து இடித்து நல்ல கெட்டிப் பசையாகத் தயாரித்து அதோடு சிறிதளவு சீனுக் களிமண்ணும் சேர்த்து பொம்மைகள் தயாரிப்பார்கள். பலவித வார்ப்பட பொம்மைக்கும் இதே போல் காகித கெட்டிப் பசை தயாரித்து சீனுக்களிமண் சேர்த்துக் கொள்ளலாம். அதை பிறகு தண்ணீரில் கரைத்து வடிகட்டிக் கொள்ளவேண்டும். 100-க்கு 5 பங்கு வீதம் மாரிக்கோல் என்னும் இரசாயனப் பொருளை அதோடு சேர்த்துக் கலக்கவேண்டும். வேண்டிய உருவங்கள் அமையக் கூடிய பிளாஸ்டர் ஆப் பாரிஸ் அச்சுக்கள் தயாரித்து அவற்றில் மேற்படிக் காகிதக் கரைச்சலை நிரப்ப வேண்டும். சிறிது நேரம் அப்படியே வைத்திருந்தால் அச்சின் ஓரங்களில் கெட்டியாகக் கரைசல் பற்றிக்கொண்டு விடும். பிறகு அதிகப்படியாக உள்ள கரைசலை வடித்து அடுத்த அச்சில் நிரப்ப உபயோகப்படுத்தலாம். நன்கு உலர்ந்ததும் அச்சைப் பிரித்தால் அழகிய இலேசான காகிதப் பொம்மைகளாக அவை மாறி விட்டிருப்பதைக் காணலாம்.

இளம்பிள்ளைவாதம்

கடந்த பத்தாண்டுக் காலமாக இளம் பிள்ளைவாதம் உலகின் எல்லா இடங்களிலும், மக்களை, குறிப்பாகக் குழந்தைகளை, முன் காலங்களில் தாக்கி வந்ததைவிட அதிக அளவில் தாக்கி வந்திருக்கின்றது. அதே நேரத்தில் மனித குலமும் இந்நோயை எதிர்த்துப் போராடி அதைக் குணப்படுத்துவதிலும், வராமல் தடுப்பதிலும் பெரிய வெற்றியடைந்திருக்கின்றது. ஆயினும் இந் நோய் இன்றும் பயங்கரமான ஒரு தொற்று வியாதியாகவே இருந்து வருகின்றது. இந் நோயின் காரணமென்ன? இது குழந்தைகளிடையே எவ்வாறு பரவுகின்றது? இதன் அறிகுறிகள் என்ன? இதைத் தடுக்கும் முறை என்ன? ஆகிய வினுக்களுக்கு விடை பகர்கின்றது இக்கட்டுரை.

காரணம் :

இந்நோயை உடலில் தோற்றுவிப்பது ஒரு வகை வைரஸ் ஆகும். இந்த வைரஸை எலக்டிரான், மைக்ரோஸ் கோப்பினுல் (82,000) எண்பத்து இரண்டாயிரம் மடங்கு உருப்பெருக்கினுல் இது கடுகு மணியின் வடிவத்தில் கூட்டம் கூட்டமாக இருப்பதைக் காணலாம்.

பரவும் முறை:

இந் நோயினுல் வருந்தும் குழந்தைகளிடமிருந்தே இது பிற குழந்தைகளுக்குப் பரவுகின்றது. சில

திரு. ஆர். போற்றிவேல், பி.ஏ.எல்.டி.

வேளைகளில் ஆரோக்கியமாக இருப்பவர்கள் மூலமாகவும் இந் நோய் பரவுகின்றது. இத்தகைய மனிதர்களை நோய் சுமப்பாளர் (disease Carriers) என்று கூறு கின்றோம். இவர்களின் மலத்தி லும், சிறு நீரிலும், வாயிலிருந்தும் உற்பத்தியாகின்ற சளியிலும் இந்த வைரஸ் ஏராளமாக இருக் கும். இந் நோய் உடையவர் களுக்குச் சிகிச்சை செய்பவர்கள் சுகாதார விதிகளைக் கையாளாம லிருந்தால் அவர்களையும் இந் நோய் பீடிக்கும். அல்லது அவர் கள் இந் நோயைப் பிறர்க்குப் பரவச் செய்யும் நோய் சுமப் பாளராகவும் ஆகலாம். நோயாளி இருமும் பொழுதும், தும்மும் பொழுதும், பேசும் பொழுதும் அவரிடமிருந்து வெளிப்படுகின்ற சளியிலிருக்கும் வைரஸ், காற்று டன் கலந்து அதைச் சுவாசிக்கும் பிறரது நாசியில் இருக்கும் சளிச் சவ்வின் வழியாக உடலுக்குள் புகுந்து நோயை விளைவிக்கும். உணவு, தண்ணீர் ஆகியவற்றின் மூலமாகவும் இந்நோய் பிறருக் குப் பரவலாம்.

மேற்கூறப்பட்ட ஏதாவது ஒரு வழியில் மனித உடலை அடைந்த வைரஸ் அந்த இடத் தில் வளர்ச்சியடைந்து ஒன்று பலவாகப் பெருகி இரத்த ஓட் டத்தின் மூலமாகவோ அல்லது நரம்புகளின் மூலமாகவோ முதுகு நடு நரம்பு அல்லது மூளையை வந்தடைகின்றது. இந்த வைர சின் தாக்குதலுக்கு எளிதில் இரையாவது நரம்பு மண்டலமே.

பிற வியாதிகளுக்கு உள்ளாகி உடல் இளைத்திருப்பவர்களையும், அதிக உழைப்பாலும், ஊட்டக் குறைவினாலும் உடல் வலிமை குன்றியிருப்பவர்களையும், கதிரவ னின் கடும் வெப்பத்தில் அலைந்து திரிந்ததன் காரணமாக உடல் அலுத்திருப்பவர்களையும் அதிகமான குளிரில் தக்க பாது காப்பின்றி உடல் நலிந்திருப்ப வர்களையும் இந் நோய் கடுமை யாகத் தாக்குகின்றது. இவர் களின் மத்திய நரம்பு மண்ட லத்தை இந்த வைரஸ் எளிதில் தாக்கி நரம்பு செல்களை அழித்து விடுவதால், உடல் உறுப்புக்கள் சிலவற்றின் இயக்கங்கள் நின்று விடுகின்றன. இந்நோயின் முக்கிய மான அறிகுறி இதுவேயாகும். இந் நோய் எந்தவிதமான கால நிலையிலும் தோன்றலாம். ஆயி னும் கோடைக் காலத்திலேயே இந் நோய் அதிகமாகப் பரவுகின் றது. இளம் வயதுக் குழந்தைகளை மாத்திரமன்றி வயது வந்த குழந்தைகளையும், வாலிபர்களை யும் கூட இந் நோய் தாக்குவ துண்டு.

அறிகுறிகள் :

சாதாரணமாக இந் நோயின் வைரஸ் உடலுக்குள் சென்ற பொழுதிலிருந்து 7—14 நாட்க ளில் இதன் அறிகுறிகள் தோன்று கின்றன. இந்நோய் திடீரென்று தோன்றி, இன்புளுவன்சா, டான் சில்லிட்டிஸ், வயிற்றுப் போக்கு ஆகியவற்றின் அறிகுறிகளைத் தோற்றுவிக்கின்றது. முதலில் உடல் வெப்பநிலை அதிகரிக்கின் றது. உடல் வெப்பம் 102°F முதல் 103°F வரை உயரலாம். தலைவலி யும் நாசி ஒழுக்கும் இருக்கும். இந்நோயின் ஆரம்ப நாட்களில், பீடிக்கப் பெற்ற குழந்தைகள் உற்சாகமின்றி மந்தமாக இருக்

கும், அல்லது நேர்மாருகப்பதட்ட நிலையில் கோபதாபங்களுக்கு எளி தில் உட்பட்டு இருக்கும். சில வேளைகளில் வாய் பிதற்றலும் உணர்விழத்தலும் ஏற்படலாம். உடலில் அதிகமான வலி தோன் றும். இதை வாயினுற் கூற இய லாத சின்னஞ்சிறு குழந்தைகளைக் கைகளினுல் வாரி எடுக்கவோ அல்லது ஆடைகளை மாற்றவோ செய்யும் பொழுது அவை பீறிட்டு அழும். வயது வந்த குழந்தைகள் கைகால் முதுகிலும், கழுத்திலும் வலி இருப்பதை எடுத்துரைக்கும். தலையின் இருபக்கங்களிலும் அதிகமாக வியர்க்கும்.

இம் மாதிரியான அறிகுறிகள் 3—7 நாட்கள் வரை நீடித்திருக் கின்றன. பிறகு குழந்தையின் உடல்நிலை சீரடைவது போல் தோன்றுகின்றது. காய்ச்சல் குறைந்து உடல் சாதாரண வெப்ப நிலையை அடைகின்றது. பிற அறி குறிகளும் மறைகின்றன. குழந் தையின் நோய் குணமடைந்து விட்டதென்று உற்ருர் உறவினர் எண்ணுகின்றனர். ஆனுல் இந்த எ்ண்ணம் தவருனது என்பது விரைவில் விளங்கி விடுகின்றது. குழந்தை ஒரு கையையோ ஒரு காலையோ இயங்கச் செய்யும் ஆற்றலை இழந்து விடுகின்றது. எழுந்து உட்காரவோ, நிற்கவோ தலையை நிமிர்த்தவோ இயலாத ஒரு நிலை ஏற்படுகின்றது. இதுவே இளம் பிள்ளை வாதத்தின் முக் கிய அறிகுறியாகும்.

நோய் கடுமையாக இல்லாதி ருந்தால் முதுகு நடு நரம்பில் இருக்கும் சாம்பல் நிறப் பொருளி லுள்ள செல்கள் அழிந்து போவ தில்லை. ஆகவே இயக்கமற்றுப் போன உடலுறுப்புகள் சிறுது சிறிதாக இயங்க ஆரம்பித்து நோய் குணமடைந்து விடுகின் றது. நோய் கடுமையானதாக இருந்தால் மத்திய நரம்பு மண் டலத்திலுள்ள செல்கள் இறந்து போகின்றன. இந் நிலையில் இயக் கமற்றுப் போன உறுப்புகளில் இயக்கம் மெதுவாகவே தோன் றும். சில வேளைகளில் இயக்கம் தோன்றுவதற்குப் பல ஆண்டு களும் ஆகலாம். நரம்பு மண்ட லத்திலுள்ள செல்கள் பெருமள வில் அழிந்து போனுல் நின்று போன இயக்கங்கள் மீண்டும் தோன்ருமலிருப்பதும் உண்டு. சில வேளைகளில் விலா எலும்பு களை இணைக்கும் தசைகளும் உதரவிதானத் தசைகளும் இயக்க மற்று விடுவதால் சுவாசிப்பது மிகக் கடினமாகி விடுகின்றது. சுவாச இயக்கங்களுக்கும் இருத யத்தின் இயக்கங்களுக்கும் காரணமாக இருக்கின்ற மூளை யின் பகுதியாகிய தண்டுவடம் (Medulla Oblongata) தாக்கப்பட்டு அதிலுள்ள செல்கள் அழிந்து விட் டால் நோயாளியின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும். கை கால் முதலிய உறுப்புக்களின் வடி வம் மாறி விடுவதும், தசை வளர்ச்சி குன்றி விடுவதும் சில வேளைகளில் ஏற்பட்டு விடுகின்றன.

சிகிச்சை :

நோயின் ஆரம்பக் காலத்தி லேயே டாக்டரின் மேற்பார்வை யில் தொடர்ச்சியான சிகிச்சை அளிக்கப்பட்டால் இந்நோயினுல் ஏற்படுகின்ற பலவிதத் தீமை களையும் தடுக்கலாம். நோயின்

ஆரம்பக் காலத்திலிருந்தே குழந்தையைப் படுக்கையில் வைத்துப் பராமரிக்க வேண்டும். இது நோயின் கடுமையைக் குறைப்பதோடு கைகால் முடக்கம் வராமல் தடுக்கின்றது. குழந்தையின் உடலுக்கும் உள்ளத்திற்கும் பூரண ஓய்வு கொடுத்து, குழந்தையைப் படுக்கையில் சரியான நிலையில் வைத்திருக்க வேண்டும். உடலில் உண்டாகும் வலியைக் குறைப்பதற்கு வென்னீர் அடைத்த தோல்பையை நோயாளியின் உடலில் வைத்து வெப்பம் கொடுக்க வேண்டும். கை கால் முடக்கம் ஆரம்பமாகும்பொழுது குழந்தையை நிரப்பான படுக்கையில் கடினமான பாயின் மீது தலையணை இல்லாமல் கிடக்கும்படி செய்வது மிகவும் நல்லது. காலில் முடக்கம் ஆரம்பித்தால் காலைத் தொங்கவிடக் கூடாது. உடலிலும் முதுகிலுள்ள தசைகளிலும் முடக்கம் ஏற்பட்டால் உடலை வளைவு இல்லாமல் நேரான நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். சிறுநீர் வெளியாவதில் தடை ஏற்பட்டால் வென்னீர் அடைத்த குப்பி ஒன்றை அடிவயிற்றில் வைத்திருப்பது நல்ல பலனைத் தரும். மலச்சிக்கல் ஏற்பட்டால் சூடான எண்ணையை எனிமாவாகக் கொடுக்கலாம். இந்நோய்க்கு, காமா கிளாபுலின் (Gammaglobulin) என்னப்படும் மருந்து மருத்துவர்களால் உடலில் குத்திச் செலுத்தப்படுகின்றது. கைகால் முடக்கம் ஏற்பட்டு வலி தீர்ந்த பிறகு உடலை நன்றாகத் தேய்த்து விடுவதும் வென்னீரால் கழுவுவதும், கட்டியான துணியினால் உடலைப் பொதிந்து வைப்பதும், மின்சார சிகிச்சை செய்வதும் நன்மை பயக்கும். விட்டமின் பி. காம்ப்ளெக்ஸ் (Vitamin B. Complex) விட்டமின் சி. யும் அதிகமுள்ள உணவுகளைக் கொடுப்பதும் நன்மை தரும்.

நோய்த்தடுப்பு :

இந்நோய் பரவுங் காலத்தில் நோயில்லாத குழந்தைகளுக்கு ஆன்டிபோலியோ வாக்சின் (Antipolio Vaccine) என்ற மருந்தைக் குத்திக் கொண்டால் இந்நோயைத் தடுக்கலாம்.

அவன் அன்றைக்குத்தான் முதன் முதலாக ஆகாய விமானத்தில சவாரி செய்யப் போகிறான். விமானத்தில ஏறி அமர்ந்தவன், சுற்றியும், முற்றியும் பரக்கப் பரக்கப் பார்த்து மகிழ்வடைந்தான். நேரங் கழிந்தது. விமான ஜன்னல் வழியாகக் கீழே நோக்கியவன் "அடேயப்பா, இந்த மனிதர்கள் நடப்பது, எறும்புகள் ஊர்வது போலத் தெரிகிறதே!" என்று வியந்து கூவினான்.

அங்கு வந்த விமானப் பணிப்பெண் கூறினாள். "எறும்புகள் போலென்ன, எறும்புகளே தான். விமானம் இன்னும் தரையை விட்டுக் கிளம்பவில்லை."

காட்சி: 20.

இடம்: சோலை.

காலம்: மாலை

உறுப்பினர்கள்: பூங்குன்றனார், காமக்கண்ணி.

[பூங்குன்றனார், காமக்கண்ணியை எதிர்பார்த்த வண்ணம் உலாவிக்கொண்டிருக்கிறார்.]

காமக் கண்ணி

"செல்வன்"

பூங்குன்றனார் : (தனிமொழி) ஏன் இன்னும் காமக்கண்ணி வரவில்லை? இந் நேரத்திற்குள் அவள் வந்து விடுவது பழக்கமாயிற்றே!

[உலாவுகிறார். காமக்கண்ணி வருகிறாள்]

காமக்கண்ணி : எம் பெருமானே, வணக்கம்.

பூங்குன்றனார் : இறைகாக்க!........ ஏன் இன்று இவ்வளவு நேரம் ஏந்திழாய்?

காமக்கண்ணி : தியானத்தில் ஆழ்ந்திருந்தேன். நேரமாகி விட்டது. பொறுத்தருள வேண்டுகிறேன்.

பூங்குன்றனார் : எதுவும் குறித்த நேரந் தவறாமல் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். இன்று எவ்வளவு நேரம் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன், தெரியுமா?

காமக்கண்ணி : இனிமேல் நேரந் தவற மாட்டேன். இம்முறை பொறுத்தருள்க, எம் பெருமானே.

பூங்குன்றனார் : அமர்க!

[இருவரும் அமர்கிறார்கள். முனிவர் உபதேசம் செய்யத் தொடங்குகிறார்.

காமக்கண்ணி

முன்கதைச் சுருக்கம்:

தன்னுடைய பிறந்த நாள் விழாவில் அரசவையில் நடனமாடிய காமக் கண்ணி என்ற பரத்தையின்பால் பேகன் என்ற மன்னன் ஆருக் காதல் கொண்டு. கற்புக்கரசியாம் தன் மனைவி கண்ணகியை அறவே மறந்து காமக்கண்ணி இல்லத்தை அடைகிறுன்.

கண்ணகி தன் கணவன் பிரிவைத் தாங்க இயலாது பெரிதும் அழுது புலம்பு கிறுள். அவளுடைய தோழி கயல்விழி அவளுக்கு ஆறுதல் கூறுகிறுள். முடிவில் காமக்கண்ணி வீட்டிற்குச் சென்று தன் கணவனைத் தன்பால் அனுப்பிவிடுமாறு அவளை வேண்டிக்கொள்வதெனக் கண்ணகி முடிவு செய்கிறுள்.

கண்ணகி, காமக்கண்ணியின் மாளிகைக்குச் செல்கிறுள். தன் கண வனைத் தன்னிடம் அனுப்பிவிடுமாறு காமக்கண்ணியை அவள் வேண்டுகிறுள். காமக்கண்ணி மறுக்கிறுள். கண்ணகி மனமுடைந்து அழுதவண்ணம் தன் அரண் மனைக்குத் திரும்புகிறுள்.

தன்னிடம் கண்ணகி வந்து தன்னைப் பழித்துச் சென்றதாகக் காமக்கண்ணி பேகனிடம் கூறி அழுகிறுள். இனித் தன் ஆணையின்றி யாரையும் காமக்கண்ணி யைப் பார்க்க அனுமதிக்கக் கூடாது எனப் பேகன், காவலாளனுக்குக் கட்டளை யிடுகிறுன்.

புலவர் பெருமாளுகிய பரணர் பரிசில் பெறப் பேகன் மாளிகைக்கு வருகி ருர். அங்குக் கண்ணீர் பெருக நிற்கும் அரசியார் கண்ணகியைக் கண்டு பேகன் காமக்கண்ணியோடு இருக்கும் உண்மையை அறிந்து அகல்கிருர். அவர் காமக்கண்ணி யின் மாளிகைக்கு வந்து பேகனைக் கண்டு, கண்ணகியைச் சென்றடையுமாறு அவ னுக்கு அறிவுறுத்துகிருர். அரசன் மறுக்கிறுன். அவர் அவனை விட்டு நீங்குகிருர்.

காமக்கண்ணி பூங்குன்றனுர் என்ற முனிவரின் பெருமையை அறிந்து அவரை அடைந்து அவரிடம் உபதேசம் பெறுகிறுள். தன்னுடைய மாளிகைக்குத் திரும்பிய தும், அவள் முனிவரின் பெருமையைப் பேகனிடம் புகழ்ந்து கூறுகிறுள்.

இறைவன் எங்ஙனம் அழியாதவனோ, அங்ஙனமே உயிரும் அழியாதது. பிறவிதோறும் பல்வுடலில் உழலும் உயிர், பண்பட்டுப் பக்குவ மெய்தி முடிவில் இறைவனோடு இரண்டறக் கலந்து ஈடிலா இன்பப் பேற்றை எய்துவதாகும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் நம் உயிரோடு எப்போதும் இயைந்துள்ளன. இம் மூன்றும் உயிரோடு பொருந்தியுள்ளவரை அது விளக்கம் பெற்று இறைவனை அடைய இயலாது. உயிரானது, இறைவனை அடைதலாகிய பேரின்பப் பேற்றை எய்து வேண்டுமானால் ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை அஃது அறவே அகற்ற வேண்டும்.

[தம் ஐந்து விரல்களையும் காட்டி, விளக்குகிறார்.]

இக் கட்டை விரல் இறைவன்; சுட்டு விரல் உயிர். மற்ற மூன்று விரல்களும் முறையே, ஆணவம், கன்மம், மாயைகளாகும். கட்டை விரல் மற்ற நான்கு விரல்களினின்றும் அகன்றுள்ளதை நோக்குக. அது தான் இறைவன். சுட்டு விரலோடு

மற்றைய மூன்று விரல்கள் சேர்ந்திருப்பது ஆண வம், கன்மம், மாயை, ஆகியவை உயிரோடு சேர்ந்திருப்பதைக் குறிக்கும். ஆணவம், கன்மம், மாயை — இம் மூன்றும் உயிரைவிட்டு அகலுமாயின், உயிர் தானே இறைவனை எய்தும்.

[சுட்டுவிரலைக் கட்டை விரலோடு சேர்த்தும், மற்றைய மூன்று விரல்களை உயர்த்தியும், நீட்டியும் காட்டுகிறார்.]

காமக்கண்ணி : முனிவர் பெருமானே! உண்மையிலேயே இன்று தான் தங்கள் அருளுரையால் என் அகக்கண் நன்கு திறக்கப்பட்டது. இன்றே யான் மெய்யுணர்வு எய்தினேன்.

பூங்குன்றனார் : மகிழ்ச்சி, காமக்கண்ணி, மகிழ்ச்சி,

காமக்கண்ணி : பெருமானே! விடை பெறுகிறேன்.

பூங்குன்றனார் : (அன்போடு) இதற்குள்ளாகவா?

காமக்கண்ணி : ஏன்? இன்றைய அருளுரை இன்னும் முடிவுறவில்லையா? தங்கள் விருப்பப்படி எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இருக்கிறேன்.

பூங்குன்றனார் : இல்லை, இல்லை.......... உரை முடிந்தது, நீ போகலாம்.................இறைகாக்க

[காமக்கண்ணி போகிறாள். அவர் எழுந்து நின்று அவள் சென்ற திசையையே நோக்கி மெய்மறந்து நிற்கிறார்.]

அவர் மனம் பேசுகிறது : அவள் அருகில் உள்ள போதும் அவளோடு உரையாடும் போதும் எவ்வளவு இன்பமாக இருக்கிறது! என் இருபதாண்டு துறவு வாழ்க்கையிலே பெருத பெரு இன்பம் அவளருகில் இருக்கும் போது பெறுகிறேன்.

*　　*　　*

காட்சி: 21

இடம்: சோலை (பூங்குன்றனார் இருக்கை)
காலம்: இரவு.
உறுப்பினர்: பூங்குன்றனார்.

[பூங்குன்றனார் படுத்திருக்கிறார். காமக்கண்ணியைப் பற்றிய எண்ணமே அவர் உள்ளத்தில் நிறைந்திருக்கிறது. அவருக்கு உறக்கம் வரவில்லை. எழுந்திருக்கிறார்; உலாவுகிறார்; மீண்டும் படுக்கிறார்; எழுந்திருக்கிறார்; உலாவுகிறார்.]

பூங்குன்றனார் : (மனம் பேசுகிறது) ஆ ஆ! என்ன அழகு! கவினொழுகும் அவள் திருமேனி என் கருத்தையெல்லாம்

கொள்ளை கொள்ளுகிறது. எப்பக்கம் திரும்பி னாலும் அவளுடைய திருவுருவமே என் கண் முன் நிற்கின்றது. மயிலினும் இனிய சாயல், மின்னலை வெல்லும் நுண்ணிடை, அன்னத்தை விஞ்சும் அழகு நடை, உள்ளத்தைக் குளிர்விக்கும் கொஞ்சு மொழி, வேலினும் கூரிய சேல் விழி—அந்தோ, இவைகளெல்லாம் ஒருங்கே என்னைக் கொல்லு கின்றனவே! கொல்லுகின்றனவே! இனி அவளை அடைந்தாலன்றி எனக்கு உய்வில்லை, ஆம், உய் வில்லை, காமக்கண்ணி! காமக்கண்ணி! (ஓடுகிறார்)

* * *

காட்சி: 22.

இடம்: காடு
காலம்: இரவு
உறுப்பினர்: பூங்குன்றனார்.

[பூங்குன்றனார் காமக்கண்ணியின் நினைவால் தன்னை மறந்து காட்டு வழியாகச் செல்கிறார். புயல்காற்று வீசுகிறது. இடி இடிக்கிறது. மின்னல் மின்னுகிறது. அவர் எதையும் பொருட்படுத்தாமல் காமக்கண்ணி மேல் காமம் மேலிட்டவராய்ப் போகிறார்.]

* * *

காட்சி: 23.

இடம்: காமக்கண்ணி மாளிகை
காலம்: இரவு
உறுப்பினர்கள்: காமக்கண்ணி, பூங்குன்றனார், பேகன், காவலோன்.

[காமக்கண்ணி தியானத்தில் ஆழ்ந்திருக்கிறாள். பிறகு எழுந்து படுக்கையில் படுக்கிறாள். பூங்குன்ற னார் காமவயத்தராய் ஓடி வருகிறார்.]

பூங்குன்றனார் : காமக்கண்ணி! காமக்கண்ணி!!

[படுக்கையினின்று திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள்.]

காமக்கண்ணி : யார்? முனிவரா? எம் பெருமானே! தாங்களா இங்கு வந்தீர்கள்? இடியும் மின்னலும் கடுமையாய் இருக்கும் இந் நள்ளிரவில் தங்கள் திருவடி நோக இங்கு வந்தீர்கள்?

பூங்குன்றனார் : இடியா? மின்னலா? நள்ளிரவா? எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே! உன்னைக் காண, கண்டு பேச, பேசி ஈடிலா இன்பமுற ஓடோடியும் வந்தேன் காமக்கண்ணி, ஓடோடியும் வந்தேன். வா,

அருகில்வா, இனி ஒரு நொடியும் உன்னைப் பிரிந்திருக்க முடியாது, கண்ணே, முடியாது,...உம் அருகில் வா

[நெருங்குகிறார். காமக்கண்ணி விலகிச் செல்கிறாள்.]

காமக்கண்ணி : என்ன பேசுகிறீர்கள் எம் பெருமானே? இறை மணங் கமழும் தமிழ் மறை பொழியும் தங்கள் திருநாவா இப் புல்லிய சொற்களைப் பேசுகிறது?

பூங்குன்றனார் : இறை மணமா? தமிழ் மறையா? இவற்றிலெல்லாம் இன்பமில்லை, கண்ணே இன்பமில்லை. கட்டழகு பொலியும் உன் திருமேனியிலே கரையிலா இன்பத்தைக் காண்கிறேன். வா, என் அன்பே, வா, தாமதிக்காதே.

[அவளைத் தழுவிக்கொள்ள முயல்கிறார். அப்போது காவலன் அவர் மீது அம்பு எய்கிறான். அது அவர் மார்பிலே பாய்கிறது.]

பூங்குன்றனார் : ஆ! ஐயோ!!

[கதறிக் கீழே விழுகிறார். காமக்கண்ணி திடுக்கிடுகிறாள்.]

[அவன் தலைகுனிந்து நிற்கிறான்.]

பூங்குன்றனர் : காவலோன் செய்தது தான் முறை. யான் இத்தனைக் காலம் ஆன்று அவிந்து அடங்கித் தூய்மைபடுத்திய என் துறவறவொழுக்கத்தை ஒரு நொடியில் அழித்து விட்டேன். யான் இனி இவ்வுலகில் இருக்கக் கூடாது. காவலோய், நீ உற்ற சமயத்தில் உதவி செய்தாய். நீ வாழி, ஆ! (இறக்கிறார்)

[பேகன் வருகிறான்.]

பேகன் : என்ன? என்ன நடந்தது? யார் இந்த முனிவர்?

காமக்கண்ணி : (வருத்தத்தோடு) இவர் தான் முனிவர் பூங்குன்றனர். இளமையிலே துறந்த முனிவர். என்னை மெய் நெறிப்படுத்திய அருந்தவப் பெருமான். திடீரென மனமாறி உள்ளத்தை என்பால் பறிகொடுத்து இங்கு வந்தார். காவலோன் கணை எய்தி அவரைக் கொன்று விட்டான். (அழுகிறாள்)

காவலோன் : அவர் நுழையும் போதே வாயிலில் அவரை நிறுத்தினேன். அவர் நில்லாமல் காமக்கண்ணியாரின் பெயரைச் சொல்லிக்கொண்டே இங்கு ஓடி வந்தார். வந்து அவர்களை வலிந்து அடைய முயன்றார். காமக்கண்ணியார் எவ்வளவோ தடுத்தார்கள். அவர் சிறிதும் பொருட்படுத்தாமல் அவர்களை அணுகினார். நான் அம்பை விடுத்தேன்.

காமக்கண்ணி : நான் அவருக்கு அறிவுறுத்தி அவர் உணர்ச்சியை மாற்ற முயன்றேன். அதற்குள் அம்பெய்து விட்டான்.

காவலோன் : மீறி இங்கு நுழைபவர்களை என் வேலுக்கோ அம்புக்கோ இலக்காக்கும்படி முன்பே எனக்கு ஆணையிட்டுள்ளீர்கள் மன்னவா! தங்கள் ஆணையைத்தான் நிறைவேற்றினேன்.

பேகன் : இப்படியெல்லாம் நேருமென்று யார் எதிர்பார்த்தார்கள்? இளமையிலேயே துறந்ததால் வந்த விளைவு இது. இல்லறத்தினின்று துறவறம் மேற்கொள்ள வேண்டுமேயன்றி முதலிலேயே நேரடியாகத் துறவறத்தைப் பற்றுவது இயற்கைக்கு முரணானது. இயற்கை வழி வாழ்வது தான் வாழ்க்கை. அவ் வாழ்க்கை தான் உயர்வு தரும். இம் முனிவர் இயற்கைக்கு முரணாக வாழ்ந்து, பலகாலம் கட்டுப்படுத்திய உணர்ச்சி இன்று அவரையும் மீறி வெளிப்பட்டுக் கொன்று விட்டது. என் செய்வது? விதியின் விளையாடல்!!

கையின் நிலைமையை நன்கு உணர்கிறேன். நமக்கு வருந் துன்பத்திற்கெல்லாம் காரணம் அவா, ஆசை, பற்று. இப்பேய்களால் பிடிபட்டு இத்துணைக் காலம் யான், உண்மையறியாது உழன்றேன். இனி பொன் வேண்டேன், பொருள் வேண்டேன் சுற்றம் வேண்டேன், ஒன்றும் வேண்டேன். பற்றை அகற்றிப் பற்றற்ற பரம்பொருளின் அருளை எய்த விழைகின்றேன்.

பேகன் : காமக்கண்ணி! உன் வாழ்க்கையிலிருந்து ஓர் உண்மை புலப்படுகிறது. நீ பல ஆண்டுகள் ஐம்புல இன்பங்களையும் ஆரத் துய்த்தாய். அதன் விளைவாய் அவ்வின்பங்களை வெறுத்து உயர் நெறியை மேற்கொள்ளுகிறாய். ஆனால் முனிவரோ இளமையிலிருந்து ஐம்புல ஆசைகளையும் அடக்கி ஒடுக்கி, இப்போது அவற்றிற்கு இரையானார். உலக இன்பங்களை நிறைபடத் துய்ப்பவனே முடிவில் உயர் நிலையை நாட முடியும்.

காமக்கண்ணி : இத்துணைக்காலம் அறியாமையில் மூழ்கி அரசியாருக்கு ஆற்றொணாத் துன்பம் கொடுத்து விட்டேன். அதை நினைந்து இப்போது என் நெஞ்சம் அழிகின்றேன். மன்னவா! தாங்கள் உடனே தங்கள் இன்னுயிர்த் துணைவியாரை அடைந்து, முன்போல் அவர்களை மகிழ்வித்து இன்ப வாழ்வு நடத்த வேண்டும். நானே தங்களை அழைத்துச் சென்று அவர்களிடம் தங்களை ஒப்படைத்து, மன்னிப்பு வேண்டினாலன்றி என் மனம் அமைதி பெறாது.

[முனிவர் இறந்து கிடப்பதைக் காண்கிறாள். பிணத்தை அணுகுகிறாள்.]

முனிவர் பெருமானே! என் அறியாமையை அகற்றி மெய்ஞானம் கொளுத்திய தங்களுக்கா இக் கதி நேர்ந்தது! அதுவும் என் பொருட்டாகத் தங்களுக்கு இந்நிலை வந்ததே! ஐயோ......! [அழுகிறாள்]

பேகன் : என்னுடைய அகக்கண்ணையும் நீ திறந்து விட்டாய் காமக்கண்ணி. கற்பின் கொழுந்தாய் விளங்குபவள் என் மனைவி கண்ணகி. அக் கற்பரசியை இத்துணைக்காலம் பிரிந்து அவளைக் கரையிலாத் துன்பத்துள் ஆழ்த்தி விட்டேன். யானும் அவளை அடைந்து மன்னிப்பு வேண்டினால் அன்றி என் மனம் அமைதி பெறாது.

(காமக்கண்ணி பாடுகிறாள்)

''பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'' (போகிறார்கள்.)

(முற்றும்.)

நூல் அரங்கு

பைந்தமிழ்ச் சாரதி பாரதியார்:

ஆசிரியர்: திரு. மு. வேங்கடசாமி எம். ஏ.,

விற்பனை உரிமை: பாரிநிலையம்,
59, பிராட்வே,
சென்னை-1,
பக்கம்: 164 விலை: ரூ. 2.75

அடிமை இருளில் ஆழ்ந்திருந்த தமிழக மக்களுக்குத் தம் உணர்ச்சி மிக்க பாடல்கள் வாயிலாகப் புத்துணர்வு ஊட்டி அவர்களை விழிப்புறச் செய்தார், சுப்பிரமணிய பாரதியார் அவர்கள். விடுதலை இயக்கத்தின் போது தமிழக மக்கள் அவருடைய பாடல்களைக் கேட்டு வீர உணர்ச்சி பெற்றனர். அவர் அரசியல் பாடல்களேயன்றிச் சமுதாயச் சீர்திருத்தம், பெண் ணுரிமை, காதல், பக்தி முதலியவைகளைப் பற்றிப் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிய முறையில் பல பாடல்களைப் பாடியுள்ளார். இப் பெருங் கவிஞரின் வாழ்க்கை வரலாற்றினை இந் நூல் சுவைபடக் கூறுகின்றது. இதுவரை நாம் அறியாத பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பல இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இவர் இளம் வயதிலேயே பாடல்கள் பாடவல்லவர் என்பதைச் சான்றுகளுடன் இந் நூலாசிரியர் எழுதியுள்ளார். வகுப்பில் ஒருநாள் தமிழாசிரியர் கேட்ட ஒரு கேள்விக்கு விடையளிக்கத் தெரியாமல் பாரதியார் விழித்தார். உடனே தமிழாசிரியர் அவரை நோக்கி ''மேகம் போல் நீர் கவிமாரி பொழிவதால் ஊரார் உம்மைப் புகழ்கிறார்கள். ஆனால் நீரோ கேட்ட கேள்விக்கு விடை தெரியாமல் விழிக்கிறீர்'' என்று எள்ளி நகையாடினார். அதைக் கேட்டதும் பாரதியார் ''மேகத்தின் இயல்புகூடத் தங்களுக்குத் தெரியவில்லையே. காளமேகம் தானே மழை பொழியுமேயன்றி, ஆசிரியரின் ஆணைக்கு அஞ்சி மழை பொழிவதில்லை'' என்று விடையளித்தார்.

பாரதியார் எட்டையபுரம் அரசவைப் புலவராக இருந்த போது, ஒருநாள் ஒரு புலவர் '' அண்ணாமலை ரெட்டியாரைப் போல இனி யாருமே காவடிச் சிந்து பாடமுடியாது'' என்றார். பாரதியார் இதைக் கேட்டு நகைத்து அன்று மாலைக்குள் காவடிச் சிந்து ஒன்றைப்பாடி அரசவைக்கு எடுத்துச் சென்று அரங்கேற்றினார். ''ரெட்டியாரின் காவடிச் சிந்து கல்லாதவருக்காகப் பாடப்பட்டது. ஆனால் கற்றறிந்த புலவரும் போற்றும் படியான புதுமைச்சிந்து பாரதியார் பாடல்'' என்று ஏனைய புலவர்கள் புகழ்ந்தனர். இது போலப் பல சுவையான நிகழ்ச்சிகளை இந்நூலில் காணலாம்.

பாரதியார் அரண்மனையில் கைகட்டி வேலை செய்வதை விரும்பாமல்விடுத்ததும், பின்பு சுதேசமித்திரன் துணையாசிரியராகப் பணியாற்றியதும், அரசியலில் ஈடுபட்டு இந்தியா முதலிய பத்திரிகைகளை நடத்தித் தீவிர வாதி

யாகத் திகழ்ந்ததும், புதுவை அடைந்ததும், வறுமையால் அவர் எய்திய துன்ப நிலையும், கடையத்தில் அவர் நிகழ்த்திய வாழ்க்கையும் ஆகிய இவையனைத்தையும் படிப்போர் உள்ளங்கவரும் வண்ணம் இந் நூலாசிரியர் விளக்கியுள்ளார்.. பாரதியார், நேர்மையும், அஞ்சா நெஞ்சமும் படைத்தவர் என்பதற்குச் சான்ருகப் பல நிகழ்ச்சிகள் இந் நூலில் கூறப்பட்டுள்ளன.

பாரதியாரின் குழந்தையுள்ளம், தாய்மொழிப் பற்று, இசைப்புலமை, பொழுது போக்கு, சீர் திருத்த மனப்பான்மை இன்னேரன்னவைகளும் இதன்கண் கூறப்பட்டுள்ளன. பாரதியாரின் குருமார்கள், அவருடைய நண்பர்கள் ஆகியோரைப் பற்றிய குறிப்புக்களும் இந்நூலில் உள்ளன.

ஒரளவு பாரதியாரின் முழு வாழ்க்கை வரலாற்றினை இந் நூல் உணர்த்துகிறது எனலாம். இந் நூலினை இத்துணைத் திறம்படவும், சுவைபடவும் ஆக்கித் தந்த தமிழ்ப் பேராசிரியர் திரு. மு. வேங்கடசாமி அவர்களின் அருந்திறன் பெரிதும் பாராட்டற்பாலது.

இலக்கிய நினைவுகள்:

ஆசிரியர்: டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்.,

விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1,

பக்கம்: 127, விலை: ரூ 1.50.

இந்நூல் பன்னிரண்டு இலக்கியக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கட்டுரையிலும் சுவை நிரம்பியுள்ளது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பயன்படுத்தியுள்ள அணிகளின் சிறப்பினை ''அடிகளும் அணி நயமும்'' என்ற கட்டுரை கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில் காணும் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கால் நின்ற மன்றம், பூத சதுக்கம், பாவை மன்றம் ஆகியவைகளின் நுட்பங்களை 'இளங்கோ மன்றம்' என்ற கட்டுரை விளக்குகிறது.

'இந்திரசித்தும் இலக்குவனும்' என்ற தலைப்புள்ள கட்டுரையில் இலக்குவன், இந்திரசித்து இவ்விருவர்தம் பகைமையையும், இலக்குவனின் தன்னலமற்ற தொண்டையும், வீரத்தையும், இந்திரசித்தின் பெரு வீரத்தையும், இவ்விருவர்களின் வீரத் தன்மைகளையும் இந் நூலாசிரியர் அழகுபட எடுத்தோதியுள்ளார். இராமன் வாலியின் மார்பில் விடுத்த அம்பு வாலியின் உயிர் இருக்கும்வரை அவன் மார்பை ஊடுருவிச் செல்லாமல் அங்கேயே தங்கிநின்ற காரணத்தைச் சுவைபட 'வில்லி' என்ற கட்டுரையில் ஆசிரியர் கூறுகிருர். எவ்வாறு தொட்ட இடமெல்லாம் உவமையாகக் காட்சியளிக்கிருர் கம்பர் என்பதைக் 'கம்பர் காட்டும் உவமை நயம்' என்ற கட்டுரையும், எழிலும் ஏற்றமும் பெற்ற கண்களைக் கம்பன் தன் காவிய ஓவியத்தில் பாடிய சிறப்பினைக் 'கம்பன் காட்டும் கண்கள்' என்ற கட்டுரையும் எடுத்து இயம்புகின்றன. இந் நூலில் உள்ள கட்டுரைகளில் பல கம்ப இராமாயணத்தைப் பற்றியனவாக உள்ளன. அவைகள் அனைத்தும் கம்பருடைய பாடல்களின் நுட்பங்களை எடுத்தோதி நம் இதயங்களை உவகைக் கடலுள் ஆழ்த்துகின்றன.

பாரத பாகிஸ்தானிய எல்லைப் பூசல்

-லே- "கமல்"

'ஒரு நாட்டின் இறைமைக்குட்பட்ட பகுதியினை வலியக் கைப்பற்றிக் கொள்வது, பிறகு அப்பகுதியைப் பூசலுள்ள பகுதி என்று பிதற்றுவது, தாக்குதலைத் தடுக்கத் தாக்கப்பட்ட நாடு முயலும் பொழுது அந்நாட்டை பேராதிக்க வெறி பிடித்த நாடு என்று தூற்றுவது' என்ற வித்தை சீனர்களுக்கே ஆகி வந்தது என்பது பொய்யாகி அதே வித்தையை இன்னும் சிறப்பாக சீனவையும் மிஞ்சக் கூடிய அளவுக்கு செய்து காட்ட முடியும் என்று பாகிஸ்தான் மெய்ப்பித்து விட்டது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் பகுதிகளாக இருந்த பாரதமும் பாகிஸ்தானும் இவ்வாறு பகைமை கொண்டுள்ளது வருந்தத்தக்க செய்தியாகும். இந்தியத் துணைக் கண்டத்திற்கு சீனர்களினால் ஏற்பட்டுள்ள ஆபத்தினை இவ்விரு நாடுகளும் சேர்ந்து செயலாற்றுவதன் மூலம் தவிர்க்க முடியும். ஆனால் பாகிஸ்தானோ சீனாவோடு உறவாடுவதன் மூலம் தனது உரிமையை இழந்தாவது அண்டை நாடான பாரதத்தின் முன்னேற்றத்தைத் தடைச் செய்ய விரும்புவது போலத் தோன்றுகிறது. உருவான நாள் முதலே இந்தியாவின் மீது பகைமை காட்டி வரும் பாகிஸ்தான் மேற்கு இந்தியாவில் 35,000 மைல்களுக்கு உரிமை கொண்டாடுகிறது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் கண்டு பொறாமை கொள்ளும் பாகிஸ்தான் அம் முன்னேற்றத்தைத் தடை செய்யவும், ஜனநாயக அரசாங்கம் வேண்டுமென்று கலகம் செய்யும் பாகிஸ்தான் மக்களின் நாட்டத்தை வேறு வழியில் திருப்பவும் இந்தியாவின் மீது படையெடுப்பதோடு இந்தியா தன்னைத் தாக்குவதாகவும் பொய்யுரைத்து உலக நாடுகளின் அனுதாபத்தினைப் பெற முயற்சிக்கின்றது.

சிந்து-கட்ச் எல்லையின் வரலாறு :

சிந்து மாநிலத்திற்கும் கட்ச் தீவிற்கும் இடையிலுள்ள 9000 சதுர மைல்கள் பரப்பளவுள்ள 'கட்ச்ரண்' (Rann of Kutch) பகுதி பூமி மட்டத்திற்கு 600 அடி கீழே இருப்பதனால் பல மாதங்களுக்கு இப்பகுதி நீரினுள் அமிழ்ந்து விடுகிறது. எனவே இப்பகுதியில் தாவரங்களோ, மிருகங்களோ, அல்லது மனிதர்களோ வாழ்வது கடினம். ஆயினும் மூன்றாண்டுகளுக்கு முன்பு சீனர்கள் லடாக் (Ladakh)

பாகிஸ்தானியர் இக்காரியத்தைச் செய்துள்ளனர். 1907-ம் ஆண்டில் வெளியிடப் பெற்ற சிந்து மாகாண கெஜட் அறிக்கையும் 1908-ஆம் ஆண்டில் ஆங்கில அரசுச் செயலர் (Secretary of State) அறிக்கையும் சிந்து மாகாணத்தின் தென்கிழக்கு எல்லை, கட்ச்ரண் பகுதி என்று கூறுகிறது. 1928, 1936, 1945-ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பெற்ற தேசப் படங்களெல்லாம் கட்ச்ரண் பகுதியைச் சிந்து மாநிலத்திற்கு வெளியில் காட்டுகின்றன. விடுதலை பெறுவதற்கு முன்பு சிந்து மாகாணம் ஆங்கிலேயருடைய நேரடி ஆட்சியிலும் கட்ச்ரண் பகுதி கட்ச் மன்னரின் ஆட்சியின் கீழும் இருந்தது. விடுதலைக்கும் பிரிவினைக்கும் பிறகு சிந்து பாகிஸ்தானோடும், கட்ச் இந்தியாவோடும் இணைந்தது. பிரிவினைக்கு முன்பு கட்ச்ரண் பகுதி பற்றி ஆங்கிலேயர்களுக்கும் கட்ச் அரசருக்கும் பூசல் இருந்ததில்லை. எனவே அப்பகுதியை பூசலுள்ள பகுதி என்று பாகிஸ்தானியர் பிதற்றுவதில் பொருளில்லை.



இந்தியாவும்:

கட்ச் சுதேச அரசு (Princely State) இந்தியாவோடு இணைந்த காலம் முதல் கட்ச்ரண் பகுதியும் இந்தியாவிற்குச் சொந்தமாயிற்று. எப்பூசலையும் ஆயுத உதவி மூலம் தீர்க்க முடியாது என்று கருதும் இந்தியா பாகிஸ்தானை முறியடிக்கத் தகுந்த வலிமை பெற்றிருந்தும் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள விரும்பியது. இதற்கு உடன்பட மறுத்த பாகிஸ்தான் ஏப்ரல் 13 ஆம் நாளன்று மூன்று யோசனைகளைத் தெரிவித்தது. (1) போர் நிறுத்தம் (2) போருக்கு முந்திய நிலை எவ்வாறு இருந்தது என்பதை முடிவு செய்வது (3) மேல்மட்டப் பேச்சு வார்த்தைகள். இந்த யோசனைகளுக்கு இந்தியா உடன்பட்ட பொழுது தன்னுடைய யோசனைகளையே பாகிஸ்தான் புறக்கணித்தது. ஏப்ரல் 24ஆம் தேதியன்று அந்நாடு ஆக்கிரமித்திருக்கும் நம்முடைய பகுதியைப் பூசலுள்ள பகுதி (Disputed Territory) என்று கூறி அப்பகுதியிலிருந்து நாம் வெளியேற வேண்டுமென்று கோரி அதனையே வலியுறுத்தி வருகிறது. சுருங்கக் கூறின் பேச்சு வார்த்தைகளின் மூலம் சிக்கலைத் தீர்த்துக்கொள்ள பாகிஸ்தான் விரும்பவில்லை.

கட்ச்ரண் பகுதியும் பாகிஸ்தானும்:

சென்ற சில மாதங்களாகவே எல்லையில் பாகிஸ்தானியர் தாக்குதல்கள் நிகழ்த்தி வந்திருக்கின்றனர். ஆனால் கட்ச்ரண் பகுதியில் உள்ள கஞ்சர்கோட்

பாகிஸ்தானியர் கைப்பற்றித் தங்கள் தளங்களை அமைத்த பிறகு இத்தாக்குதல்கள் முக்கிய நிகழ்ச்சிகளாயின. இதுவரை எல்லைப் பாதுகாப்புப் படையிடமிருந்த எல்லை காக்கும் பொறுப்பு இந்திய இராணுவத்திடம் கொடுக்கப்பட்டது. பாகிஸ்தான் பின்வரும் அடிப்படைகளில் இப்பகுதிக்கு உரிமை கொண்டாடுவதாகக் கூறுகிறது. (1) 1762-ல் சிந்து மன்னர் ஒருவர் கட்ச்ரண் பகுதியின் மீது படையெடுத்திருக்கிறார். (2) 1875 ஆம் ஆண்டில் சிந்து மாகாண அதிகாரி ஒருவர் கட்ச்ரண் பகுதியின் மத்தியிலுள்ள தரம்சாலா (Dharam Sala) தான் சிந்துவின் எல்லை என்று கூறியிருக்கிறார். (3) கட்ச்ரண் பகுதி நான்கு புறமும் நிலத்தால் சூழப்பெற்ற கடல் (Inland Sea) என வே[illegible]ச[illegible]ர்வதேச

இதிப்படி பாதிப்பகுதி பாகிஸ்தானைச் சேர்ந்தது. ஆனால் பாகிஸ்தானின் பொருளற்ற காரணங்களுக்கு இந்தியா தகுந்த முறையில் பின்வருமாறு பதில

[illegible] (1) சிந்து மன்னன் படையெடுத்தாலும் அவனுடைய மகனுடைய ஆட்சிக் காலத்தில் கட்ச்ரண் பகுதியில் இருந்த படை திருப்பியழைக்கப் பட்டுவிட்டது. (2) பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் கட்ச்ரண் முழுவதும் கட்ச் அரசருக்குச் சொந்தம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறது. (3) கட்ச்ரண் பகுதி ஒரு உப்பளர் சதுப்பு நிலப்பகுதியே தவிர கடலல்ல. இரினம் (Irinam) என்ற சமஸ்கிருத சொல்லிலிருந்து வரும் ரண் (Rann) என்ற சொல்லுக்கு உப்பளர் பூமி (Swamp) என்று பொருள்.

கட்ச்ரண் பகுதியும் கம்யூனிஸ்டுகளும்:

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பிற்கு முழு ஆதரவு தெரிவித்துள்ள நாடு சீனா என்பதில் ஆச்சரியப் படுவதற் கொன்றுமில்லை. சீனாவின் வித்தையையே பாகிஸ்தானும் பின்பற்றுகிறது என்று நாம் முன்பே கண்டோம். இந்தியாவின் மீது பகைமை என்ற ஒரே அடிப்படையில் கூட்டு சேர்ந்த சீனாவும் பாகிஸ்தானும் இணைந்து தான் இவ்வாக்கிரமிப்பை முடிவு செய்திருக்க வேண்டுமென்று கூற வாய்ப்புண்டு. வட வியட்நாமில் அமெரிக்காவை எதிர்த்து நிற்க முடியாத சீனா கட்ச்ரண் பகுதியில் அக்கறை கொள்வது எள்ளத் தக்கது. சீனாவும் பாகிஸ்தானும்

இந்தியாவுக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி அதனுடைய கூட்டுச்சேராக் கொள்கையைத் துறக்கச் செய்வதோடு அமெரிக்காவோடு சேரச்செய்து இரஷ்யாவிற்கும் இந்தியாவிற்கும் பகைமை ஏற்படுத்த அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் இரஷ்யாவோ கட்ச்ரண் பகுதியில் இந்தியாவின் நிலையை முழுவதும் ஏற்றுக் கொண்டுள்ளது. பாகிஸ்தான் தன்னை மண்டலச் சார்பற்ற நாடு என்று கூறிக் கொள்ள அதிபர் அயூப்கான் இரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் விஜயம் செய்ய விரும்பினார். அவர் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்காமல் போனமையும் அவருடைய அமெரிக்க வருகை தள்ளிப் போடப் பெற்றமையும் நோக்கத்தக்கது.

கட்சரண் பகுதியும் மேற்கு நாடுகளும்:

காமன்வெல்த் நாடுகள் என்ற முறையில் இங்கிலாந்தும் நட்பு நாடு என்ற முறையில் அமெரிக்காவும் கட்ச்ரண் எல்லைச் சிக்கலில் அக்கறை கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கிலாந்தோ அமெரிக்காவை விட இரு நாடுகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நாடாகும். அமெரிக்காவும் இங்கிலாந்தும் பாகிஸ்தானோடு இராணுவக் கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன. கூட்டுச் சேர்ந்துள்ள பாகிஸ்தானுக்கும், கூட்டு சேராத இந்தியாவிற்கும் இரு நாடுகளும் ஆயுத உதவி அளித்திருக்கின்றன. ஆனால் கூட்டு சேர்ந்துள்ள நாடு என்ற முறையில் அந்நாடுகளின் அனுதாபம் பாகிஸ்தானுக்குத் தான் மிகுதியாக இருக்க முடியும். காஷ்மீர்ச் சிக்கலில் அவர்களுடைய நிலை இதனைத் தெள்ளத் தெளிய விளக்கும். ஆயினும் பாகிஸ்தான் சீனாவோடு உறவாடுவதையும் அண்டை நாடான இந்தியாவோடு பகைத்துக்கொள்வதையும் அவர்கள் விரும்பவில்லை. ஆசியாவில் கம்யூனிசம் பரவாமல் தடுக்க இந்தியாவின் உதவி அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது. இவ்விரு நாடுகளும் பகைமை கொண்டிருப்பது அவர்களுக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்துகின்றது. இந்நிலையில் தான் இந்தியப் பிரதமர் சாஸ்திரியின் அமெரிக்க விஜயமும் அயூப்கானின் விஜயமும் ஒத்திப் போடப் பெற்றன. இங்கிலாந்துப் பிரதமர் ஹெரால்டு வில்சன் இரு நாடுகளையும் போர் நிறுத்தம் செய்யுமாறு வேண்டிக் கொண்டுள்ளார். இரு நாடுகளும் பெயரளவில் அவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வில்சன் யோசனைகளும் இந்திய-பாகிஸ்தான் நிபந்தனைகளும்:

பிரதமர் வில்சனின் யோசனைகளுக்கு முதலில் செவி சாய்த்தது இந்தியாவானாலும், 1964 டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முந்தியுள்ள நிலைமை (Status Quo Ante) கொண்டு வரப்பட்டால் தான் யோசனைகளுக்குப் பணிவதாக இந்தியா கூறியது. இந்தியப் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிலர் வில்சனின் யோசனைகள் பாகிஸ்தானுக்கு நன்மைகள் அளிக்கக் கூடியது என்று கூறினர். ஆனால் இந்தியா இதுவரை கூறிவந்த யோசனை

களையே வில்சனுடைய வேண்டுகோளும் கூறுகிறது. நம்முடைய நிபந்தனை நிறைவேற்றப்படவில்லை என்றால் நாம் அவருடைய வேண்டுகோளை ஏற்க வேண்டியதில்லை. இந்தியாவிற்கு வரலாறு துணை நிற்கின்றது. மேலும் 1947க்கு முன்பு இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள் உண்மையான எல்லை எது என்பதனை அறிவார்கள். வில்சனின் வேண்டுகோளுக்குப் பாகிஸ்தானும் சில நிபந்தனைகளை வேண்டுகிறது. அண்மையில் அந்நாடு கைப்பற்றிய பியார்பெட் (Piarpet) பகுதியை விட்டு வெளியேற மறுக்கிறது, கஞ்சர்கோட் பகுதியை மட்டும் விட்டு விடுவதாகக் கூறுகின்றது. இந்நிலையில் அமெரிக்காவும் இங்கிலாந்தும், காஷ்மீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதினால் தான் இதுபோன்ற பூசல்கள் ஏற்படுகின்றன என்று கூறுகின்றன.

கட்ச்ரண் பகுதி மனிதர்கள் வசிக்க அருகதையற்ற இடமாகும். காட்டுக் கழுதைகளைத் (Wild Asses) [illegible] வேறு மிருகங்களை அங்குக் காணுவது அரிது. அம்மிருகங்களும் கடல் நீர் உட்புகுந்தவுடன் மேட்டை நோக்கி முன்னேறுகின்றன. ஆயினும் பாகிஸ்தானியர் ஆக்கிரமிப்பிற்கு இப் பகுதியை ஏன் தேர்ந்தெடுத்தன என்று நாம் காண வேண்டும்.

(இதே போன்று மூன்று வருடங்களுக்கு முன்பு லடாக் பகுதியை சீனர்கள் தேர்ந்தெடுத்தனர்) முதலாவதாக அயூப்கான் உள்நாட்டில் தனது செல்வாக்கை நிலைநாட்ட விரும்புகிறார். அடுத்த மாதம் நிகழவிருக்கும் ஆசிய ஆப்பிரிக்க மாநாட்டில் இந்தியாவைக் குற்றஞ் சாட்ட இது போன்ற நிகழ்ச்சி அவருக்குத் தேவையாக இருக்கிறது. கட்ச்ரண் பகுதியில் இயற்கை வாயு (Natural Gas) கிடைக்கக் கூடுமென்று நம்பப்படுகின்றது. கட்ச்ரண் பகுதியில் நீர் உட்புகுந்தவுடன் பாகிஸ்தானியர், இந்தியர் அங்கு வாழும் கழுதைக் கூட்டங்கள் அனைத்தும் மேட்டை நோக்கி ஓட வேண்டும். என்பதால் இப்போரை மலட்டுப் போர் (Barren Battle) என்று எகானமிஸ்டு (The Economist) பத்திரிகை குறிப்பிட்டது குறிப்பிடத் தக்கது.

இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவைவ் ஒரே நிமிடத்தில் கணக்கிடக் கூடிய புதுமையான ஒரு வகை இரசாயனத்தாள் தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலக வானிலை அறிக்கை.

வானிலை முன்னறிவிப்புக்கள் உலகிற்கு மிகவும் இன்றியமையாதன. வானிலை அறிவியல் அறிவு, கடந்த பல நூற்றாண்டுகளாகச் சிறிது சிறிதாக வளர்ந்து வீந்துள்ளது. மனிதன் செயற்கைக் கோளைக் கண்டுபிடித்துப் புறவெளியை வெற்றி கொண்ட பொழுது வானிலை அறிவியலில் ஒரு புதுத்திருப்பம் ஏற்பட்டது. வானிலை அறிக்கை நிலையங்கள் காற்று மண்டலத்தின் வெப்பதட்ப நிலைகளைப் பற்றி அன்றாடம் சேகரிக்கும் செய்திகளைக்கொண்டு இதுவரையில் வானிலை அறிக்கைகள் வெளியிடப் பெற்றன. ஆனால், இவைகள் அவ்வளவாகப் பயன்படவில்லை. ஏனெனில் வானிலை முன்னறிவிப்புக்கள் சில வேளைகளில் சரியாக இருக்கவில்லை. இதற்குக் காரணம் பரந்த கடற்பரப்புக்களின் மீதும், பனிமூடிய துருவப் பிரதேசங்களின் மீதும் உள்ள வானிலையை அறிவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

1960-ல் அமெரிக்கா டைரோஸ் என்னும் வானிலைச் செயற்கைக் கோள் (Weather Satellite) ஒன்றை விண்ணில் ஏவியது. அதற்குப் பின்பு கடந்த ஐந்து ஆண்டுகளில் 9 டைரோஸ்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன. இந்த 9 கோள்களில் டைரோஸ்—7, 8, 9, ஆகிய மூன்றும் இன்னும் வானவெளியில் பணியாற்றி வருகின்றன.

பூமியிலும் கடற்பரப்புக்களிலும் ஒரு சில வானிலை ஆய்வுநிலையங்களே அமைக்கப் பட்டுள்ளன. இவைகளால் உலகம் முழுவதையும் கண்காணிக்க முடிவதில்லை. ஆனால், டைரோஸ் செயற்கைக் கோள்கள் விண்ணில் சுற்றி வருவதால் அவைகளால் உலகம்

முழுவதையும் எளிதாகக் கண்காணிக்க முடிகிறது. இதில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் புறவெளியில் கவிந்துள்ள மேகங்களைப் படம் எடுக்கின்றன. மேலும் இந்தச் செயற்கைக் கோள்கள், தரையிலும் கடலிலும் அமைக்கப்பட்டுள்ள வானிலை நிலையங்களிலிருந்து வானிலைச் செய்திகளைப் பெறுகின்றன. இச் செய்திகளெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டுப் பூமியிலுள்ள கணக்கிடும் நிலையங்களுக்கு அஞ்சல் செய்யப்படுகின்றன. இந் நிலையங்கள் இச் செய்திகளையெல்லாம் நன்கு ஆய்ந்து வானிலை முன்னறிவிப்புக்களை வெளியிடுகின்றன.

இம் முறையில், அமெரிக்கா கடந்த ஐந்து ஆண்டுகளில் 2100-க்கும் மேற்பட்ட புயல் அறிவிப்புக்களை 50 நாடுகளுக்கு வழங்கியுள்ளது. செயற்கைக் கோள்கள் புயல்களின் தோற்றம், போக்கு, ஆற்றல் முதலியவைகளை வழக்கமான பழைய முறைகளைக் காட்டிலும் மிக விரைவாகக் கண்டுபிடித்து விடுகின்றன. இவைகளின் உதவியால் உலகின் எப்பகுதியில் தோன்றக் கூடிய வானிலையையும் இரண்டு வாரங்களுக்கு முன் கூட்டியே அறிவிக்க முடியும்.

இக்கட்டுரையின் முகப்பில் காணப்படும் படம் ஒரு குறிப்பிட்ட நாளில் உலகம் முழுவதும் வானிலை எவ்வாறு இருந்தது என்பதைக் காட்டுகிறது. 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் நாள் முழுவதும் (24 மணி நேரத்தில்) டைரோஸ்-9 என்னும் செயற்கைக்கோள் உலகம் முழுவதையும் சுற்றி 450 வானிலை படங்களை எடுத்தது. இப் படங்கள் அனைத்தையும் உலகப் படத்தில் சரியான இடத்தில் பொருத்திப் பார்க்கும் பொழுது அந்தக் குறிப்பிட்ட நாளில் உலகம் முழுவதிலும் வானிலை எவ்வாறு இருந்தது என்பது புலனாகும். இப் படங்களைக் கொண்டு வானிலை அறிவியல் வல்லுநர்களால் எதிர்கால வானிலையையும் எளிதாக ஊகித்தறிவிக்க முடியும்.

இது செய்தி

கென்னடி முனை, மே—6.

பூமியைச் சுற்றி 4 மாறுபட்ட விதங்களில் சுற்றவும், 2 சிறு செயற்கைக் கோள்களைப் பறக்க விடவும் சோதனை முறையில் புதுவித ராக்கெட் ஒன்றை அமெரிக்கா விண்வெளியில் செலுத்தியுள்ளது.

இந்தச் சோதனை வெற்றிபெறுமாயின் விண்வெளி ஆராய்ச்சியை உளவறியும் நடவடிக்கை, இராணுவ நடவடிக்கை ஆகியவைகளுக்குப் பயன்படுத்துவது எளிதாகும்.

மாசுகோ, மே—13.

நிலவுக்கு ரஷ்யா அனுப்பிய லூனா–5 என்ற வானவெளிக் கூண்டின் பயணம் வெற்றி பெறவில்லை.

பீகிங், மே—14.

சீனா இன்று தனது இரண்டாவது அணுகுண்டை வெடித்துச் சோதனை நடத்தியது. நாட்டின் தற்காப்புக்காகவும், அமெரிக்காவினால் ஏற்படக்கூடிய ஆபத்தைச் சமாளிக்கவுமே அணு ஆயுதச் சோதனையில் இறங்கியதாகச் சீனா தெரிவித்துள்ளது.

கலைக்கதிர் வெளியீடுகள்:

	விலை ரூ. கா.	அஞ்சல்செலவு ரூ. கா.
பிராங்கு லாய்டு ரைட்	3—00	0—60
சக்கரங்கள் சுழல்வதேன்	3—00	0—60
வான்வெளி	2—00	0—50
உதிரிப்பூ	1—00	0—25
பூவும் கனியும்	0—70	0—25
கானல் வரி	6—25	0—60
சமணத் தமிழ் இலக்கிய வரலாறு	3—00	0—30
குலசேகரர்	3—00	0—30
கொக்கோரோ	1—00	0—25
ஆற்றலோ ஆற்றல்	3—50	0—30
மண்ணிலும் விண்ணிலும்	2—50	0—30
நாமும் விஞ்ஞானிகளாவோம்	11—25	0—65
எலெக்ட்ரான்	4—25	0—60
அடிசிற்கினியாள்	2—25	0—30

கலைக்கதிர் சந்தா விவரம்

	உள்நாடு (இலங்கை உள்பட)	வெளிநாடு
ஆண்டுச் சந்தா	ரூ. 7—00	ரூ. 10—00
2 ,, ,,	ரூ. 13—00	ரூ. 19—00
½ ,, ,,	ரூ. 3—00	
தனி இதழ்	ரூ. 0—66	ரூ 1—00

கலைக்கதிர் வெளியீடுகளுக்கும், வியாபாரிகளுக்கும், கல்வி நிலையங்களுக்கும் கழிவு உண்டு. விவரங்களுக்கு எழுதுக.

கலைக்கதிர், அஞ்சற்பை எண் 531, கோவை-1.

THE PIONEER TEXTILES,

RANGASWAMI NAGAR, VEDAPATTI.

WORKS:	*OFFICE:*
VEDAPATTI	PEELAMEDU
Phone: 4155	*Grams:* "FARMTEX" COIMBATORE
	Phone: 4144

★

SPINDLES: 12,312

★

Manufacturers of:

Nf. 52 & Nf. 68 Cotton Yarn.

A LEADING HOUSE IN THE LINE
IN SOUTH INDIA

Telegrams: "RANGAVILAS" Telephones: { 2536 2537

Sri Ranga Vilas
Ginning, Spinning & Weaving Mills Limited

(Incorporated in 1922)

PEELAMEDU P. O., :: COIMBATORE-4.

Spinners of Superior kinds of:

HANK YARN from Nf. 2 to Nf. 84 (2s to 100s) Counts

and

CONE YARN from Nf. 17 to Nf. 68 (20s to 80s) Counts

Managing Agents :

P. S. G. & SONS.

தரத்திலும், உறுதியிலும்
நீடித்து நிற்கக் கூடியவை!
PSG
தயாரிப்புகள்
டீசல் என்ஜின்
இதர தயாரிபபுகள்:
மோட்டார்கள்
லேததுகள்
பேலிங் பிரஸ்
லெபாரெடடரி
கருவிகள்
பம்பு செட்டு
P.S.G. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்
பீளமேடு, கோயமுத்தூர்-4

Regd. No. M 5306 KALAIKATHIR June 1965
(Registered as a Newspaper in Ceylon)

Printed at Kalaikathir Achchagam, Avanashi Road, Coimbatore-1.